www.alhasanath.lk
Design: Sinan


# அல்ஹஸனாத்


الحسنات إسلامية شهرية تصدرها الجماعة الإسلامية السريلانكية

மலர்: 39 இதழ்: 10 ஒக்டோபர் 2013 துல் ஹிஜ்ஜா 1434

## அமெரிக்காவின் ஆதிக்க அரசியல்

—நோம் சொம்ஸ்கி—






## நபிவழியில் தியாகப் பெருநாள்!

## பேரருளாக நினைவுகூரப்படும் தலைவர்...

50/- ISLAMIC MONTHLY இஸ்லாமிய இலட்சியக் குரல்



அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க புதிய தலைப்புக்களுடன்

Colombo, Batticaloa & Kandy இல்

# How To Develop Your Business

(தமிழ் மொழி மூலமான கருத்தரங்கு)

உங்களது வியாபாரத்தை தலைசிறந்ததாக மாற்றியமைக்கப்போகும் வழிகாட்டல் கருத்தரங்கு

**The Seminar That Will Take Your Business From Good To Great**

---

வாடிக்கையாளர்களை கவர்வதன் மூலம் ஒரு நிரந்தர வாடிக்கையாளர் தளத்தை உருவாக்குதல்.
ஊழியர்களை முறையாக வழிநடத்தலும் அவர்களிடமிருந்து உச்ச பயனைப் பெறலும்.
தலை சிறந்த வியாபாரிக்குரிய பண்புகளை வளர்த்துக் கொள்ளல்.
வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்தல்
புதிய வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தல்.
புதிய வியாபார வாய்ப்புக்களை இனம் காணல்.
தாங்கள் இல்லாத போதும் வியாபாரம் முறையாக நடைபெற ஒழுங்கு செய்தல்.
தற்கால வியாபாரத்தில் உள்ள சவால்களை எதிர் கொள்ளல்.

---

விரிவுரை
Trainer & Consultant
**Fazir Mohideen**

MBA (UK), IAB (UK), ACS (TMI-USA),ALB (TMI-USA), CIMA (FINALIST)
CHAIRMAN
Universal Trainers & Consultant- Kandy
Wesswood Business College - Kandy
Loyal Ladies' College - Polgolla
Wesswood International Boys' College - Katugastota

---

FAZIR MOHIDEEN அவர்களின் Seminar எனது தனிப்பட்ட வாழ்விலும் வியாபாரத்திலும் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையையும் ஆர்வத்தையும் தந்தது.

(AMEER - ANURADAPURA)

எனது வியாபாரத்தை அடுத்த கட்டத்துக் கொண்டு செல்வதற்குத் தேவையான ஆர்வத்தையும் ஆசையையும் தூண்டியதுடன் ஒவ்வொருவருக்கும் உள்ளேயுள்ள திறமைகளையும் ஆற்றல்களையும் அடையாளம் காண்பதற்கும் அதனை வெளிக் கொண்டு வருவதற்கும்அவர் தூண்டுகிறார்

(RAJKUMAR - KANDY)

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் முழுவதும்" அதன் படி FAZIR MOHIDEEN அவர்களின் Seminar மூலம் நான் பெற்ற பயனை ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளமக்கள் பெற வேண்டும்.அதற்கமைய இந்த Seminar ஒவ்வொரு மாவட்டத்திலும் நடாத்தப்பட வேண்டும்.

(MAHESHWAREN - TRINCOMALEE)

FAZIR MOHIDEEN அவர்களின் Seminar Practical Wisdom நிறைந்ததாகவும் மேலும் எமது வாழ்கையையும் வியாபாரத்தையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்கும் வழி கோலும்

(JAMSHEED - COLOMBO')

Colombo 06:10:2013 ஞாயிற்றுக் கிழமை Hotel Renuka No. 328, Galle Road, Colombo 03.

Batticaloa 13:10:2013 ஞாயிற்றுக் கிழமை Hotel Bridge View No:63/24 New Dutch Bar Road, Kallady, Batticaloa.

Kandy 27:10:2013 ஞாயிற்றுக் கிழமை Hotel Oak-Ray Regency No: 09, Devani Rajasingha Mawatha, Gatambe, Kandy

Investment : Rs. 5000/= Only (Include Morning Snacks, Lunch, Evening Snacks)

நேரம் : காலை 8:30 - மாலை 5:30

**Universal Trainers & Consultants**

544, Peradeniya Road Kandy TEL : 0777 860321

We Create Dreamers, Achievers & Winners

بسم الله الرحمن الرحيم

"எவன் என்னுடைய திக்ரை (நல்லுபதேசத்தை) புறக்கணிக்கின்றானோ, அவன் நெருக்கடியான வாழ்க்கைக்கு உட்படுத்தப்படுவான். மேலும், மறுமையில் அவனை நாம் குருடனாக எழுப்புவோம்."

(ஸூரத்து தாஹா: 124)


மலர்: 39 இதழ்: 10

2013 ஒக்டோபர் துல்ஹிஜ்ஜா: 1434

ISSN : 1391 - 460X


**விலை விபரம்:**

**உள்நாடு**

தனிப் பிரதி: ரூபா 50.00

வருட சந்தா: ரூபா 800.00

ஆறு மாதம்: ரூபா 400.00

**வெளிநாடு**

இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு,
சிங்கப்பூர்: 2250.00
மலேசியா: 2300.00

மத்திய கிழக்கு நாடுகள்: 2350.00

அவுஸ்திரேலியா, ஜப்பான்,

தென் கொரியா: 3000.00

இங்கிலாந்து, நியூசிலாந்து: 3700.00

ஐக்கிய அமெரிக்கா, கனடா: 4300.00

• • •


**வெளியீடு:**

**இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி**



**தொடர்புகளுக்கு:**

அல்ஹஸனாத்

77, தெமடகொட வீதி, கொழும்பு-09, இலங்கை

தொலைபேசி :(011) 2689324, தொலைநகல் :(011) 2686030

மின்னஞ்சல்: alhasanath@gmail.com

இணையதளம்: www.alhasanath.lk



அல்குர்ஆன் விளக்கம்

**புறக்கணிப்பு ஏற்படுத்தும் நெருக்கடிகள்**

4-5

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர்

அல்ஹதீஸ் விளக்கம்

**குர்பானை குர்பான் கொடுத்து விடாதீர்; அது ஒரு நற்கிரியை**

6-8

அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி)

த்:வா களம்

**பேரருளாக நினைவுகூரப்படும் தலைவர்**

9-12

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

**மாலைதீவு** 13-14




**வஹியின் வருஷிப்பில்** 25-26

ஹஃப்ஸா பின்த் உமர் (ரழியல்லாஹு அன்ஹா)

அந்நிஸா

**பேனாமுனைச் சந்திப்பில்...**

23-24

| | |
|---|---|
| இறை மறையுடன் | (34-35) |
| நபி வழியில் தியாகப் பெருநாள் | (36-39) |
| ஜம்இய்யா | (40-41) |
| சுவனம் வரை பயனளிக்கும் கல்வி | (49-50) |
| வாசகர் மடல் | (53) |


அல்ஹஸனாத் இதழுக்கு சந்தாக்கள் அனுப்ப நாடுவோர் ALHASANATH என்ற பெயருக்கு Money Order எடுத்து தபாலகம் DEMATAGODA எனக் குறிப்பிட்டு அனுப்பவும். வங்கியில் வைப்பிலிட நாடுவோர் Srilanka Jamath - E-Islami AC NO: 1320009182, Commercial Bank, Maradana அல்லது Srilanka Jamath - E-Islami AC NO: 372132, B.O.C, Maradana எனும் வங்கிக் கணக்கில் குறித்த தொகைப் பணத்தை வைப்பிலிட்டு பற்றுச்சீட்டை அனுப்பவும்.

In Kandy

# Teacher Training

நீங்களும் சர்வதேச தரம் வாய்ந்த ஆசிரியர் ஆக விரும்புகிறீர்களா?

- DIPLOMA IN TEACHER TRAINING (AMI Method)
- DIPLOMA IN CHILD PSYCHOLOGY
- ENGLISH (TOEIC-USA)

HOTLINE: 0777 44 62 52

சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 03 தகைமைகளை பெற்றுக்கொள்ள முடியும்

**Why Teacher Training @ GC Campus**

- தகைமையும் அனுபவமும் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்கள்
- AMI கருவிகள் மூலமான பயிற்சி
- சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள்
- இலவச ஆங்கில பாடநெறி

Duration 06 Months ( on sundays )

**Target Group**

- மாணவர்கள் O/L & A/L
- தொழில் தேடுனர்கள்
- International School Teachers
- வெளிநாடு செல்ல எதிர்பார்த்திருப்போர்
- சொந்தமாக Montessori ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்திருப்போர்

சிறந்த உயர்கல்விக்கு or தொழிலுக்கு உங்களை தயார்படுத்தும்...

# Real Access Programme

**1 Designing துறையில்**

- Diploma in Spoken English(Full time)
- Diploma in Somputer studies
- Diploma in Graphics designing
- Diploma in Web designing

**2 Networking துறையில்**

- Diploma in Spoken English(Full time)
- Diploma in Computer studies
- Diploma in Hardware engineering
- Diploma in Network administration

**3 Accounting & Management துறையில்**

- Diploma in Spoken English(Full time)
- Diploma in Computer studies
- Diploma in HRM & Management
- Diploma in Computerized accounting

**Target Group**

- மாணவர்கள் OL/AL
- தொழில் எதிர்பார்ப்போர்
- உயர்கல்விக்கு தயாராகுவோர்
- வெளிநாடு செல்லவிருப்போர்

HOTLINE: 0777 44 62 52

பாடநெறி முடிவில் சர்வதேச தரம் வாய்ந்த TOEIC சான்றிதழ் உட்பட 06 சான்றிதழ்கள் வழங்கப்படும்

தூர பிரதேச மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்

Free Registration on City & Guilds TOEIC


Duration 03 Months ( Monday -Friday)

**AUTO CAD 2014**
Full Time/Part Time

- Diploma in Auto CAD 2014
- Diploma in 3D Auto CAD 2014
- Diploma in Auto CAD - MEP

City & Guilds TVEC TOEIC LCM

**GOLDEN COLLEGE** 0812 20 55 44
**CITY CAMPUS** 548, Peradeniya Road, Kandy.



# ஆசியாவின் ஆச்சரியத்துக்கு முன்னோடிகளாவோம்!

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையை வந்தடைந்த அரேபியர்கள், இலங்கையின் சர்வதேச உறவுகளை அன்றிலிருந்தே வளர்த்து வந்துள்ளார்கள். இலங்கை அரசனின் கௌரவமான தூதுவர்களாகப் பணியாற்றி, நாட்டுக்கு நலன் சேர்த்துள்ளார்கள். எமது உள்நாட்டு உற்பத்திகளை உலகுக்கு அறிமுகப்படுத்தி, எமது நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்துள்ளதோடு, நவீன விவசாய உத்திகளை அந்நிய நாடுகளிலிருந்து இங்கு அறிமுகப்படுத்தினார்கள். இன்றும் கூட அரபு நாடுகள் எமது அபிவிருத்தியில் பங்கேற்று வருவதை உதாசீனப்படுத்த முடியாது. பாகிஸ்தானின் உதவியுடன் எமது உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொணர்ந்த எமது பாதுகாப்புச் செயலாளர் இவை அனைத்தையும் நன்கறிந்தவர். எனினும், இதுகாலவரை கௌரவ பிரஜைகளாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களை "கடும்போக்குவாதிகள்" என பெயரிட்டழைக்க முயற்சிப்பது ஏன்?

முஸ்லிம்கள் இந்நாட்டுக்கு ஆற்றியுள்ள பெறுமதிமிக்க பல்வேறு பணிகளை கொச்சைப்படுத்துவது போல, அவர்கள் கடும்போக்குவாதிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் எனும் செய்தியை வழங்குவது, எவ்வாறு இந்நாட்டின் இன சௌஜன்யத்துக்கும் பங்களிக்கப் போகின்றது?

பத்து வீத சிறுபான்மை மக்களாக இந்நாட்டில் ஆண்டாண்டு காலம் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் சமூகம், தங்கள் கலை, கலாசாரம், மதம் என்பவற்குக்கு ஆபத்து வந்து விடுமோ என அஞ்சிக் கொண்டிருப்பது இயற்கையானது. ஆனால், எழுபது வீதத்திற்கும் அதிக மக்கள் தொகையைக் கொண்ட பௌத்த மக்கள் தம் மதத்திற்கும் கலாசாரத்திற்கும் முஸ்லிம்களால் ஆபத்து வருமென அஞ்சி, பௌத்த தர்மத்திற்கே விரோதமாகச் செயற்பட்டு மத வழிபாட்டுத் தலங்களைத் தாக்கி வருவதும் அதனைக் கண்டும் காணமல், அவர்களுக்கு சாதகமான கருத்துக்களை அள்ளிவீசுவதும் எப்படி நியாயமாகும்? இதனால் வளரப்போவது இன ஐக்கியமா அல்லது இன விரிசலா?

பல்வேறு மலர்கள் பூத்துக் குலுங்கும் பூந்தோட்டம்தான் மனதுக்கு சாந்தியளிக்கவல்லது. பல்வேறு கனிகளைக் கொண்ட தோட்டம்தான் வாழ்வைச் சுவைப்படச் செய்கிறது. நமது நாடும் அவ்வாறே பலவகைக் கலாச்சாரங்களையும் கொண்டு பரிணமிக்கும் தேசமாக அமைந்து இன ஐக்கியத்திற்கும் மத சகிப்புத்தன்மைக்கும் முன்னுதாரணமாகத் திகழ வழி சமைக்க வேண்டும்.

பௌத்த மக்களும் தம் மத அடிப்படைகளை உறுதியாகப் பேணக் கூடிய சமூகமாக மாறி மது அரக்கனை இந்த நாட்டிலிருந்தும் விரட்டியடித்து, விபச்சாரம், சூது, பொய், களவு, "குடு" கொலை போன்ற அனைத்தையும் இல்லாதொழிக்க வேண்டும். இதற்காக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், இந்து மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெற்று, பெரும் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும். இதுவே உண்மையான முஸ்லிம்களின் வேணாவாவாக இருக்கின்றது.

நாம் ஆசியாவின் ஆச்சரியமாக ஆக வேண்டுமானால், இந்த உலகுக்கு புதியதொரு நாகரிகத்தை, நீதி, நியாயம், சகிப்புத்தன்மை, மனிதாபிமானம், ஐக்கியம், மனித உரிமை போன்ற நல்லவை செழித்தோங்கும் வளமான நாகரிகத்தை வழங்க வேண்டும். முக்கிய மதங்கள் அனைத்தும் ஆசியாவிலும் மத்திய கிழக்கிலும் உருவானவையே. எனவே, இதற்குத் தகுதியானவர்களும் நாம்தான். சுயநலமே உருவான அரக்கத்தனமான, அயோக்கியத்தனமான மேற்குலகம், "பாமியனில்" ஆரம்பித்து ஆசியாவில் அரங்கேற்றி வரும் இன, மத மோதல்களை நாம் முறியடித்து, அவர்களது சூழ்ச்சி வலைகளில் சிக்கிக் கொள்ளாமல் நமது வழியில் நமது விழுமியங்களுடன் ஐக்கியமாக உழைக்கும் போதுதான், ஆசியாவின் ஆச்சரியம் கொண்ட நவ நாகரிகம் மலரும். அதற்கு முன்னோடிகளாக நாம் ஆவது நம் ஆட்சியாளர் கைகளிலேயே தங்கியுள்ளது.

சிந்திப்போம்! செயல்படுவோம்!



# புறக்கணிப்பு ஏற்படுத்தும் நெருக்கடிகள்

மௌலவி எம்.எச்.எச்.எம். முனீர், அதிபர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

*"எவன் என்னுடைய திக்ரை (நல்லுபதேசத்தை) புறக்கணிக்கின்றானோ, அவன் நெருக்கடியான வாழ்க்கைக்கு உட்படுத்தப்படுவான். மேலும், மறுமையில் அவனை நாம் குருடனாக எழுப்புவோம்."*
*(ஸூரத்து தாஹா: 124)*

ஸூரா தாஹா இறை தூதுத்துவத்தின் அடிப்படையையும் அதன் யதார்த்தங்களையும் மையப்பொருளாய்க் கொண்டு உரையாடுகின்றது. அதன் துவக்கத்தில் குர்ஆனின்பால் மனித சமூகத்திற்கு இருக்கும் தேவையையும் அதன் உலக, மறுமை விளைவுகளையும் பேச ஆரம்பித்து, மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது சிறு பராயம் முதல் அவர்களது நபித்துவப் பணியின் பல்வேறு காட்சிகளை சித்திரித்துக் காட்டி ஸூரா முடிவடையும் போது மீண்டும் அல்குர்ஆனின் தவிர்க்க முடியாத தேவைகளையும் அதன்பால் மனிதர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளையும் அதனைப் புறக்கணிப்பதால் மனித சமூகம் எதிர்நோக்கும் விளைவுகளையும் எச்சரித்து ஸூரா முடிவடைகின்றது.

"எவர் என்னுடைய திக்ரை புறக்கணிக்கின்றாரோ" என்ற வசனத்தில் இடம்பெற்றுள்ள 'என்னுடைய திக்ர்' என்பது அல்குர்ஆனின் கட்டளைகளையும் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு வழிப்படுவதையும் குறிக்கும் என தப்ஸீர் ஆசிரியர் அறிஞர் ஷபீஃ வலீ (ரஹிமஹுல்லாஹ்) விளக்கம் கூறுகிறார்.

மனித வாழ்வை வளப்படுத்தக்கூடிய அல்லாஹ்வின் வழிகாட்டல், பல்வேறு தன்மைகளுடன் புறக்கணிக்கப்படுகின்றது. அடிப்படையிலேயே தெய்வீக வழிகாட்டலைப் புறக்கணிக்கும் போக்கு அல்லது பல்வேறு கடவுளர்களை அல்லாஹ்வுக்கு இணையாக்குதல், மனோ இச்சைகளுக்கு ஆட்பட்டு ஈமானையும் தக்வாவையும் இழந்து நிற்றல் முதலானவை அவற்றுள் சிலவாகும். இவை தவிர மார்க்க ஞானமிழந்து மார்க்கத்தின் பல்வேறு வழிகாட்டலின் தேவை உணரப்படாததால் பராமுகத் தன்மைகளினாலும் புறக்கணிப்புகள் இடம்பெறுகின்றன.

இந்த மார்க்கத்தைப் பற்றிய மொத்தப் பார்வையும் தெளிவும் பெற்ற ஒரு முஸ்லிம், அதன் ஆழ்ந்த ஈமான் மற்றும் பலமிக்க தக்வாவின் கராணத்தால் அதன் எந்தப் பகுதியும் புறக்கணிக்கப்படுவதை அங்கீகரிக்கவோ, சகித்துக் கொள்ளவோ மாட்டான். இஸ்லாத்தின் வழிகாட்டல்களை ஒட்டு மொத்தமாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அதன் ஆத்மீக பகுதிகளை ஏற்று, வாழ்வியல் சார்ந்த பகுதிகளை புறக்கணிப்பதாகவோ அல்லது தமக்கு சிரமமானவை என ஒருவரால் புறக்கணிக்கப்படுபவையாகவோ -எந்த வகையில் புறக்கணிக்கப்பட்டாலும்- அவை உலக வாழ்வில், மரண வேளை முதல் கியாம நாள் வரையில், மஹ்ஷர் பெரும்வெளியில் பெரும் நெருக்கடிகளை, கடினமான வாழ்வை ஏற்படுத்துமென அல்லாஹ் எச்சரிக்கின்றான்.

> இந்த மார்க்கத்தைப் பற்றிய மொத்தப் பார்வையும் தெளிவும் பெற்ற ஒரு முஸ்லிம், அதன் ஆழ்ந்த ஈமான் மற்றும் பலமிக்க தக்வாவின் கராணத்தால் அதன் எந்தப் பகுதியும் புறக்கணிக்கப்படுவதை அங்கீகரிக்கவோ, சகித்துக் கொள்ளவோ மாட்டான்.

தனி மனித வாழ்விலும் சமூகங்களின் இருப்பு, பாதுகாப்பு, அபிவிருத்தி யாவற்றிலும் நிலை கொள்ளும் தன்மையைப் பெற இஸ்லாமிய சிந்தனையும் அதன் முறையியல் தன்மையும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவை இரண்டும் புறக்கணிக்கப்படும்போது, தனி மனிதர்களும் சமூகங்களும் பன்முக நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

ஒருவரது புறக்கணிப்புக்கேற்ப அவர் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுவார். நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுல் என்பதை தப்ஸீர் ஆசிரியர்கள் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்கள். அதன் பின்புலத்தில் எமது வாழ்வியல் ஒழுங்குக்குள் வந்தால் நாம் மூன்று கட்டமைப்புக்குள் உட்படுத்தப்பட்டுள்ளதை அவதானிப்போம்.

1. எமது அன்றாட உணவு, உடை, உறையுள் சுகாதாரம் மற்றும் வைத்திய தேவைகள், போக்குவரத்து, தொடர் பாடல் உள்ளிட்ட அனைத்தும் தொழிநுட்பமயப்படுத் தப்பட்டு மிகக் குறுகிய நேரத்தில் இலகுவான முறையில் அனுபவிக்க முடியுமான நிலை.

**2.** நேரத்தைப் பயன்படுத்தல், சேமித்தல், வீட்டை, தொழிலை, காரியாலயத்தைப் பராமரித்தல், பரஸ்பர கலந்துரையாடல்களை நடத்துதல், பிரச்சினைகளுக்கும் குழப்பங்களுக்கும் தீர்வு காணல் என அனைத்தும் விஞ்ஞானபூர்வமானக அறிவுமயப்படுத்தப்பட்டிருக்கும் நிலை.

**3.** ஒரு பெண் கருவுற்றதிலிருந்து குழந்தை பிறந்தது முதல் மரணித்து அடக்கம் செய்யப்படும் வரை... குப்பைகளைக் கொட்டுவது முதல் வீட்டுக்கு உணவுகளை வாங்கி வருவது வரை உள்நாட்டுக்குள்ளும் வெளிநாட்டுக்குள்ளும் பயணம் செய்வது வரை... அனைத்து அலகுகளுமே மிக இறுக்கமான, நிறுவனமயப்படுத்தப்பட்ட, நவீன அரசியல் சமூகமாக ஆக்கப்பட்டிருக்கும் நிலை.

இவ்வாறு மும்முனைக் கட்டமைப்புக்குட்படுத்தப்பட்ட நவீன சமூகங்கள் என்றுமில்லாதவாறு மன அமைதியை, சந்தோஷத்தை இழந்து மன நோயாளர்களாகவும் பரஸ்பரம் மன உளைச்சல்களை வெளிப்படுத்துவோராகவும் மன அழுத்தம், பொறாமை, குரோதம், கோபம் போன்ற காரணங்களினால் உயர் குருதி அமுக்க நோயாளிகளாக மாறுவதையும் அவதானிக்கின்றோம்.

திடகாத்திரமான, கட்டான உடலமைப்பைப் பேணுவதை ஆசைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ற பல்சுவை உணவுகளை உட்கொண்டும் பல்வேறு சொத்துக்களின் உரிமையாளர்களாகிய பல்கலைகளைக் கற்று வித்துவத் தன்மை பெற்றும் அதிகாரத்தோடு கூடிய பதவிகளை அனுபவித்தும் நிம்மதியைத் தேடி அலைகின்றார்கள். நிம்மதியிழப்புக்கான காரணத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. எது அந்த நிலையைத் தோற்றுவித்தது என்பதையும் அவர்களால் அறிந்து கொள்ள முடியாது உள்ளது.

இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) கூறுகின்றார்கள்: "இறை தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மீது இறக்கி வைக்கப்பட்டதை யார் புறக்கணிக்கின்றாரோ அவர் உலகில், கப்றில், மறுமையில் நெருக்கடிக்குள்ளாவது தவிர்க்க முடியாததாகி விடும். யார் அல்லாஹ்வைக் கொண்டு கண்குளிர்ச்சி அடைகின்றாரோ அவருக்கு அனைத்தும் கண்குளிர்ச்சியாகிவிடும். எவர்கள் இத்தகைய உத்தம நிலையை அடையவில்லையோ அவர்களது ஆத்மா உயிரிழந்து விடும். அவர்களது உலகம் சிரமமானதாகி விடும். ஈமான் கொண்டு சாலிஹானவற்றைச் செய்து கொண்டிருப்போரின் உலகை அல்லாஹ் மகிழ்ச்சியானதாக ஆக்குவான்."

ஸூரதுந் நஹ்லின் 97ஆம் வசனம் இதனை இவ்வாறு விபரிக்கின்றது.

"ஈமான் கொண்டு சாலிஹானவற்றைச் செய்யும் ஆண்களையும் பெண்களையும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச்செய்வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களின் கூலியை அவர்களுக்கு வழங்குவோம்!"

இரு உலகிலும் மகிழ்ச்சிகரமான வாழ்வு... ஈமான், சாலிஹானவற்றின் விளைவாக உலகில் மகிழ்ச்சி... மறுமையில் உயர்ந்த கூலி!

இங்கு ஸூரதுந் நஹ்லின் 30ஆம் வசனம் நோக்கத்தக்கதாகும்.

"இவ்வுலகில் நன்மை செய்வோருக்கு நன்மையே உள்ளது. மறுமை வாழ்வுதான் சிறந்தது. முத்தகிகளின் உலகம் மிகவும் சிறந்தது. நிலையான சுவனச் சோலைகளில் அவர்கள் நுழைவார்கள். அவற்றின் கீழ்ப் பகுதிகளில் ஆறுகள் ஓடும். அவர்கள் விரும்பியவை அவர்களுக்கு அங்கே உண்டு. இவ்வாறே முத்தகிகளுக்கு அல்லாஹ் வழங்குவான்.

உலக வாழ்வில் மகிழ்ச்சியை, நிம்மதியை, உள விரிவாக்கத்தை, மனவெழுச்சியை அனுபவித்தல் என்பது, தடை செய்யப்பட்டவற்றிலிருந்தும் சந்தேகமானவற்றிலிருந்தும் தவிர்ந்து கொள்ளும் மன வலிமையே ஆகும். இம் மார்க்கத்தைப் பின்பற்றியதன் விளைவாக தாம் அனுபவித்த மகிழ்ச்சிப் பிரலாபத்தை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள்.

நிச்சயமாக உலகத்திலேயே சுவர்க்கம் உண்டு, அது மறுமையின் சுவனத்தை ஒத்ததாகும். யார் இச்சுவனத்தில் நுழையவில்லையோ, அவர் மறுமையின் சுவனத்தில் நுழைய மாட்டார். இக்கருத்தை பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுக்கின்றது:

"சுவர்க்கத்தின் பூங்காக்களை நீங்கள் கடந்து சென்றால் அதில் உட்கார்ந்து கொள்ளுக்கள். அதுதான் இறைவனை நினைவுகூரும் சபைகள்." (அல்புகாரி)

நெருக்கடிகளிலிருந்து ஒருவர் தப்பிக் கொண்டார் என்றால், அவர் அமைதியான மனநிலை, மனப்பாங்கு, மன உணர்வு, மனப்போக்குடன் வாழ்வதுதான் அமைதியும் ஈடேற்றமும் அடைந்த உளப்பாங்காகும் (கல்புந் சலீம்). இணைவைப்பிலிருந்தும் மனிதர்களுக்கிடையே கோபம் கொள்ளுதல், குரோதத்தோடு நடத்தல், பொறாமை கொள்ளல், கஞ்சத்தனம், பெருமை, உலக மோகம், பதவியாசைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதும் அல்லாஹ்வை விட்டு தூரமாக்கும் அனைத்து அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதும் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் அனைத்து சந்தேகங்களிலிருந்தும் அல்லாஹ்வின் கட்டளைகளுடன் முரண்படும் அம்சங்களிலிருந்தும் பாதுகாப்பு பெறுதலே, பாதுகாப்பு பெற்ற மனதைப் பெறுதலாகும்.

*"அந்த நாளில், பொருட்களும் மக்களும் யாதொரு பயனுமளிக்காது. பரிசுத்த உள்ளத்துடன் அல்லாஹ்விடம் வருபவர் மாத்திரமே (பயனடைவார்)."* (ஸூரதுந் நஹ்ல்: 88-89)

புறக்கணிப்பாளன் உலகத்தில் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதைப் போல் அவனது புதைகுழியிலும் மறுமையிலும் நெருக்கடிக்கு உள்ளாவான்.

*"கப்ரில் காலையிலும் மாலையிலும் நரக நெருப்பு அவர்களுக்கு காட்டப்படும்."* (ஹாபிர்: 46)

*"மறுமையில் அந்த நேரம் வரும்போது பிர்அவ்னின் ஆட்களை கடுமையான வேதனையில் நுழையச் செய்யுங்கள்."* (ஹாபிர்: 46)

# குர்பானை குர்பான் கொடுத்து விடாதீர்; அது ஒரு நற்கிரியை



**அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி), விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரி, புத்தளம்

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "அறுத்துப் பலியிடுகின்ற ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் இரத்தத்தை ஓட்டுவதைவிட அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான ஒரு நற்செயலை எந்த மனிதனும் செய்ய முடியாது. (பலியிடப்பட்ட) பிராணிகள் கொம்புகளுடனும் மயிர்களுடனும் குளம்புகளுடனும் மறுமை நாளில் வரும். இரத்தம் தரையில் விழுவதற்கு முன்பே உயர்ந்த அந்தஸ்தை அல்லாஹ்விடம் பெற்று விடுகின்றது. எனவே, மன விருப்பத்துடன் குர்பான் கொடுங்கள்."

(அத்திர்மிதி)

ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் ஒரு முஸ்லிம் நிறைவேற்றுகின்ற மிகவும் சிறந்த செயல் அறுத்துப் பலியிடல் (குர்பான்) என்று நபி (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தியாக வரலாற்றை நினைவுகூர்ந்து அத்தகைய தியாகங்களை நாமும் மேற்கொண்டு தீனுல் இஸ்லாத்தை வாழ்வாங்கு வாழ வைக்க வேண்டும் என்ற நோக்கில் அல்லாஹ்வும் அவனது இறைதூதரும் உவந்தளித்த மிகவும் முக்கியமான வணக்க வழிபாட்டு முறைமையே குர்பானியாகும்.

அல்லாஹுத் தஆலா அறுத்துப் பலியிடுவதை தொழுகையோடு இணைத்துப் பேசி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு கடமையாக்கி வைத்தான்.

"உமது இரட்சகனுக்காக தொழுகையை நிறைவேற்றி அறுத்துப் பலியிடுவீராக!"

(ஸூரா அல்கவ்ஸர்: 2)

எனவே, குர்பானின் மார்க்கரீதியான முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்ட இறைதூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன் கரத்தினால் அறுத்துப் பலியிட முன்வந்தார்கள்.

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கறுப்பும் வெள்ளையும் கலந்த கொம்புள்ள இரண்டு ஆடுகளை "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறி தங்களது கரத்தால் அறுத்துப் பலியிட முன்வந்தார்கள். (அல்புகாரி, முஸ்லிம்)

இஸ்லாம் அறுத்துப் பலியிடுவதை ஒரு நற்செயலாக, மிகவும் முக்கியமான ஒரு கிரியையாக அறிமுகம் செய்துள்ளது. எனவேதான் புனித மக்கா நகர் நோக்கி ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோர் ஹஜ் பெருநாள் தினத்தில் 'வக்பு' என்ற பெயரில் இதனை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளனர். அவ்வாறே, ஹஜ்ஜுக்குச் செல்லாமல் இருக்கின்ற வசதி படைத்தவர்கள் மீது உழ்ஹிய்யா வலியுறுத்தப்பட்ட ஸுன்னத்தாக ஆக்கப்பட்டுள்ளது. மேற்படி குர்பானியைக் கொடுக்க நிய்யத் வைத்தவர்களுக்கு வலுவான நிபந்தனைகளையும் இஸ்லாம் இட்டுள்ளது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள் துல் ஹிஜ்ஜா மாதத்திற்கான பிறையைக் கண்டு உங்களில் ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க விரும்பினால் அவர் தனது முடிகளையும் நகங்களையும் களைய வேண்டாம்."

(முஸ்லிம்)

அறுத்துப் பலியிடும் கிரியையின்போது அல்லாஹுத் தஆலா தனது அடியார்களிடம் எதிர்பார்ப்பது அறுத்துப் பலியிடப்பட்ட பிராணியின் இரத்தத்தையும் மாமிசத்தையும் அல்ல; அறுப்பவரின் தக்வாவையே பெரிதும் எதிர்பார்க்கின்றான். அடுத்ததாக அப்பிராணியின் இரத்தம் தவிர்ந்த ஏனைய உடற்பாகங்கள் மனிதர்களுக்கு உணவாக அமைய வேண்டும் என்பது அல்லாஹ்வின் எதிர்பார்க்கையாகும்.

"ஒட்டகங்களை உங்களுக்காக அல்லாஹ்வின் (மார்க்கச்) சின்னங்களில் ஒன்றாக ஆக்கியுள்ளோம். அவற்றில் உங்களுக்கு நன்மை உண்டு. நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் அதன் மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறி அறுத்து விடுங்கள். அது விலாப்புறமாக விழுந்ததும் அதை உண்ணுங்கள். அதை யாசிப்பவருக்கும் யாசிக்காதவருக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் நன்றி செலுத்த வேண்டுமென்பதற்காக இவ்வாறே அதனை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். அவற்றின் மாமிசங்களோ, அவற்றின் இரத்தங்களோ அல்லாஹ்வை அடைவதில்லை. மாறாக, உங்களிடம் உள்ள இறையச்சமே அவனைச் சென்றடையும்..." (ஸூரா அல்ஹஜ்: 36-37)

மறுமை நாளில் அல்லாஹ்வின் நற்கூலியைப் பெற்றுக் கொள்வதற்காக முஸ்லிம்களால் நிறைவேற்றப்படுகின்ற அடிப்படையான கிரியையே குர்பான். அறுத்துப் பலியிடப்பட்ட கால்நடைகள் மறு உலகில் உயிர் பெற்று எழுந்து

வந்து இறைவனிடத்தில் சான்று பகரும். இவ்வுலகில் நிறைவேற்றப்படும் குர்பான் துரிதமாக அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தரையில் இரத்தம் விழுவ தற்கு முன் இந்தக் கிரியை உயர் அந்தஸ்துமிக்கதாக இறைவனிடத்தில் மாறிவிடுகிறது. ஆகவே, இஸ்லாத்தின் பார்வையில் ஏனைய இபாதத்துக்களைவிட சற்றும் குறை வில்லாத உயர் பெறுமானமிக்க கிரியையே குர்பான் ஆகும்.

முதன் முதலாவதாக இந்த சமூகத்திற்கு இதனை அறிமுகம் செய்தவர் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்ல. நபி இப்றாஹீம் (அலைஹிஸ்ஸ லாம்) அவர்களது காலப் பிரிவிலேயே இது அறிமுகமாகி விட்டது. தனது அருமை மகனாகிய இஸ்மாயீல் (அலை ஹிஸ்ஸலாம்) அவர்களை அறுத்துப் பலியிட கனவு கண்ட இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள், அதனை உண்மைப்படுத்திடத் துணிந்தார்கள். அவர்களது சிந்த னையை மெச்சிப் பாராட்டிய அல்லாஹ் அவரை அறுப்ப தற்கு பகரமாக ஓர் ஆட்டை அறுக்குமாறு பணித்தான். (பார்க்க: ஸூறா அஸ்ஸாப்பாத்: 102-107)

'குர்பான்' என்ற பதம் இறைவனை நெருங்குவதற்காக மனிதர்கள் பிரயோகித்த கிரியைகள் என்ற கருத்தைத் தொனிக்கின்றது. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது இரு ஆண் பிள்ளைகளும் இறைவனை நெருங்குவதற்காக கையாண்ட வணக்கத்தைக் குறிக்க இச்சொல்லை அல்குர் ஆன் பிரயோகிக்கின்றது. அல்குர்ஆனில் மூன்று இடங் களில் இச்சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இது வன்மமும் வக்கிரமும் நிறைந்த ஒரு சொல் அல்ல.

பொதுவாக மனித சமூகம் இறைவனை வணங்கி வழிபட்டு அவனை நெருங்குவதற்காக பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது. கை கூப்பி வணக்கம் தெரிவித்தல், சிரம் பணிதல், தொழுதல், விரதம் அனுஷ்டித்தல், தியானித்தல், மந்திரங்களை உச்சரித்தல், அறுத்துப் பலியிடுதல் முதலா னவை. அறுத்துப் பலியிடுதல் என்பது இஸ்லாத்தில் மட் டுமல்ல, இதர மதங்களிலும் பிரதான வழிபாடாகக் கரு தப்படுகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்தவரை மேற்படி வணக்க வழிபாடுகளை அகீதா எனும் இறைவிசுவாசக் கோட்பாடு நெறிப்படுத்தி அதற்கான சட்ட வரம்புகளை யும் இட்டுள்ளது.

ஆன்மிக விமோசனம் கருதி ஒவ்வொரு மதமும் முன் வைக்கின்ற வணக்க வழிபாடுகள் மற்றும் கிரியைகள் மார்க்கப்பற்றாளர்களைப் பொறுத்தவரை அவை மாறாத நியதிகளால் ஆளப்படுகின்றன. இவற்றை எந்தவொரு மதத்தினரும் தாமாக அழித்துவிடுவதற்கோ மாற்றி விடுவ தற்கோ விரும்புவதில்லை. பிறர் அதில் தலையீடு செய்து இல்லாதொழிப்பதற்கும் இடமளிக்கவும் மாட்டார்கள். அவ்வாறான நிலைமைகள் மத உரிமை மீறலாகவே அமையும். சிலபோது ஒரு மதத்தின் வணக்க வழிபாட்டுக்கு எதிரான துன்பியல் நடவடிக்கைகள் மதக் கலவரத்திற்கு வழிவகுத்து விடும். உயிர்கள் காவு கொள்ளப்படும் நிலை மைகளையும் தோற்றுவிக்க முடியும்.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை அறுத்துப் பலியிடுதல்

இது ஒரு நற்செயல். மறு உலக வாழ்வைத் தீர்மானிக்கின்ற கிரியை. இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை. மாடறுப்பு தடைச் சட்டம் விவகாரத்தில் எமது அசமந்தப் போக்கு எதிர்காலத்தில் தொழுகை தடைச் சட்டம், நோன்பு தடை சட்டம், ஸகாத் தடை சட்டம், ஹஜ்-உம்றா தடைச் சட்டம் என்று வளர்ந்து மத உணர்வு இன்னும் இன்னும் கூர்மைப்படுத்தப்பட்டு நாம் கரைந்து அடையாளம் இழந்து செல்லும் நிலைக்கு வழிவகுத்துவிடும்.

(குர்பான்) என்பது அடிப்படையான வணக்க வழிபாடாகும். இவற்றை முழுமையாக விட்டுவிடுவதற்கோ, இக்கிரியை யானது எமது மார்க்கத்தின் அடிப்படையான விவகாரங் களில் உள்ளதல்ல என்று கருத்துத் தெரிவிப்பதற்கோ அல்லது சகவாழ்வு, புரிந்துணர்வு மதச் சகிப்புத் தன்மை என்ற பெயரில் கால சூழலுக்கேற்ப நெகிழ்ந்து கொடுத்து இவற்றை பேசாமல் மறைத்து விடுவதற்கோ எமக்கு அனுமதி தரப்படவில்லை. இவ்வகையான கருத்து நிலைகள் ரித்தத்துக்கு (மதம் மாறுதலுக்கு) வழிவகுக்கக் கூடியவை.

இது ஒரு நற்செயல். மறு உலக வாழ்வைத் தீர்மானிக் கின்ற கிரியை. இதில் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லை. மாடறுப்பு தடைச் சட்டம் விவகாரத்தில் எமது அசமந்தப் போக்கு எதிர்காலத்தில் தொழுகை தடைச் சட்டம், நோன்பு தடை சட்டம், ஸகாத் தடை சட்டம், ஹஜ்-உம்றா தடைச் சட்டம் என்று வளர்ந்து மத உணர்வு இன்னும் இன்னும் கூர்மைப்படுத்தப்பட்டு நாம் கரைந்து அடையாளம் இழந்து செல்லும் நிலைக்கு வழிவகுத்துவிடும்.

நாம் விளக்கத்திற்கு எடுத்துக் கொண்ட ஹதீஸ் குர்பா னின் முக்கியத்துவத்தை அழுத்திப் பேசுகின்றது. இதன் காரணமாக கால்நடைகளை வணக்க வழிபாடு என்ற பெயரில் வரையறைகள் ஏதுமின்றி அறுத்துக் குவிக்கலாம் என்பது அர்த்தமல்ல. குர்பானின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறிய நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ஜீவகாருண்யத்தின் அடிப்படையில் அதனை நிறைவேற் றுவதற்கான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார்கள். கால்நடைகளை வளர்க்காமல் மிகவும் நாகரிகமான முறையில் ஒழுக்கம் பேணி அறுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: "சகல விவகாரங்களிலும் கன கச்சிதமான முறையில் நடந்து கொள்வதை அல்லாஹ் விதித்து விட்டான். எனவே, கொல்லப்பட வேண்டிய பிராணியை மிகவும் கச்சிதமாகக் கொன்று விடுங்கள். அறுவைப் பிராணியை மிகவும் கச்சிதமாக அறுத்து விடுங்கள். உங்கள் கத்தியை நன்றாகத் தீட்டி கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். அறு வைப் பிராணிக்கு (அறுக்கும் போது) ஆறுதல் அளியுங்கள்." (முஸ்லிம்)

அறுத்துப் பலியிடுதல் ஒரு கிரியையாக இருப்பினும் கூட பூமியில் வாழுகின்ற அனைத்து மிருகங்களையும் வகை

தொகையற்ற நிலையில் அறுத்துப் பலியிடலாம்; அவற்றை உண்ணலாம் என்று இஸ்லாம் சலுகை அளிக்கவில்லை. கடல்வாழ் அனைத்தையும் அது ஆகுமானதாக்கியுள்ளது. அதில் இறந்தவைகூட ஹலாலாகும். ஆனால், தரையில் வாழும் எல்லா உயிரினங்களையும் அறுத்துப் புசிக்க அது அனுமதி வழங்கவில்லை. வேட்டைப் பற்கள் உள்ள மிரு கங்களையும் கவ்விப் பிடித்து உண்ணுகின்ற இராட்சதப் பறவைகளையும் அறுத்துப் புசிப்பதை அது தடை செய் துள்ளது. இவ்வகையில் இஸ்லாம் நாகரிகமான வாழ் வொழுங்கை எமக்குப் போதிக்கின்றது. புவிமேற்பரப்பில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களையும் அறுத்துப் புசிக்கின்ற காட்டேறித்தனத்தை இஸ்லாம் ஊக்குவிக்க வில்லை. குர்பானுக்காக இஸ்லாம் பரிந்துரைத்த ஆடு, மாடு, ஒட்டகம் முதலானவை தாவர உண்ணிகள் என்பதை இங்கு சிறப்பாகக் குறிப்பிட முடியும்.

மேலும், குர்பான் ஒரு கிரியை. அதன் மூலம் பெறப் படுகின்ற இறைச்சியை சாப்பிடுமாறும் ஏழைகளுக்கு உணவாக வழங்குமாறும் அல்குர்ஆன் கட்டளையிடு கின்றது. பெருநாள் என்பது மகிழ்ச்சிகரமான தினமாகும். அத்தினத்தில் பசி, பட்டினி இன்றி எல்லோரும் உண்டு களிக்க வேண்டும். எனவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"பெருநாள் என்பது உணவு உட்கொண்டு அருந்தி மகிழும் தினமாகும்."

குர்பான், என்பது தனி மனிதனுக்கு நற்கூலியைப் பெற் றுத் தருவதோடு, முஸ்லிம் சமூகத்தின் வறுமையை ஒழித்து பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை வலுப்படுத்துகின்ற அடிப்படையான மூலமாகவும் அமைகிறது. எனவே, இது ஒரு மிலேச்சத்தனமான நடவடிக்கையல்ல. குறையறிவும் காழ்ப்புணர்வும் கொண்ட மதத் தீவிரவாதிகள் மட்டுமே இந்நற்செயலை விமர்சிக்கின்றனர்.

முஸ்லிம்கள் இறைச்சியை கட்டாயம் சாப்பிட வேண்டும் என்று இஸ்லாம் எந்த இடத்திலும் சிறப்பாக வலியுறுத்திக் குறிப்பிடவில்லை. இறைச்சி சாப்பிடுவதற்கு அனுமதியை மட்டும் வழங்கியிருக்கின்றது. ஒருவர் விரும்பினால் அதனை சாப்பிடலாம் அல்லது சாப்பிடாமல் தவிர்ந்து கொள்ளலாம். தானியங்கள், பழங்கள், காய்கறி வகைகள் போன்றவற்றை முழுமையாகப் புறக்கணிக்குமாறும் இஸ்லாம் உத்தரவிடவில்லை.


எம்மைப் படைத்த அல்லாஹ் எமது உடலியல் தேவைகளை நன்கறிவான். தானியங்கள், பழங்கள், காய் கறிகள் ஆகியவற்றை உண்ணுகின்ற இயல்புள்ள மனித னுக்கு இறைச்சி உண்ணுகின்ற இயல்பான தேவையும் உள்ளது. எனவேதான் இறைச்சியை மென்று அரைத்து உண்ணுகின்ற வகையில் மனிதனுக்கு கடைவாய்ப்பற் களும் கிழித்துத் துண்டாக்கும் வேட்டைப் பற்களும் உள்ளன.

அறுத்துப் பலியிடல் தொடர்பாக மற்றுமொரு கருத் தைப் பதிவுசெய்ய முடியும். அதாவது உலகில் உள்ள பிராமணர்களும் வேறு சில ரிஷிகளும் மிருகங்களை அறுத்து உண்பதை விலக்கிக் கொண்டனர். "மிருகங்களை அறுப் பதானது மனிதனது இறுகிய உள்ளத்தின் வெளிப்பாடாகும். தன்னைப் போன்ற உயிரினங்களின் வாழ்வுரிமையைப் பறிப்பதாகும்" என்ற கருத்தை அவர்கள் வெளியிட்டனர். ஆனால், படைப்பினங்கள் பற்றி நாம் ஆழமாக சிந்தித்தால் மிருகங்கள் படைக்கப்பட்டிருப்பது உயர்ந்த ஒரு நோக்கத் திற்காக அல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், அவற்றுக்கு பகுத்தறிவோ தெரிவுரிமையோ கொடுக்கப் படவில்லை. அவற்றின் இயல்புத் தன்மையை அவதா னிக்கின்றபோது அவை மனிதனுக்கு சேவகம் செய்வதற் காகவே படைக்கப்பட்டுள்ளதை நாம் விளங்கிக் கொள்ள முடியும். எனவே, மனிதன் அதனை அறுத்து அதனது இறைச்சியைப் பயன்படுத்துவது ஆச்சரியமான விடயமல்ல.

தாழ்ந்த வகையைச் சார்ந்த ஒன்று உயர்ந்த வகையின் நலனுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வது இறை நியதி என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம். வளர்ந்தோங்கி நிற்கும் பச்சைத் தாவரம் மிருகங்களின் உணவுக்காக அழிக்கப்படுகின்றது. மனிதனது உணவாக அமைய வேண்டும் என்பதற்காக மிருகங்கள் அறுக்கப்படுகின்றன. ஒட்டுமொத்த சமூகத்தின் நலனுக்காக தனி மனிதன் போராடுகின்றான். அதற்காக கொல்லப்படுகின்றாள். இவ்வாறு இந்த இறை நியதியைக் கூறிக் கொண்டே செல்லலாம்.

மனிதன் முழுமையாக மிருகங்களை அறுப்பதைத் தவிர்ந்து கொண்டாலும்கூட மரணத்திலிருந்தும் அழி விலிருந்தும் அவனால் அவற்றைப் பாதுகாக்க முடியாது. இம்மிருகங்களில் சில அடுத்த சிலதை தமது வேட்டைப் பற்களால் கடித்துக் குதறி அழிக்காவிட்டாலும்கூட அவை இயற்கையாக மரணமடையத்தான் போகின்றன. இவற்றை யாராலும் தடுக்க முடியாது. ஏனைய விலங்குகளாய் வரும் இயற்கை மரணம் என்பது மிருகங்களைப் பொறுத்தவரை கூரிய ஆயுதத்தால் அதனை அறுப்பதைவிட மிகவும் வலி நிறைந்த ஒன்றாகவே அமையும்.

கால்நடைகளை மனிதனுக்கு அல்லாஹ் உணவாகப் படைத்து இவ்வுலக வாழ்வில் சமநிலையைப் பேணி வருகின்றான். மாடறுப்பு தடைச் சட்டத்தை முன்வைப்ப வர்கள் எதிர்காலத்தில் காட்டு யானைகளால் எதிர்நோக் கும் பிரச்சினைகளைவிட பன்மடங்கு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும். சமநிலை குழப்பப்பட் டால் அனர்த்தங்கள்தான் விஞ்சும் என்பதில் இம்மியள வும் சந்தேகமில்லை. எனவே, குர்பான் மார்க்க ரீதியா கவும் பகுத்தறிவு ரீதியாகவும் நியாயமான ஒரு நற்கிரியை என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். குர்பானை குர்பான் கொடுத்து விடாமல் இறை தூதரின் வழிகாட்டு தலின் வெளிச்சத்தில் அதனை முழுமையாக நிறைவேற்றி நற்கூலியைப் பெற்றுக் கொள்வோமாக!



# பேரருளாக நினைவுகூரப்படும் தலைவர்...

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர், அமீர், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
www.usthazhajjulakbar.org

**மக்கள் நலனை தங்களது உயிரோடு ஒட்டிய ஒரு பண்பாகக் கொண்ட தலைவர்கள் அவர்கள். இவர்களை சேவகர்கள் என்றும் கூறலாம். மக்கள் எங்கே துன்பப்படுகிறார்களோ அங்கே இவர்கள் இருப்பார்கள். மக்களின் பசி இவர்களது பசி; மக்களின் துன்பம் இவர்களது துன்பம்.**

**தலைவர்கள்** மற்றும் தலைமைத்துவம் பற்றி எண்ணற்ற நூல்கள் வெளிவந்திருக்கின்றன. தலைமைத்துவப் பயிற்சிகளும் இன்று பெருமளவு செறிவாக்கப்பட்டு வளர்ச்சியடைந்திருக்கின்றன. ஒரு தலைவருக்கிருக்க வேண்டிய பண்புகள், அவற்றை வளர்ப்பதற்கான பயிற்சிகள் போன்றவற்றை நீங்கள் அவற்றில் கண்டறிந்து கொள்ளலாம். அவற்றை விளக்குவது இந்த ஆக்கத்தின் நோக்கமல்ல. மாறாக, சமூகத்தில் வகை வகையான தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அவர்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவுவதே இவ்வாக்கமாகும்.

இந்தத் தலைவர்கள் தம்மிடம் இருப்பது எது, இல்லாதிருப்பது எது என்பது பற்றி அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. சமூகத்தின் ஏதோவொரு தளத்தில் ஒரு தலைமைத்துவத்தை வழங்கும் வாய்ப்புக் கிடைத்ததால் இவர்கள் தலைவர்களாக செயல்படுகிறார்கள்; முடிந்ததை செய்துவிட்டுப் போகிறார்கள். முடியாததை விட்டு விடுகிறார்கள். அவர்களால் செய்ய முடிந்தவற்றுக்காக அவர்களைப் பாராட்டலாம். எனினும், அந்தப் பாராட்டோடு நிற்காமல் அவர்கள் தங்களைப் பற்றி ஓரளவேனும் அறிந்து கொள்வதற்கும் தங்களை வளர்த்துக் கொள்வதற்கும் உதவ வேண்டும் என்ற நோக்கிலேயே இது எழுதப்படுகிறது. இந்த ஆக்கம் தலைவர்களல்லாத சாதாரண மக்களுக்கும் பயனளிக்கலாம். அவர்களும் ஒரு வகையில் சின்னச் சின்னத் தலைவர்களாகத் தொழிற்படும் சந்தர்ப்பங்கள் நிறையவே வருவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் தாம் எத்தகைய இயல்புகளோடும் பண்புகளோடும் கருமமாற்ற வேண்டும் என்பதை சிறிதளவேனும் கற்றுக் கொள்வதற்கும் இந்த ஆக்கம் உதவலாம்.

இனி தலைவர்களுக்கான சில உதாரணங்களைப் பார்ப்போம்.

*1. சமூகத்தில் ஒரு வகையான தலைவர்கள் இருக்கிறார்கள்.* அவர்களை வேலைத் தலைவர்கள் என்று குறிப்பிடலாம். அனைத்து வேலைகளையும் தாமே முன்னின்று தனது கண்காணிப்பிலேயே செய்து முடிக்கும் தலைவர்களே இவர்கள். எந்த ஒரு வேலையையும் பிறர் செய்தால் சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கை இவர்களுக்கிருக்க மாட்டாது. அதனால் வேலைகளைப் பிறரிடம் ஒப்படைக்க இவர்கள் விரும்புவதில்லை. ஒப்படைத்தாலும் தமது அறிவுறுத்தலுக்கேற்பவே அவர்கள் ஒவ்வொன்றையும் செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

இவர்களது நிர்வாகம் பற்றி இவர்கள் மட்டுமே அறிந்திருப்பார்கள். வரவு- செலவு விவரங்கள், யாரைப் பயன்படுத்தி என்ன செய்கிறார்கள், நியமனங்கள், பதவி நீக்கங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன போன்ற இன்னோரன்ன விடயங்கள் அனைத்தும் அவருக்கு மட்டுமே தெரிந்திருக்கும். இவருக்கு அடுத்து வருகின்ற ஒருவரால் இவர் செய்த நிர்வாகத்தை செய்வது சிரம சாத்தியமாக இருக்கும்.

2. மற்றொரு வகையான தலைவர்கள் இருக்கிறார்கள். போடப்பட்ட ஒழுங்குகளுக்குள்ளிருந்து அங்குலமும் அப்பால் இப்பால் நகர மாட்டார்கள். மிகவும் இறுக்கமான தலைவர்கள். சூழ்நிலைகள் மாறினாலும்... பாதிப்புகள், அசாதாரணங்கள் என்று எது நடந்தாலும் இவர்கள் தமது நிர்வாக ஒழுங்குகளுக்குள் இறுக்கமாகவே இருப்பார்கள். காரணங்கள், நியாயங்கள் அனைத்திற்கும் அவர்கள் கூறும் ஒரே பதில், அது எனக்குத் தெரியாது. இதுதான் சட்டம்..

இவர்கள் கருணை காட்ட மாட்டார்கள்; இறுக்கத்தை கைவிட மாட்டார்கள். இத்தகையவர்களிடம் வேலை செய்பவர்கள் அதிருப்தியுடன் வேலை செய்வார்கள் அல்லது அதிருப்தியுடன் வெளியேறுவார்கள்.

3. மற்றொரு வகைத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் வேறு ஒரு வகையான இறுக்கம் இருக்கிறது. அவர்கள் மிகவும் கவனமாக தமக்கு வசதியானவர்களை நெருக்கிக் கொள்வார்கள். அதாவது, தன்னுடன் முரண்படாதவர்களை அருகில் வைத்துக் கொள்வார்கள்; மற்றவர்களைகவனமாகத் தூரத்தில் வைத்துக் கொள்வார்கள். சமூகத்திற்கு இன்றியமையாத பணிகளை விட தனது ஆர்வத்துக்கும் ஈடுபாட்டுக்கும் எவை பொருத்தமாக இருக்கின்

றனவோ அவற்றுக்கே முக்கியத்துவம் கொடுப்பார்கள். அத்தகைய வேலைகளுக்கு உப குழுக்களும் திட்டங்களும் இவர்களிடமிருக்கும். தமது ஆர்வத்துக்கு அப்பால் ஒரு வேலையை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டால் அந்த வேலையை சரிவரச் செய்யாத ஒரு குழுவை நியமித்து விடுவார்கள். அந்தக் குழு இறுதிவரை இயங்கவே மாட்டாது.

சமூகத்தில் இன்ன இன்ன வேலைகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது என்று அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டால் அந்த ஆலோசனைகளுக்கு அரைக் காது கொடுப்பதே இவர்களது வழக்கமாக இருக்கும். இவர்களது இறுக்கம் சட்டம், ஒழுங்குகளில் விடாப்பிடியாக இருக்கும் இறுக்கமல்ல. தனது தீர்மானங்களுக்கும் விருப்பங்களுக்கும் வெளியே எதுவும் நடந்து விடாமல் கண்ணும் கருத்துமாக இருந்து கொள்ளும் இறுக்கமே அது.

இந்த இறுக்கத்தினாலும் அதிகமானவர்கள் அதிருப்தியடைந்திருப்பார்கள். எனினும், இந்த இறுக்கத்தை நேரடியாக அவர்களால் சுட்டிக்காட்ட முடியாமலிருக்கும். சட்டம், ஒழுங்குகளில் ஒருவர் இறுக்கமாக இருந்தால் அவரது இறுக்கம் இன்னதுதான் என்று குறிப்பாக சுட்டிக்காட்ட முடியுமாக இருப்பது போன்று இதனைக் குறிப்பாக சுட்டிக்காட்ட முடியாது. இந்தத் தலைவர்கள் தமது போக்கைத் தொடருவதற்கு அதுவும் வசதியாக இருந்து விடுகிறது.

4. இன்னும் சில தலைவர்கள் இருக்கிறார்கள். நிர்வாகக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கிவிட்டு... சில முக்கியமான சந்தர்ப்பங்களில் சமூகத்தின் முன்னால் தோன்றிவிட்டுத் தனது வழமையான அலுவல்களில் ஈடுபட்டிருப்பார்கள். தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அதிக நேரத்தை இவர்கள் எடுத்துக் கொள்வதனால் பொது நிகழ்ச்சி நிரலை முன்னின்று வழிநடத்துவது இவர்களுக்கு சிரமமாக இருக்கும். இவர்களுள் நல்லவர்கள் தமது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக தமது தலைமைத்துவ செல்வாக்கைப் பயன்படுத்த மாட்டார்கள். அந்தப் பக்குவமில்லாதவர்கள் பொது நிகழ்ச்சி நிரலூடாக தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலையும் முன்னெடுக்கத் தவறுவதில்லை. அத்தகைய பக்குவமற்றவர்கள் சமூகத்தின் முன்னாலோ அல்லது சட்டத்தின் முன்னாலோ ஒரு நாள் விசாரிக்கப்படுவர்.

5. மற்றுமொரு வகையான தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லத் தெரியுமே தவிர கேட்கத் தெரியாது. தாம் வழங்கும் தொழில் பதவிகள் மற்றும் ஊதியம், ஊதியத்துக்குப் புறம்பான கவனிப்புகள் என்பவற்றுக்கு அடிமைப்பட்ட கூட்டமொன்றையே அவர்கள் தம்மைச் சூழ வைத்துக் கொள்கிறார்கள்.

இவர்கள் பேசினால் இவர்களது சிஷ்யர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். பதில் பேச மாட்டார்கள். அனைத்துக்கும் ஆமாம் சொல்வதுதான் அந்தக் கூட்டத்தின் கடமை. சொன்னதை சரி பிழை பார்க்காமல் அப்படியே செய்து விட்டு வருவார்கள். தலைவரின் பலவீனங்கள் அனைத்தும் அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவற்றை அவர்கள் தமக்குள் இரகசியமாகப் பேசிக் கொள்வார்கள். எனினும், சமூகத்தினுள் பிரவேசித்தால் தலைவரைக் கடவுள் அந்தஸ்துக்கே உயர்த்தி விடுவார்கள்.

இந்த நயவஞ்சகப் புகழ்ச்சி சமூகத்தின் ஒரு கலாசாரமாக மாறிப்போகின்றபோது, சமூகம் பாதாளத்தை நோக்கிச் சரியும் வேகம் அதிகரிக்கிறது.

இத்தகைய தலைவர்களால்தான் பாதாளக் கோஷ்டிகள் உருவாகின்றன. இவர்கள் நல்லதையும் செய்வார்கள்; கெட்டதையும் செய்வார்கள். எனினும், நல்லதைவிட கெட்டது நிச்சயம் குறைவாக இருக்க மாட்டாது.

இன்னும் சில தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மக்களோடு இருப்பது குறைவு அல்லது மக்கள் தலைவர்களது அளவுக்கு மக்களோடு இருப்பதில்லை. எனினும், உயர்ந்த உன்னதமான கொள்கைகளோடும் சமூகத்தை வழிநடத்தக்கூடிய சீரிய சிந்தனைகளோடுமிருப்பவர்கள். சமூகம் எத்தகைய அடிப்படைகளின் மீது இருக்க வேண்டும். சமூக அமைப்பு எத்தகைய கோட்பாடுகள் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பன குறித்து இவர்கள் அதிகம் கரிசனை கொண்டிருப்பார்கள். அது பற்றி அறிவூட்டவும் அழைப்பு விடுக்கவும் செய்வார்கள்.

6. தலைவர்களின் மற்றுமொரு வகையினரை ‘யாப்புத் தலைவர்கள்’ எனலாம். இவர்கள் தங்களையும் தங்களது அதிகாரத்தையும் பாதுகாப்பதற்கென்றே யாப்பு தயாரித்தவர்கள். சட்ட யாப்புகளின் மூலம் சர்வ அதிகாரங்களையும் தமது கைக்குள் வைத்துக் கொள்வதில் இவர்கள் எல்லையில்லாத மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் நலனைப் பாதுகாக்கின்ற யாப்பைவிட தமது அதிகாரத்தைப் பாதுகாக்கின்ற யாப்பே இவர்களுக்கு முக்கியமானது.

இவர்களுள் சிலபோது நல்லவர்கள் வந்து விடுகிறார்கள். அப்போது அதிகாரங்கள் அனைத்தும் நன் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தீயவற்றை இல்லாமல் செய்வதும் அப்போது அவர்களுக்கு இலகுவாகி விடுகிறது. எனினும், நல்லவருக்கு அடுத்து வருகின்ற தலைவர் கெட்டவராக இருந்து விட்டாலோ நிலைமை தலைகீழாகி விடும். சிலபோது இருந்ததைவிட நிலைமை படுமோசமாகவும் மாறலாம். இன்றைய உலகில் இத்தகைய தலைவர்களுக்கு உதாரணங்கள் மலிந்திருக்கின்றன. சிலபோது யாப்புத் தலைவர்களில் பொம்மைத் தலைவர்களும் வருவதுண்டு. அதிகாரங்கள் அனைத்தையும் கையில் வைத்துக் கொண்டு உருப்படியாக எதனையும் செய்யாமல் சென்றுவிடுவார்கள் அவர்கள்.

7. சிம்மாசனத் தலைவர்கள் என்றும் மற்றும் ஒரு வகையினர் உலகில் இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு காலத்தில் ‘யாப்புத் தலைவர்கள்’ போன்று சகல அதிகாரங்க

ளோடும் இருந்தவர்கள்தாம். எனினும், 'முடிக்குரிய அரசர்' 'முடிக்குரிய இளவரசர்' என்ற கௌரவ நாமங்களுடன் சிம்மாசனங்களை மட்டும் தமதாக்கிக் கொண்டு அதிகாரங்களின்றி அரச போகங்களை அனுபவித்து வாழ்கின்றவர்களாக இன்று அவர்கள் மாறியிருக்கின்றார்கள். இவர்களை மியூஸியத்தில் வைக்கப்பட்ட சர்வாதிகாரிகள் என்றுகூடக் கூறலாம். சர்வ அதிகாரங்களும் இல்லாமல் போனாலும் சர்வ சௌபாக்கியங்களும் அவர்களை விட்டுப் போகவில்லை. அவர்களில் சிலர் மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதுமுண்டு- அறிக்கைகள் மாநாடுகள் ஊடாக...

8. அடுத்து உண்மையான மக்கள் தலைவர்கள் பற்றிப் பேசலாம் போலிருக்கிறது. சிம்மாசனத் தலைவர்களுக்கிருப்பதை போல் நேரம் மேல் மிச்சமாக எஞ்சியிருக்கின்ற காரணத்தால் இவர்கள் மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்கு வரவில்லை. மாறாக, மக்கள் நலனை தங்களது உயிரோடு ஒட்டிய ஒரு பண்பாகக் கொண்ட தலைவர்கள் அவர்கள். இவர்களை சேவகர்கள் என்றும் கூறலாம். மக்கள் எங்கே துன்பப்படுகிறார்களோ அங்கே இவர்கள் இருப்பார்கள். மக்களின் பசி இவர்களது பசி; மக்களின் துன்பம் இவர்களது துன்பம்.

இத்தகைய மக்கள் தலைவர்கள் உன்னதமானவர்கள். எனினும், ஒரு சின்ன சறுக்கல் இவர்களுக்கு நிகழலாம். இவர்கள் மக்கள் நலனில் கொண்ட அதீத அக்கறை, மக்களில் பிறிதொரு சாராரை அற்பமாகவும் இழிவாகவும் நோக்க வைத்து விடலாம். அதாவது, மக்கள் நலனில் அக்கறையில்லாதவர்களை இவர்கள் நிராகரித்து விடலாம். அப்போது இவர்களது தொண்டும் பணியும் பாதிப்படையும் நிலை இவர்களாலேயே சிலபோது உருவாக்கப்பட்டு விடுகின்றது.

9. இன்னும் சில தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மக்களோடு இருப்பது குறைவு அல்லது மக்கள் தலைவர்களது அளவுக்கு மக்களோடு இருப்பதில்லை. எனினும், உயர்ந்த உன்னதமான கொள்கைகளோடும் சமூகத்தை வழிநடத்தக்கூடிய சீரிய சிந்தனைகளோடுமிருப்பவர்கள். சமூகம் எத்தகைய அடிப்படைகளின் மீது இருக்க வேண்டும். சமூக அமைப்பு எத்தகைய கோட்பாடுகள் மீது கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பன குறித்து இவர்கள் அதிகம் கரிசனை கொண்டிருப்பார்கள். அது பற்றி அறிவூட்டவும் அழைப்பு விடுக்கவும் செய்வார்கள். இவர்களில் சமூக மாற்றத்துக்குத் தேவையான சிந்தனைகளோடு சீரிய செயற்திட்டமுடையோரும் இருப்பர். அவர்களால் சிலவற்றை சமூகத் தளத்தில் முன்னெடுத்து வெற்றிபெற முடியும். இன்னும் சிலரோ வெறும் கோட்பாடுகளோடு நின்று கொள்பவர்களாக இருப்பர். வெறும் கோட்பாடுகளோடு இருப்பவர்கள் சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்குமளவு செயல்பாட்டுக்கும் களநிலைவரங்களை மாற்றியமைப்பதற்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

10. இதற்கு நேர் எதிராக எந்தக் கொள்கைகளுமில்லாத, கோட்பாடுகளுமற்ற வேறொரு வகைத் தலைவர்கள் களத்தில் இருப்பதையும் நினைவுகூர வேண்டும். அவர்களது ஒரே கொள்கை அலைக்கு ஆட்படுவதாகும். சமூகம் எந்தக் கொள்கைக்கு... எந்தப் போக்கிற்கு... எந்தப் பழக்க வழக்கங்களுக்கு... எந்த சம்பிரதாயங்களுக்கு... ஆட்பட்டிருக்கிறதோ அந்த சமூக அலைக்கு இவர்களும் ஆட்படுவார்கள். சமூகத்தை அதன் போக்கில் விட்டுத் தானும் அதன் பின்னால் போவதுதான் இந்த தலைவர்களது பண்பும் கொள்கையுமாக இருக்கும். சமூகம் மாறினால் சிலபோது இவர்கள் மாறுவார்கள். சமூகத்தில் எந்தப் போக்கிற்கு அதிகம் செல்வாக்கு இருக்கிறதோ அந்தப் போக்கை இவர்கள் சரி காண்பார்கள். சமூகம் மாற்றம் காண வேண்டும் என்பதைவிட தங்களது இடம், செல்வாக்கு என்பன மாற்றம் காணாதிருக்க வேண்டும் என்பதில் இவர்கள் குறியாக இருப்பார்கள்.

11. இவர்கள் அனைவருக்கும் அப்பால் மற்றொரு வகைத் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களை 'வெகுசனத் தலைவர்கள்' எனலாம். இவர்கள் அனைவரோடும் நெருங்கியிருப்பார்கள்... அனைத்துத் தரப்பினருடனும் உறவைப் பேணுவார்கள்... மக்கள் கூடும் இடங்களில் தாமும் இருந்து கலந்து சிறப்பித்துக் கொள்வார்கள். யாரையும் சார்ந்து, சேர்ந்து நடந்துகொள்ள மாட்டார்கள். அனைவருடனும் நல்லவர்களாக இருந்து கொள்ளவே முயற்சிப்பார்கள். எனவே, அனைவருடனும் நலம் என்பதைத் தவிர இவர்களிடம் வேறு ஒரு கொள்கை இருக்க மாட்டாது. அதனால் இவர்களை வெறும் மனிதர்கள் என்றுகூடச் சொல்லலாம். கண்டவர்கள், கதைப்பவர்களுடன் யார் யாருக்கு எது பொருத்தமோ அதனைக் கதைத்துவிட்டு செல்லும் சாணக்கியம் இவர்களிடம் இருக்கும். தங்களைப் பற்றிப் பிறர் தப்பெண்ணம் கொள்ளக் கூடாது என்பதில் இவர்கள் தீவிர கவனமுடையவர்கள். இவர்களால் சமூகத்திற்கு பயன்கள் கிட்டுவது குறைவாகவே இருக்கும். எனினும், ஒரு பயன் நிச்சயமாகக் கிட்டும். இவர்களால் சமூகத்திற்கு எந்த நெருக்கடியும் தொல்லையும் ஏற்பட மாட்டாது.

12. மற்றொரு வகையைச் சேர்ந்த வித்தியாசமான தலைவர்கள் இருக்கிறார்கள். இவர்களை எதிர்க்கட்சித் தலைவர்கள் எனலாம். அதாவது அனைத்தையும் எதிர்க்கும் கட்சிகளின் தலைவர்கள். இவர்களுக்கென்று ஒரு போக்கு இருக்குமானால் அது- ஏனைய கட்சிகளையும் தலைவர்களையும் எதிர்த்துக் கொண்டிருப்பதுதான். இவர்கள் ஆளும் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தபோதிலும் பிறரை எதிர்த்துக் கொண்டிருப்பதுதான் இவர்களது வேலையாக இருக்கும். பிறர் நன்மைகள் செய்வதையும் எதிர்ப்பார்கள்; தவறுகள் செய்தாலும் எதிர்ப்பார்கள். ஏனையோரைத் திருத்தும் நன்னோக்குகள் இவர்களிடம் குறைவாகவே இருக்கும். இவர்கள் சமூகத்தில் பிரபல்யம் பெறுவது இவர்களது எதிர்ப்புக் குணத்தினால்தான்.

இவ்வாறு இன்னும் வகை வகையான தலைவர்கள் சமூகத்தில் இருக்கிறார்கள், இன்று மக்களைவிட தலைவர்கள் அதிகரித்துவிட்ட காலம். அதனால் அவர்களது வகையறாக்களை அளந்து முடிப்பது சிரமம்.

மேலே கூறப்பட்ட இயல்புகளைக் கொண்ட தலைவர்கள் அவர்களுக்கென்று சொல்லப்பட்ட பண்புகளோடு மாத்திரம் இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. சிலபோது

ஒரு வகையைச் சார்ந்த தலைவர்களிடம் மற்றொரு வகையைச் சார்ந்தவர்களின் பண்புகளும் சேர்ந்திருக்கலாம். உதாரணமாக: 3,4ஆம் வகையைச் சேர்ந்த தலைவர்களின் குணங்கள் சிலபோது ஒரு தலைவரிடத்தில் இருக்க முடியும். அதேபோன்று இன்னும் சில வகையைச் சேர்ந்தவர்களிடம் மற்றுமொரு வகையைச் சேர்ந்த பண்புகள் இருப்பது சாத்தியமில்லை என்றும் கூறலாம். உதாரணமாக 11 ஆவது வகையைச் சேர்ந்த தலைவர்களிடம் 12 ஆவது வகையைச் சேர்ந்தவர்களின் பண்புகள் அறவே இருக்காது.

எனவே, தலைமைத்துவப் பண்புகளை இன்னாருக்கு இது எனப் பகிர்வது நூறு வீதம் பொருத்தத்திலல்ல. 8ஆம் 9ஆம் வகையைச் சேர்ந்த தலைமைத்துவப் பண்புகள் ஒன்றையொன்று வேண்டி நிற்கின்ற பண்புகளாகும். 8ஆம் வகைத் தலைவர்கள் 9ஆம் வகைப் பண்புகளைத் பெறுவதில் குறைவான அக்கறை கொண்டிருந்தாலும் 9ஆம் வகைத் தலைவர்கள் 8ஆம் வகைப் பண்புகளைப் பெறுவதில் தீவிர கவனமுடையவர்களாக இருப்பார்கள். 10ஆம் வகைத் தலைவர்களைப் பொறுத்தவரை அவர்களிடத்தில் எந்த உன்னதமான பண்புகளும் ஒட்டிக்கொள்ள மாட்டாது. அவர்களாக அவர்களது நலன் கருதி சில நல்ல பண்புகளைத் தம்மீது ஒட்டிக் கொண்டாலே தவிர.

இவ்வாறு தலைவர்களின் வகைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எப்போதும் ஒரு தலைவர் தன்னால் எது முடியும், எது முடியாது என்பதை தனக்குக் கீழ் இருப்பவர்களுக்கு புரிய வைப்பது நல்லது. அப்போது அவரது பண்புகளை விளங்கிய நிலையில் அவருக்குக் கீழ் இருப்பவர்கள் அவரோடிணைந்து பணியாற்றுவார்கள். அது அசௌகரியங்களையும் குழப்பங்களையும் தவிர்க்க உதவுகின்றது. தலைவர்கள் தங்களைப் பற்றி தாமும் அறியாமல் பிறருக்கும் புரிய வைக்காமல் பயணிப்பது அவர்கள் எந்த எல்லைக்குள் தலைமைத்துவத்தை வழங்குகிறார்களோ அந்த எல்லைக்குள் சிலபோது பூகம்பத்தையும் குழப்பத்தையும் உருவாக்கலாம். அதனால் தலைவர்கள் மகிமை இழக்கிறார்கள். அவர்களை மக்கள் வெறுக்கவும் பழகி விடுகிறார்கள்.

தலைவர்கள் வரிசையில் எத்தனை தலைவர்கள் பற்றிப் பேசினாலும் நிறைவு காண முடியாது. ஒரு தலைவரைப் பற்றிப் பேசாவிட்டால், அவர்தான் அல்லாஹ்வும் அல்லாஹ்வின் தூதரும் பாராட்டிய நீதியான தலைவர். இந்தத் தலைவரின் அந்தஸ்து பற்றி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொன்ன செய்தி அற்புதமானது. சொன்னார்கள்...

"நிழலே இல்லாத மஹ்ஷர் பெரு வெளியில் ஏழு வகையான மனிதர்களை அல்லாஹ் தனது அர்ஷின் நிழலில் அமர வைப்பான். அவர்களுள் முதலாமவர்தான் நீதியான தலைவர்."

*13. நீதியான தலைவர்:*

நீதியான தலைவர் பற்றி விளக்குவதற்கு ஒரு வசனம் போதுமானது என்று கருதுகின்றேன். நீதியான தலைவர் ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைப்பார் என்பதே அந்த விளக்கமாகும். காரணம், அநீதிக்கு இஸ்லாம் கூறும் விளக்கம் இதற்கு நேர் எதிரானது. ஒவ்வொன்றையும் இடம் மாற்றி வைப்பதே அநீதி.

இவ்வாறு சொல்லும்போது ஒவ்வொன்றுக்குமுரிய இடத்தைத் தீர்மானிப்பவர் யார் என்ற கேள்வி பிறக்கிறது. ஒவ்வொரு மனிதனும் தனது ஆசாபாசங்களுக்கேற்ப, விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஒவ்வொருவருக்குமான இடத்தைத் தீர்மானித்தால் அநீதி அதன் உச்ச கட்டத்திற்குச் சென்று விடும். அதனை அவர் நீதி என்று பறைசாற்றுவார். சமூகம் அநீதிகளின் பிடிக்குள் இறுகிக் கொண்டே போகும். இதுதான் இன்றைய உலகின் காட்சியாகும்.

எனவே, ஒவ்வொன்றுக்குமுரிய இடத்தைத் தீர்மானிக்கும் வேலையை மனிதன் செய்யக்கூடாது. அவ்வாறு செய்பவர்களுக்கு அல்லாஹ் கடும் எச்சரிக்கை விடுக்கின்றான்.

"அநியாயக்காரர்களுக்கு அல்லாஹ் கடும் வேதனையை சித்தப்படுத்தி வைத்திருக்கின்றான்." *(6: 31)*

எனவே, இடம் தீர்மானிக்கும் பொறுப்பை அல்லாஹ்வுக்கு விட்டுவிட வேண்டும். அவனது வழிகாட்டலுக்கேற்ப தலைவர்கள் ஒவ்வொன்றையும் அதனது இடத்தில் வைத்துப் பராமரிக்க வேண்டும். அப்போது ஏற்கனவே சொல்லப்பட்ட அனைத்துத் தலைவர்களிடமும் உள்ள நல்ல பண்புகள் ஒன்றுசேர்ந்து அவர்களிடம் குடிகொண்டு விடும். அனைத்து மோசமான பண்புகளும் அவர்களைவிட்டு அகன்று போய்விடும். உன்னதமான தலைமைத்துவப் பண்புகள் பெயர்களிலும் பட்டங்களிலும், பதவிகளிலும் அந்தஸ்துகளிலும், பரிவாரங்களிலும் ஆடை அலங்காரங்களிலும் பிரதிபலிப்பவை அல்ல, விவகாரங்களைக் கையாண்டு சமூகத்தை குழப்பங்கள், மயக்கங்கள், தெளிவின்மைகள், சந்தேகங்கள், பித்தலாட்டங்கள் இல்லாத பிரகாசமான பாதையில் வழிநடத்திச் செல்லும்போதே உன்னதமான தலைமைத்துவப் பண்புகள் பிரகாசிக்கின்றன. அப்போது அந்தப் பண்புகளைப் பலரும் பின்பற்றுவார்கள்; போற்றுவார்கள்.

அல்லாஹ்வின் தூதர் பாராட்டிய நீதியான தலைவருக்கு, பளிச்சென்று படுகின்ற முதல் உதாரணம் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களே! நீதியைப் பற்றிப் பேசினால் அங்கு உமர் பிரசன்னமாகி விடுவார். காரணம், அவர் நீதியை மறக்கவில்லை; நீதி அவரை மறக்கவில்லை. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விட நீதியில் உன்னதமானவர் உமர் அல்லர் என்றாலும், நபி அந்தஸ்து இல்லாத நிலையில் நீதியோடு வாழ்ந்த மகத்துவம் அன்னாருக்கு இருக்கிறது. இன்றைய தலைவர்களும் நபி அந்தஸ்து இல்லாதவர்கள் என்பதை உணர்ந்திருக்க வேண்டும். மக்களும் அவர்களுக்கு நபி அந்தஸ்தைக் கொடுக்காதிருக்க வேண்டும். தலைவர்களுக்கு நபி அந்தஸ்தையல்ல; கடவுள் அந்தஸ்தைக் கொடுக்கின்ற காலம் இது.

நீதியான தலைவர் அதிகாரத்தை உரிய இடத்தில் வைத்துப் பயன்படுத்துவார். தனது நலனுக்காக அதனைப் பயன்படுத்த மாட்டார். சமூகத்தை உரிய இடத்தில் வைத்து அதன் தேவைகளை நிறைவு செய்வார்.

(57ஆம் பக்கம் பார்க்க)

# மாலைதீவு ஜனாதிபதித் தேர்தல்:
## இரண்டாம் சுற்றுக்காக காத்திருப்போம்!

▲ மாலைதீவிலிருந்து அபூ யாஸிர் ▲

*இன்று* முஸ்லிம் நாடுகளில் ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தல்களில் இஸ்லாமிய இயக்கங்கள், இஸ்லாமியவாதிகள் வெற்றிவாகை சூடுவதைப் பரவலாக அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. ஆனால், நூறு வீதம் முஸ்லிம்கள் வாழும் எமது அயல் நாடாகிய மாலைதீவில் நிலைமை வித்தியாசமாக அமைந்துள்ளது. இங்கு கடந்த 7ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றில் நான்கு பேர் போட்டியிட்டனர்.

1. தற்போதைய ஜனாதிபதி முஹம்மத் வஹீத் ஹசன் மனுக்.



“வஹியும் ஹதீஸும் இல்லாத ஒரு நவீனமயப்படுத்தப்பட்ட இஸ்லாம் மார்க்கமே இன்றைய உலகுக்குத் தேவைப்படுகிறது. இந்த நவீன உலகில் ஒரு மனிதன் எப்படி தூங்க வேண்டும் என்பதையும் ஹதீஸ்களில் தேட வேண்டிய அளவுக்கு அல்லது ஒரு ஷெய்கிடம் கேட்டு அறிய வேண்டிய அளவுக்கு இஸ்லாம் புழமை வாய்ந்ததாக உள்ளது” எனக் கூறி டென்மார்க் மக்களின் பாராட்டைப் பெற்றவர்.



வஹீத் ஹசன்



காசிம் இப்றாஹீம்





யாமின் அப்துல் கையூம்



முஹம்மத் நஷீத்

2. பெரும் செல்வந்தரும் சமூக சேவையாளரும் பரோபகாரியுமான காஸிம் இப்றாஹீம்.

3. முப்பது வருட காலம் மாலைதீவை ஆட்சி செய்த மஃமூன் அப்துல் கையூமின் சகோதரர் யாமின் அப்துல் கையூம்.

4. ஐந்து வருடங்களுக்கு முன் ஜனாதிபதியாக பதவியேற்று மூன்று வருடங்களில் பதவி கவிழ்க்கப்பட்ட முஹம்மத் நஷீத்.

ஆலிம்களின் வழிகாட்டலில் இயங்கும் ‘அதாலத் கட்சி’ இம்முறை காசிம் இப்றாஹீமை ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது. இத்தேர்தலில் 45 வீத வாக்குகளைப் பெற்று முஹம்மத் நஷீத் முதல் இடத்தையும் 25 வீத வாக்குகளைப் பெற்று யாமின் அப்துல் கையூம் இரண்டாவது இடத்தையும் 24 வீத வாக்குகளைப் பெற்று காசிம் இப்றாஹீம் மூன்றாம் இடத்தையும் தட்டிக் கொண்டுள்ளனர். தற்போதைய ஜனாதிபதி வெறும் 5 வீத வாக்குகளை மட்டும் பெற்று படுதோல்வி அடைந்துள்ளார்.

தேர்தலில் எவரும் 50% வாக்குகளைப் பெறாததன் காரணத்தினால் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது. செப்டம்பர் 28ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் சுற்று தேர்தலில், தோல்வியுற்ற மூவரும் யாமின் அப்துல் கையூமின் தலைமையில் 45% வாக்குகளைப் பெற்று முன்னணியில் நிற்கும் நஷீதுக்கு எதிராக களம் இறங்கவுள்ளனர்.

ஆனால், காஸிம் இப்றாஹீம், முஹம்மத் வஹீத் ஹஸன் ஆகியோரது ஆதரவாளர்களில் ஒருதொகையினர் யாமின் அப்துல் கையூம் நாட்டின் ஜனாதிபதியாக வருவதை எதிர்ப்பவர்கள். எனவே, இரண்டாம் சுற்றில் நஷீத் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இம்முறை நஷீதின் தேர்தல் சுலோகமாக (Motto) இருந்தது, Entertainment without fear ‘அச்சமற்ற பொழுதுபோக்கு’ என்பதாகும்.

நஷீதை ஆட்சிக் கதிரைக்குக் கொண்டுவருவதில் முக்கிய பங்காளிகளாக இங்கிலாந்தின் கன்ஸவேர்டிவ் கட்சி, அங்கிலிக்கன் திருச்சபை(Church of England) இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் செயல்படுகின்றன. முதல் சுற்றில் வெற்றி பெற்ற நஷீதை இஸ்ரேலியப் பத்திரிகை ஒன்று ‘இஸ்ரேலின் நண்பன்’ என வாழ்த்தியுள்ளது. இங்கிலாந்தில் உள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயம் தமது பணிகளை மாலைதீவில் மேற்கொள்வதற்கு நஷீதின் அரசு ஒத்துழைப்பு வழங்கும் என நம்பிக்கை வெளியிட் டுள்ளது.

நஷீத் இஸ்லாம் பற்றிய அடிப்படை அறிவோ இஸ்லாம் கூறும் ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றுபவரோ அல்ல. இஸ்லாமிய ஷரீஆ சட்டங்கள் இன்றைய நவீன உலகுக்கு பொருத்தமற்றது என வாதிப்பவர் அவர். நபி (ஸல்லல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் திருமணங்களைக் கேலி செய்பவர். நபியவர்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் கேலிச் சித்திரம் வரைந்த டென்மார்க் நாட்டின் ஒரு சர்வ கலாசாலையில் அண்மையில் உரை நிகழ்த்தும்போது, "வஹியும் ஹதீஸும் இல்லாத ஒரு நவீனமயப்படுத்தப்பட்ட இஸ்லாம் மார்க்கமே இன்றைய உலகுக்குத் தேவைப்படுகிறது. இந்த நவீன உலகில் ஒரு மனிதன் எப்படி தூங்க வேண்டும் என்பதையும் ஹதீஸ்களில் தேட வேண்டிய அளவுக்கு அல்லது ஒரு ஷெய்கிடம் கேட்டு அறிய வேண்டிய அளவுக்கு இஸ்லாம் பழமை வாய்ந்ததாக உள்ளது" எனக் கூறி டென்மார்க் மக்களின் பாராட்டைப் பெற்றவர்.

"தங்களது நாளாந்தக் கடமைகளை முடித்து களைப்புற்று வீடு திரும்பும் மக்கள் சுய நினைவிழந்து மகிழ்ச்சியாக இருப்பதற்காக வெள்ளையர்கள் போன்று சற்று மதுபானம் அருந்துவது ஒன்றும் தவறானது அல்ல" என்று நஷீத் ஜனாதிபதியாக இருக்கும்போது கருத்துத் தெரிவித்திருந்தார்.

உண்மையில் நஷீத் வெற்றி பெறுவதற்கும் நஷீத் போன்ற சிந்தனைப் போக்குடையோருக்கு மக்கள் செல்வாக்குக் கிடைப்பதற்கும் முக்கிய காரணம், முப்பது வருடங்களாக மக்களை அடக்கி ஒடுக்கி தூய இஸ்லாத்தைப் பின்பற்ற விடாது தடுத்து, தான் சொல்வதுதான் இஸ்லாம் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்திய மஃமூன் அப்துல் கையூமையே சாரும். அவர் பாடசாலைகளில் நரக வேதனை கப்ருடைய வேதனைகள் பற்றிப் பேசக் கூடாது; அவை மாணவர்களை மனோரீதியாகப் பாதிக்கக்கூடியது என தத்துவம் பேசி ஆலிம்களை, இஸ்லாமிய அழைப்பாளர்களை, நிகாப் அணிந்த பெண்களை, தாடி வைத்த ஆண்களை சிறைப்படுத்தி கொடுமை செய்து, இசை நடனம் என்பன இஸ்லாம் அனுமதிப்பவை எனக் கூறி மக்களை இஸ்லாத்தில் இருந்து அந்நியமாக்னார்.

கையூமின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட மேற்கத்தேய சிந்தனைக் கலாசாரத்தினால் கவரப்பட்ட, இஸ்லாத்திலிருந்து தூரமாகிய இன்றைய இளைய தலைமுறையினரே நஷீதின் வாக்காளப் பெருமக்கள். உல்லாசமான வாழ்வு, கட்டுப்பாடில்லாத ஆண்- பெண் உறவு, மது, இசை நடனம், விரும்பிய மதத்தைப் பின்பற்றும் சுதந்திரம் இவற்றை ஆசிக்கும் இளைய பரம்பரைக்கு நஷீதிடம் இருந்து கிடைக்கப்பெற்ற உத்தரவாதமும் கையூமின் முப்பது வருட சர்வாதிகார ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்த வீரன் என்ற மனப்பதிவும் அடிமட்டத்தில் உள்ள மக்களுடனும் நெருங்கிப் பழகும் நஷீதின் பண்பும்தான் அவரின் வெற்றிக்கான காரணிகள்.

நூறு வீதம் முஸ்லிம்கள் வாழும், ஒரே மொழியைப் பேசும், எவ்வித வன்முறைகளும் அற்ற இந்த அழகிய அமைதியான தீவின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே உள்ளது.





# வெளிவந்து விட்டது

- அருட்பேறு பெற்றவர்களின் பண்புகள் (தப்ஸீர் விளக்கவுரை)
- கலாநிதி யூசுப் அல் கர்ழாவியின் குத்பாப் பேருரைகள்
- விலை: 130.00
- அஷ்ஷெய்க் அஷ்கர் அரூஸ் (நளீமி) B.A





மியன்மார் - சிரியா
எரியும் இரு தேசங்கள்
விலை: 200.00
ஆசிரியர்: றவூப் ஸெய்ன்

| | |
|---|---|
| 1. நினைவாற்றலை வளர்த்தல் (மாணவர்கள், ஆசிரியர்களுக்கான ஒரு வழிகாட்டி நூல் | - 250.00 |
| 2. அன்றாடவாழ்வில் அனைவருக்கும் உளவியல் | - 250.00 |
| 3. அஸ்ஸீரா வத்தாரிக் (மாணவர் கையேடு | - 250.00 |
| 4. கற்றலில் மாணவர்களுக்கான தீர்வுகள் ( ஓர் உளவியல் நோக்கு) | - 150.00 |
| 5. பூகம்பம் | - 220.00 |
| 6. இஸ்லாமிய எழுச்சிப் போராளிகள் (பாகம் 1) | - 350.00 |
| 7. இமாம் ஹஸனுல் பன்னாவின் அழகிய அறிவுரைகள் பத்து | - 150.00 |
| 8. சந்தர்ப்ப துஆக்கள் | - 75.00 |
| 9. அறபுலகின் மக்கள் எழுச்சி | - 250.00 |
| 10. பெரிய மஃஸூராத் | - 120.00 |
| 11. நாளும் ஓத நபிகளாரின் திக்ர்கள் | - 20.00 |
| 12. பித்ஆ-ஸுன்னா ஓர் ஆய்வு | - 135.00 |

**ISLAMIC BOOK HOUSE**
77, Dematagoda Road, Colombo-09 T.P. 011 2684851, Fax: 011 2688102



முஹம்மத் ஸகி பவுஸ் (நளீமி)
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை
zackymfm@gmail.com



**பேராசிரியர் நோம் சோம்ஸ்கி**
**பிறப்பு:** 1928 டிசம்பர் 28
அரசியல் ஆய்வாளர், மொழியிய லாளர், தத்துவவியளாளர், சமூக செயற்பாட்டாளர்
**இனம்:** யூதம்
1955ஆம் ஆண்டு பல்ஸில்வேனியா பல்கலைக்கழகத்தில் தனது கலாநிதிப் பட்டத்தை பூர்த்தி செய்தார். ஹாவார்ட் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றியவர்.
1967இல் அமெரிக்காவின் வியட்நாம் ஆக்கிரமிப்பை எதிர்த்ததனால், முதல் முறையாக சர்வதேச ஊடகங்களின் கவனயீர்ப்பைப் பெற்றார். அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அரசியலை விமர்சித்ததற்காக பல தடவை சிறைகள் பிடிக்கப்பட்டார். நூறுக்கும் மேற்பட்ட நூல்களை பல்வேறு துறைகளிலும் எழுதியுள் ளார். உலகின் 37 முதல்தர பல்கலைக்கழகங்கள் இவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் கொடுத்து கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் ஆதிக்க அரசியலை தோலுரிக்கும் சிந்தனையாளர்
# நோம் சொம்ஸ்கி

*அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு* மற்றும் அடித்து நொறுக்கும் அரசியல் கலாசார வரலாற்றில் 2013ஆம் ஆண்டு முக்கியமானதொரு திருப்புமுனை எனலாம். இந்த வருடத்துடன் ஈராக்கை அமெரிக்கா ஆக்கரமித்து பத்து வருடங்கள் நிறைவு பெறுகின்றன; ஆப்கானை அமெரிக்கா ஆக்கிரமித்து பதின்மூன்று ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இன்னும், இலத்தீன் அமெரிக்காவில் அமைந்துள்ள சிலி நாட்டில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இக்ஸல்வடோர் அலன்டேயை, அமெரிக்காவின் உளவுப் பிரிவு விரட்டியடித்த நிகழ்வின் 40வது வருடத்தை 2013ஆம் ஆண்டு பூர்த்தி செய்கிறது. அது மாத்திரமின்றி, அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிங்டனின் ஏகாதிபத்தியக் கும்பல் "ஒஸ்லோ உடன்படிக்கை *-1993*" என்ற பெயரில் பலஸ்தீனின் சுதந்திரத்தை நரித்தனமாக திருடிய நிகழ்வின் 20 வருட நிறைவை முன்னிட்டு பலஸ்தீன அகதிகள் சென்ற மாதம்தான் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். மேலும் எகிப்தில் நீதியான தேர்தலினூடாக தெரிவு செய்யப்பட்ட முஹம்மத் முர்ஸியை எகிப்திய இராணுவம் அமெரிக்காவின் உதவியுடன் விரட்டியடித்து சில மாதங்களே ஆகின்றன. போதாக்குறைக்கு ஆதிக்க அரசியல் வரலாற்றில் இன்னோர் அத்தியாத்தை சிரியாவில் ஆரம்பிப்பதற்கான தருணத்தை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா எதிர்பார்த்தவண்ணமிருக் கிறார்.

என்றாலும், அமெரிக்காவின் ஆதிக்க அரசியலின் பின்புலத்தைப் புரிந்து கொள்வது மிகவும் சிரமமானது. எனவேதான் நேரடியாக அமெரிக்கா பேசும் வார்த்தைகளில் அல்லாமல், அவ்வார்த்தைகளுக்கு இடையிலேயே யதார்த்தத்தைத் தேட வேண்டும் (the truth is between the lines in the American politics) என அரசியல் ஆய்வாளர்கள்

அமெரிக்காவைப் பற்றிக் குறிப்பிடுவார்கள்.

மிக அண்மைக் காலமாக அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்க அரசியல் வலைபின்னலின் பின்புலம் பற்றிய பல் வேறு ஆச்சரியமான கருத்துக்களை அமெரிக்க சிந்தனையாளர் பேராசிரியர் நோம் சொம்ஸ்கி முன்வைத்து வருகிறார். அவரின் புரட்சிகரமான கருத்துக்கள் ஊடக உலகை ஆக்கிரமிக்க ஆரம்பித்து விட்டன. குறிப்பாக அமெரிக்காவின் அரசியல் கோட்பாடுகள் தொடர்பாகவும் மத்திய கிழக்கின் சமீபத்திய அரசியல் மாற்றங்களில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு சிந்தனை எந்தளவுக்கு, எவ்வாறு செல்வாக்கு செலுத்துகிறது என்பது பற்றியும் ஆழமான உரையாடல்களை நோம் சோம்ஸ்கி நடத்தி வருகிறார்.

**அமெரிக்காவின் ஆதிக்க வரலாறும் அதன் சிந்தனைப் பாங்கும்:**

பேராசிரியர் நோம் சொம்ஸ்கியின் பார்வையில், 1940ஆம் ஆண்டிற்கு பிற்பட்ட அமெரிக்கா மிகப் பயங்கரமான ஆக்கிரமிப்பு அரசாகவே இருந்து வந்திருக்கிறது. அக்காலப் பிரிவில் அமெரிக்கா நடத்திய போர்கள் மற்றும் ஆக்கிரமிப்புக்களின் அளவுக்கு வேறு எந்த தேசமும் நடத்தியதில்லை. கடந்த தசாப்தங்களில் நூறு வீதம் மனித விழுமியங்களுக்கு அப்பாற்பட்ட அரசாங்கங்களாகவே அமெரிக்க அரசாங்கங்கள் இருந்து வந்திருக்கின்றன என்கிறார் பேராசிரியர் சொம்ஸ்கி. உலகையே தன்வசப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆதிக்க வெறியே அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை ஆக்கிரமித்திருக்கிறது. அமெரிக்காவில் ஆட்சிபீடமேறிய சகல ஜனாதிபதிகளும் இந்த வெளிநாட்டுக் கொள்கையையே செயற்படுத்தி வந்துள்ளனர்.

ஜோன் கெனடி வியட்நாமை ஆக்கிரமித்தார். 1945 இல் இந்தோனேசியாவின் வளங்களையெல்லாம் சுரண்டினார். ரொனல்ட் ரீகன் ஈரான் மீதான சதாமின் இரசாயனத் தாக்குதலை அற்ப அரசியல் இலாபத்திற்காக நியாயப்படுத்தினார். 1990 களில் முதலாம் ஜோர்ஜ் டப்ளியு புஷ் ஈராக்கிற்கு எதிரான வளைகுடாப் போரை துவக்கி வைத்தார். கொங்கோவின் ஜனாதிபதியை விரட்டியடித்தார். 2000ஆம் ஆண்டு பதவியேற்ற இரண்டாம் புஷ்ஷின் சிறப்பம்சம் என்னவென்றால், அமெரிக்கா ஆதிக்க வெறி பிடித்த நாடு என்பதனை தெளிவாக காங்கரஸில் பேசியவர் என்பதாகும். அவரும் 2003ஆம் ஆண்டு ஈராக்கை ஆக்கிரமித்தார். ஆப்கானை அடியோடு சின்னாபின்னமாக்கினார்.

ஒபாமா ஒன்றும் விதிவிலக்கல்ல. புஷ்ஷை விட பயங்கரமான போரை நடத்துபவர்தான் பராக் ஒபாமா. காரணம், புஷ் வெளிப்படையாக பல இலட்சம் மக்களை கொன்று குவித்தார். ஒபாமா பல இலட்சம் மக்களை தினமும் ஆளில்லா விமானம் என்ற போர்வையில் பாகிஸ்தான், யமன், ஆப்கானிஸ்தான் மற்றும் சோமலியா போன்ற நாடுகளில் கொன்று குவிக்கிறார். ஆனால், இதனை உலகம் இன்னும் பாரதூரமாகப் பார்க்கவில்லை என்கிறார் நோம் சோம்ஸ்கி.

அமெரிக்காவின் உள்ளக அரசியலில் நிபுணத்துவம் பெறாதவர்களுக்கு அமெரிக்காவின் செயற்பாடுகள் ஆச்சரியமானதாகவும் மனித நேயம் மிக்கதாகவும் தோன்றலாம். ஆனால், அமெரிக்கா உலகின் மிகப் பாரிய வன்முறை தேசம் என்பதனை அதன் இராணுவத் தலைமைப்பீடமான பென்டகனில் உள்ள ஓர் அதிகாரியுடன் பேசினால் புரிந்து கொள்ளலாம் என்கிறார் பேராசிரியர் சொம்ஸ்கி. இன்னும் அமெரிக்கா தான் 60 வருடமாக செய்து வரும் அரசியல் காய்நகர்த்தல்களை சொந்த நாட்டு மக்களுக்கும் காண்பிக்கவில்லை. அமெரிக்காவின் பொது மக்களினதும், உலகத்தின் மனித உரிமை குழுக்களினதும் கண்களைத் துடைப்பதற்காக அழகான நான்கு கோட்பாடுகளை வெள்ளை மாளிகை கண்டுபிடித்துள்ளதாக பேராசிரியர் விவரிக்கிறார்.

**உலகப் பாதுகாப்பின் காவலன்** (Anchor of global security)

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அரசாங்கங்கள் தம்மை நியாயப்படுத்துவதற்காக கையாளும் ஒரு கோட்பாடே இது. அவர்கள் மிகத் தந்திரமான முறையில் இந்தக் கோட்பாட்டை அமெரிக்கா மக்கள் மத்தியில் நம்ப வைத்துள்ளனர். எனவேதான் அவர்கள் அமெரிக்காவின் ஆதிக்க அரசியலை சரி காணுகின்றனர்; அல்லது பாரிய எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்கின்றனர். உலக பாதுகாப்பின் காவலன் என்ற வார்த்தையை அமெரிக்காவின் ஊடகங்கள் ஒரு நாளைக்கு நூற்றுக்கணக்கான தடவைகள் பயன்படுத்துகின்றன. 1991ஆம் ஆண்டு ஈராக் குவைத் மீது ஆக்கிரமிப்புச் செய்தபோது, இந்தக் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டுதான் அமெரிக்கா ஈராக்கை கட்டுப்படுத்தியது. இந்தக் கொள்கையில் மயங்கிய அமெரிக்கர்கள், முதலாம் ஜோர்ஜ் புஷ்ஷின் மிலேச்சத்தனமான வளைகுடா இராணுத் தலையீட்டை கைதட்டி வரவேற்றனர்.

**அமெரிக்கா உலகில் நடத்தும் போர்கள் இனச் சுத்திகரிப்புப் போர்கள் அல்ல** (United States is immune to the charge of genocide)

அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளுக்கு மத்தியில் இந்த நியாயத்தைத் திணித்துள்ளது. அமெரிக்கா தொடுக்கும் எந்த யுத்தத்தையும் யாரும் குற்றம் சாட்டக் கூடாது என்பதே இதன் அர்த்தம். எவரும் கேள்வி கேட்கக் கூடாது. 1990களில் தனக்குப் போட்டியாளராக இருந்த ரஷ்யாவின் வீழ்ச்சியின் பின்னர்தான், அமெரிக்காவின் இப்போலி நியாயம் ஐக்கிய நாடுகள் சபையில் பாரிய வரவேற்பைப் பெற்றது. இன்னும் எதிர்ப்புத் தெரிவித்த சில நாடுகளை அமெரிக்கா தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மற்றைய நாடுகளை வலுக்கட்டாயமாக ஏற்றுக் கொள்ளச் செய்தது என்கிறார் பேராசிரியர் சொம்ஸ்கி.

**உலக நாடுகளைப் பாதுகாப்பது அமெரிக்காவின் பொறுப்பு** (responsibility to protect: R2P Policy)

தனது ஆதிக்க அரசியலை நிலைநாட்டுவதற்காக அமெரிக்கா கண்டுபிடித்துள்ள இன்னொரு சொல்லாடலே இது. கடாபிக்கு எதிரான ஒபாமாவின் ஆக்கிரமிப்பை

ஆதாரப்படுத்த இந்த நியாயத்தையே பென்டகன் முன் வைத்தது. இன்னும் பில்கிளின்டன் கொஸோவோவை ஆக்கிரமித்தார். இரண்டாம் புஷ் ஆப்கானை ஆக்கிரமித்தார். எல்லா ஆக்கிரமிப்பிற்குப் பின்னாலும் அமெரிக்கா சொன்ன ஒரே நியாயம் "responsibility to protect" என்ற வாசகம்தான். அதாவது உலகின் சமாதானம், நீதி, அமைதி, ஜனநாயகத்தைப் பாதுகாப்பது, தீவிரவாதத்தை ஒழிப்பது போன்ற உயர் விழுமியங்கள் அமெரிக்காவுக்கு இறைவன் வழங்கிய பொறுப்பு என்பதே இதன் உள்ளடக்கம். மேற்சொன்னவற்றைப் பாதுகாப்பதற்காக எந்த சர்வதேச நிறுவனத்தினதும் அனுமதியை மீறி போர் நடத்தும் தார்மீக உரிமை அமெரிக்காவுக்கு இருக்கிறது என இக் கொள்கை காண்பிக்க முயற்சிக்கிறது.

2003ஆம் ஆண்டு ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமித்தது சர்வதேச சட்டங்களுக்கு நூறு வீதம் முரணானது. அமெரிக்கா ஈரானைத் தொடர்ந்தும் மிரட்டிக் கொண்டிருப்பதானது, சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் மிகப் பயங்கரமான குற்றம். ஒரு நாட்டை இன்னொரு நாடு அச்சுறுத்தும் வண்ணம் அறிக்கை விடுவதனை சர்வதேச உரிமைகள் கோவை தடை செய்கிறது. ஆனால், உலக நாடுகளைப் பாதுகாப்பது எமது பொறுப்பு என்ற போலி நியாயத்தை ஊடகங்களில் பரப்புவதினூடாக அமெரிக்கா குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பிக் கொள்கிறது என பேராசிரியர் சொம்ஸ்கி பட்டவர்த்தனமாக அமெரிக்காவை விமர்சிக்கிறார்.

**வல்லரசு எப்போதும் தனது வலுச் சமநிலையைப் பாதுகாக்க வேண்டும்** (credibility of world power)

நாம்தான் உலகத்தின் வல்லரசு. வல்லரசுதான் உலகின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டும். இந்த வகையில் வல்லரசின் சக்திச் சமநிலைக்கும் நம்பகத்தன்மைக்கும் (balance of power and credibility) சவால் விடுவது மனித சமூகத்திற்கு செய்யும் குற்றம். ஏனென்றால், வல்லரசு இல்லாவிட்டால் உலகம் அநீதியால் நிரம்பிவிடும். எனவே, எப்போதும் வல்லரசின் வலுச் சமநிலையை பாதுகாப்பது வல்லரசின் மனிதநேயப் பொறுப்பு (humanistic responsibility) என இந்தக் கொள்கை சொல்கிறது. 2000 இற்கு பிற்பட்ட சர்வதேச அரசியல் தளத்தில் அமெரிக்கா தூவி விட்டுள்ள போலிக் கோட்பாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

இந்தக் கோட்பாட்டை ஆதாரம் காட்டியே ஒபாமா சிரியாவைத் தாக்க திட்டமிடுகிறார் என சொம்ஸ்கி குறிப்பிடுகிறார். ஏனென்றால், ஒபாமா 2012ஆம் ஆண்டிலேயே அஸதுக்கு சிவப்புக் கோடு காட்டிவிட்ட (redline) அறிவித்தார். அதாவது அஸத் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தினால், அமெரிக்கா நேரடியாகக் களத்தில் இறங்கும் என வெள்ளை மாளிகை அறிவித்தது. அண்மையில் அஸத் தனது சொந்த நாட்டு மக்களுக்கு எதிராக தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதத்தைப் பயன்படுத்தினார். பின்னர் அமெரிக்க அரசு சிரியாவைத் தாக்கப் போவதாக கர்ஜித்தது. அதற்கு அமெரிக்கா முன்வைத்த நியாயம் என்னவென்றால், இச்சந்தர்ப்பத்தில் அஸதை விட்டு வைத்தால் வல்லரசின் வலுச் சமநிலையும் நம்பகத்தன்மையும் (balance of power and credibility of world power) பாதிக்கப்படும்; வல்லரசை யாரும் மதிக்காமல், உலகில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களையெல்லாம் சந்தைக்கு கொண்டு வருவார்கள் என்பதாகும். ஆனால், இஸ்ரேலிடம் மத்திய கிழக்கின் மிகப் பெரிய இரசாயன ஆயுதக் கிடங்கு காணப்படுகிறது. அதனை தனது வலுச்சமநிலைக்கு எதிரானதாக அமெரிக்கா கருதவில்லை. ஏனென்றால், அது தனது செல்லப் பிள்ளையின் ஆயுதம் ஆயிற்றே.

அதேபோன்று, 1985களில் சத்தாம் ஹுசைன் இரசாயன ஆயுதங்களை வைத்திருந்தார். அதனை அமெரிக்கா அரசு நூறு வீதம் அறிந்திருந்தது. ஆனால், அப்போதைய ஜனாதிபதி ரீகன் அதனை சூசகமாக மூடி மறைத்தார். சத்தாமை தனது வலுச் சமநிலைக்குச் சவாலாக அப்போது கருதவில்லை. காரணம், அதனை சத்தாம் சேமித்து வைத்திருந்தன் நோக்கம், அமெரிக்ககாவினதும் தனது எதிரியுமான ஈரானைத் தாக்குவதற்காகவே.

இப்போது, அமெரிக்கா தனது பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் புதிய பிரயோகம் மொழிப் பயங்கவரவாதம் (linguistic terrorism) ஆகும். பயங்கரவாதத்தின் புதியதொரு பரிமாணத்தை இதனூடாக அமெரிக்கா ஆரம்பித்து வைத்துள்ளதாக நோம் சொம்ஸ்கி குறிப்பிடுகிறார்.

**மத்திய கிழக்கின் அண்மிய அரசியல் நகர்வுகள் தொடர்பாக நோம் சொம்ஸ்கி:**

மத்திய கிழக்கின் அண்மிய அரசியல் நகர்வுகளில் அமெரிக்காவின் ஆதிக்க அரசியல் எவ்வாறு தொழிற்படுகிறது என்பதனையும் சிந்தனையாளர் நோம் சொம்ஸ்கி படம்பிடித்துக் காட்டுகிறார். குறிப்பாக, சிரியாமீது அமெரிக்கா தொடுக்க முயற்சிக்கும் போர், நடைபெற்றுக் கொண்டிருக்கும் பலஸ்தீன்-இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகளின் பின்னணி மற்றும் எகிப்திய இராணுவப் புரட்சி தொடர்பான நோம் சொம்ஸ்கியின் கருத்துகள் ஆழமானவை.

**சிரியா மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு**

சர்வதேச சட்டங்களை எந்தவிதத்திலும் அமெரிக்கா மதிப்பதில்லை என்ற யதார்த்தத்தை ஒபாமாவின் சிரியா மீதான ஆக்கிரமிப்பு முயற்சிகள் மீள் உறுதிப்படுத்துவதாக அவர் குறிப்பிடுகிறார். சர்வதேச சட்டங்களின் அடிப்படையில், இரண்டு சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஒரு நாட்டின்மீது இன்னொரு நாடு போர் தொடுக்கலாம். முதலாவது சந்தர்ப்பம், ஒரு நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தப்படும்போது, அந்நாட்டைப் பாதுகாப்பதற்காக சர்வதேச பாதுகாப்பு சபையின் அனுமதியுடன் இன்னொரு நாடு போர் தொடுப்பது, இரண்டாவது, தனது நாட்டின் அமைதிக்கு நேரடியாக பாதிப்பு ஏற்படும் என உறுதிப்படுத்தப்படும்போது, அமைதியைக் குலைக்கும் குறித்த நாட்டுக்கு எதிராக போர் தொடுப்பது. ஒபாமா இந்த இரண்டு நிபந்தனையையும் புறக்கணித்துவிட்டு சிரியாவைத் தாக்க முற்படுவதாக நோம் சோம்ஸ்கி குறிப்பிடுகிறார்.

(54ஆம் பக்கம் பார்க்க)

# எகிப்து இராணுவப் புரட்சி:

## எதிரிகளும் சவால்களும்



- ஏ. அப்துல் மலிக் -



அல் ஷாமி | ஸாலிம் | ஜமால் நஸ்ஸார்



றாமி ஜான் | பத்ர் | அம்ரு ஹம்ஸாவி | அப்துல் பத்தா பைத்

**எதிரிகள் மக்களா?**

'கிர்தாஸா.' இது எகிப்தின் ஜீஸாவில் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்திலிருந்து சில கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஒரு கிராமம். எகிப்து இராணுவம் இக்கிராமத்தை சுற்றி வளைத்து, இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றமை சர்வதேச ஊடகங் களின் கவனத்தை ஈர்த்துள்ளது. 'கிர்தாஸா' என்றால் படையணி என்று அர்த்தம்.

ஸஹாபி அம்ரு இப்னு ஆஸ் (ரழியல்லாஹு அன்ஹு) எகிப்தைக் கைப்பற்ற இராணுவத்தை வழிநடத்தி வந்தபோது, இப்பிர தேசத்தில் தான் முகாமிட்டிருந்தார்கள். அன் றிலிருந்து 'கிர்தாஸா' எனப் பெயர் பெற்ற இக்கிராமம், எகிப்தின் ஒவ்வோர் இராணுவப் புரட்சியின் போதும் இராணுவப் புரட்சியாளர்களின் அட்டூழியங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தே வந்துள்ளது. இதன் காரணமாக பல பாதகமான விளைவுகளையும் சந்தித்திருகின்றது. கிர்தாஸா வைச் சேர்ந்தவர்களை எகிப்து இராணுத்தில் சேர்ப்பதில்லை. தேசிய ரீதியான எந்த முக்கிய பதவிகளுக்கும் இக்கிராம மக்களுக்கு இட மளிப்பதுமில்லை.

1965ஆம் ஆண்டு, அல்இஹ்வானுல் முஸ் லிமூன்களின் முக்கிய தலைவர் ஒருவரை சிவில் உடையணிந்த பொலிஸார் வலைவிரித்து தேடிவந்தனர். முயற்சி தோல்வி கண்டபோது, திருமண பந்தத்தில் இணைந்து ஒரு வாரமே ஆகியிருந்த அவரது மனைவியை பொலிஸார் கைது செய்தனர். மனைவியைத் தடுத்து வைப் பதன் ஊடாக கணவனை சரணடைய வைக்க பொலிஸார் நாடினர். கைதுசெய்யப்பட்ட அப்பெண் கிராமவாசிகளிடம் உதவி கோரி னார். சிவில் ஆடையில் துப்பாக்கிகளை வைத் திருந்த இராணுவத்தினரை, குண்டர்கள் என எண்ணி மக்கள் அப் பெண்ணை அவர்களிடமிருந்து காப்பாற்றினர்.

இந்த ஒரே காரணத்திற்காக அன்றைய எகிப்தின் அதிபர் கமால் அப்துந் நாஸர் இக்கிராம மக்கள் மீது, இராணுவ நடவடிக்கை மேற் கொண்டு பலரைக் கைது செய்து சித்திரவதை செய்தார். பலர் படு கொலை செய்யப்பட்டனர். அன்று முதல் 'பாதுகாப்பு ரீதியாக அபா யமான கிராமம்' என பெயரிடப்பட்டு, உரிய அரசாங்க உத்தியோகம் கூட இக்கிராமவாசிகளுக்கு வழங்கப்படுவதில்லை.

1944இல் நிதி அமைச்சர் அமீன் உஸ்மானைக் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட, பிற்காலத்தில் எகிப்தின் ஜனாதிபதியாக இருந்த அன்வர் சாதாத் இக்கிராமத்தில்தான் ஒளிந்திருந்தார் எனும் வரலாறும் உண்டு. இன்று, இராணுவப் புரட்சிக்கு எதிரான தலைவர்கள் சிலருக்கு இக்கிராமம் அடைக்கலம் கொடுத்திருப்பதாகக் கூறியே, ஓர் இலட் சத்து அறுபதாயிரம் பேர் வாழும் கிர்தாஸாவுக்கு எதிராக ஜெனரல் ஸீஸி இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆணை பிறப்பித் துள்ளார்.

**ஸய்னாய்**

உலகில் இராணுவப் புரட்சியை மேற்கொண்ட அனைத்து ஜென ரல்களிடம் ஒரு பொதுப் பண்பு காணப்படுகிறது. தமது படைக்கு நிகராக, முழுமையாக ஆயுதம் தரித்த ஓர் எதிரிப்படையை உள்நாட்டில் உரு வாக்கிக் கொள்வதே அது. நிராயுதபாணிகளான அப்பாவிப் பொதுமக்கள் இராணுவப் புரட்சியின் அநீதிக்கு எதிராக குரல் எழுப்பினாலும், அவர்களை ஆயுதம் தரித்தவர்களாக, ஸீஸியின் பாஷையில் "தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுப்பவர்கள்" ஆகக் காட்டுவது புதிய

ஒரு வழக்கமல்ல.

ஆகஸ்ட் 14ஆம் திகதி ராபிஆ அதவிய்யா ஆர்ப்பாட்ட மைதானத்தில் இராணுவப் புரட்சியாளர்கள் மேற்கொண்ட படுகொலைகளுக்கு எதிராக, கூடுதலாக ஆர்ப்பாட்டங்கள் செய்த இடங்களில் கிர்தாஸாவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இதே போக்கை ஸீஸி ஸய்னாய் பிரதேசத்திலும் கட்டவிழ்த்து விட்டுள்ளார். ஸய்னாயில் எகிப்து இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக ஸய்னாய் மக்கள் வரலாறு நெடுகிலும் எதிர்ப்பைத் தெரிவித்தே வந்துள்ளனர். குத்ஸை மீட்பதற்காக இஸ்ரேலுக்கு எதிரான எகிப்திய இராணுவப் படையெடுப்பின்போது இராணுவத்துடன் இணைந்து போராடிய இம்மக்கள், 1967இல் குத்ஸை இழந்த எகிப்து இராணுவம், மீண்டும் குத்ஸை மீட்கப் போராடும் எனும் எதிர்பார்ப்பிலேயே இருந்தனர். இறுதியில் கமால் அப்துந் நாஸர் "குத்ஸை மீட்போம்; குத்ஸை மீட்போம்" என வழங்கிய போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாந்து போயினர். பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேல் புரியும் அட்டூழியங்களால் இஸ்ரேல் எல்லையில் வாழும் ஸய்னாய் மக்களே நொந்து போயினர்.

"காஸாவுக்கு உணவு, எண்ணெய் செல்லும் சுரங்கங்கள் ஸய்னாவிலும் றபஹ்விலும் இடிக்கப்பட்டு, 13 கிலோ மீற்றர் அளவு காஸா எல்லையிலிருந்து மனிதக் குடியேற்றங்கள் இல்லாத பாதுகாப்பு வலயத்தை ஸீஸி அமைத்து வருகின்றார். இந்நடவடிக்கை காஸா மக்களை தண்டிப்பதுடன், இஸ்ரேலிடம் காஸாவை அடிபணிய வைப்பதற்கு வழிகோலுவதாகும்"

குத்ஸ் வீழ்ச்சியடைந்த 1967ஆம் ஆண்டு போரில் இஸ்ரேலை வெற்றி கொண்டதாக ஊடகங்களில் கமால் அப்துந் நாஸர் அறிவித்த பொய்யையும் ஸய்னாய் மக்கள் மறக்கவில்லை. இதனால் மிகவும் மனவேதனைக்குட்பட்டிருந்த ஸய்னாய் மக்களை 1979இல் அன்வர் சாதாத் இஸ்ரேலுடன் செய்து கொண்ட 'கேம்ப் டேவிட்' ஒப்பந்தம் மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. பலஸ்தீனர்களை நிர்க்கதிக்குள் தள்ளிய இந்த உடன்படிக்கையை ஸய்னாய் வாசிகள் பலமாக எதிர்த்தனர்.

இதற்கு அன்வர் சாதாத்தும் ஹுஸ்னி முபாரக்கும் ஸய்னாய் மக்களுக்கு கொடுத்த தண்டனையே அவர்களைப் புறக்கணித்தமை. நவீன எகிப்தின் பெரும்பாலான அபிவிருத்திகளில் ஒரு துளிகூட ஸய்னாய் மக்களுக்கு கிடைக்கவில்லை; இராணுவ மற்றும் தேசிய முக்கிய பதவிகள் எதற்கும் அப்பகுதி மக்கள் சேர்க்கப்படவுமில்லை. சுமார் ஐம்பது வருடங்களாக புறக்கணிக்கப்பட்டு வந்த இந்த மக்கள், ஹுஸ்னி முபாரக்கிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் பலமாக பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. நாற்புறமும் மூடப்பட்டு, இஸ்ரேலின் கொடூரக் கரங்களுக்குள் அகப்பட்டு உணவுத் தடைகளால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் சுமார் இருபது இலட்சம் காஸா மக்களுக்கு நிலக்கீழ் சுரங்கங்கள் வழியாக ஆதரவுக்கரம் நீட்டியவர்களும் ஸய்னாய் மக்களே.

'ஸய்னாவில் பயங்கரவாதம்' என ஸீஸியின் ஊடகங்கள் போலிப் பிரசாரம் செய்வதற்கான காரணம், ஒவ்வொரு நாளும் எகிப்தின் மூலை முடுக்குகளிலிருந்து வெளிக்கிளம்பும் இராணுவப் புரட்சிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலிருந்து மக்களின் கவனத்தை திருப்புவதே. ஸய்னாவில் பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடும் வீரன் ஸீஸி என்பதாகச் சித்திரிக்க எவ்வளவு எத்தனித்தும் சுதந்திர ஊடகங்கள் முகமூடிகளை கிழித்தெறிந்தே வருகின்றன.

இப்பயங்கரவாத நாடகத்தில் அப்பாவிப் பொதுமக்களின் வீடுகள், வயல்கள், வாழ்வாதாரங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

'அபாச்சே' உலங்கு வானூர்திகள் பள்ளிவாசல்கள்மீது தாக்குதல்களை நடத்துகின்றன. வாகனங்கள் எரிக்கப்படுகின்றன. மந்தைகள் கொல்லப்படுகின்றன. இவை அனைத்தும் இராணுவ நடவடிக்கைகளே. இங்கு அத்துமீறிய வன்முறை தலைவிரித்தாடுகிறது. இவை பழிவாங்கும் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டால், நிலைவரம் அரசின் கைகளிலிருந்து நழுவிவிடும். இந்நிலையில், காலா காலங்களுக்கு தொடரும் அனர்த்தங்களும் தீங்குகளும் தோன்றும் என இராணுவப் புரட்சியாளர்களை மூத்த பத்திரிகையாளர் பஹ்மி ஹுவைதி எச்சரித்துள்ளார்.

எதிரிகளுக்கு எதிராக வெளிக்காட்ட வேண்டிய பலத்தை ஸீஸி தனது சொந்த மக்கள்மீது பிரயோகிக்கின்றார். அவரின் எல்லா செயல்களுமே இஸ்ரேலுக்கு மறைமுகமாக வக்காலத்து வாங்குவதகாவே அமைந்துள்ளன என்று மாற்றுக் கொள்கை, திட்டங்களுக்கான மையத் தலைவர் கலாநிதி ஜமால் நஸ்ஸார் சுட்டிக்காட்டியுள்ளார்.

"காஸாவுக்கு உணவு, எண்ணெய் செல்லும் சுரங்கங்கள் ஸய்னாவிலும் றபஹ்விலும் இடிக்கப்பட்டு, 13 கிலோ மீற்றர் அளவு காஸா எல்லையிலிருந்து மனிதக் குடியேற்றங்கள் இல்லாத பாதுகாப்பு வலயத்தை ஸீஸி அமைத்து வருகின்றார். இந்நடவடிக்கை காஸா மக்களை தண்டிப்பதுடன், இஸ்ரேலிடம் காஸாவை அடிபணிய வைப்பதற்கு வழிகோலுவதாகும்" என எச்சரித்த பஹ்மி ஹுவைதி, இஸ்ரேலைத் திருப்திப்படுத்தும் இச்சேவை மானங்கெட்ட ஒரு செயல் எனத் தெரிவித்துள்ளார்.

"இஸ்ரேலுக்கு சேவை செய்து அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் ஆதரவை ஸீஸி சம்பாதிக்க முயற்சிக்கிறார். எனினும் மக்கள் எழுச்சி ஆர்ப்பாட்டங்கள் இத்திட்டத்திற்கு தடையை ஏற்படுத்தி வருகின்றன. ஸீஸி இக்கொடுமைகளுக்காக இவ்வுலகிலேயே பலனை அனுபவிப்பார்" என அல்லாமா யூசுப் அல்கர்ளாவி போன்றோர் பகிரங்கமாகவே எச்சரிதுள்ளனர்.

### முக்கோணச் சவால்கள்

இராணுவப் புரட்சியை நியாயப்படுத்த ஸீஸி

முன்கோண திட்டமிடலை அறிமுகம் செய்துள்ளார். உச்ச நீதிமன்றத் தலைவர் அத்லி மன்சூர் ஸீஸியின் அரசியல் திட்டத்தையும் ஸீஸி முன்மொழிந்துள்ள கட்சிகளுக்கிடையிலான இணக்கப்பட்டையும் ஏற்படுத்துவார்.

நோபல் விருது வென்ற முஹம்மத் பராதி, சர்வதேச அணு சக்தி முகவரமைப்பின் தலைவராக பணியாற்றியவர் என்பதால் ஸீஸியின் இராணுவப் புரட்சி சரியானதே என வெளிநாடுகளில் இராஜதந்திரப் பணியை மேற்கொள்வார்.

உள்நாட்டில் பொருளாதார சரிவை சீர்செய்யும் பணி ஸியாத் பஹாஉத்தீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**இணக்கப்பாடு**

அத்லி மன்ஸூர் ஒரு பொம்மை சுயமாக இயங்கும் அரசியல் சாணக்கியம் அவரிடம் இல்லை. பெரும்பாலான எகிப்தியர்களுக்கு அவரது பெயர்கூட அறிமுகமில்லை. வெளிநாட்டு முக்கியஸ்தர்களில் முக்கியமானவர்கள் ஸீஸியைத் தான் சந்திக்கச் செல்கின்றனர். அரசியல் 'புரட்டகோலில்' (Protocol) ஜனாதிபதி ஆசனத்தில் இருப்பதால், அத்லி மன்ஸூருக்கும் ஒரு ஸலாம் கூறிவிட்டுச் செல்கின்றனர். பெருநாள் போன்ற முக்கிய தினங்களில், அத்லி மன்ஸூர் தேசியத் தொலைக்காட்சியில் தோன்றி ஒரு வாழ்த்துச் செய்தியை, எழுதிக் கொடுத்தவாறே வாசித்துவிட்டுச் சென்று விடுவார்.

ஜனநாயக முறையில் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி முர்ஸியை பதவி கவிழ்த்த ஸீஸி, அடுத்த ஜனாதிபதித் தேர்தல் விரைவில் இடம்பெறும் என்று கூறினார். அரசியல் யாப்பும் சீர்திருத்தப்படும் என்றும் கூறினார். ஆனால், அரசியல் யாப்பு முழுமையாக மாற்றப்படும் என்று கூறவில்லை. அவ்வாறே இஸ்லாமிய சிந்தனைப் போக்குள்ளவர்கள் மீது எவ்வித இராணுவ நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என வாக்களித்தார்.

ஆனால், வழங்கிய எல்லா வாக்குறுதிகளையும் ஸீஸி மீறிவிட்டார். இராணுவப் புரட்சிக்கு எதிராக அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டனர். ஒன்பதாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சிறைகளில் சித்திரவதைகளை அனுபவிக்கின்றனர். எகிப்தின் தற்போதைய கள நிலவரங்களைப் பார்க்கும்போது, ஸீஸிதான் ஜனாதிபதியாக வரவேண்டும் எனக் கோருவோரும் வெளிப்பட்டுள்ளனர். எப்போது ஸீஸி ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க வாய்ப்பு ஏற்படுகிறதோ அப்போதே தேர்தல் நடைபெறும்; அது வரை பல வருடங்களுக்கு ஸீஸி திரை மறைவில் ஆட்சி செய்வார் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

2011 ஜனவரி 25இல் ஹுஸ்னி முபாரக்கை விரட்ட புரட்சி செய்தவர்கள் தனது எதிரிகளே எனக் கருதும் ஸீஸியினால் கொண்டுவரப்பட்டுள்ள நீதிமன்றங்கள் 35 பேருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளன. ஜூன் 30 முர்ஸிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை ஒன்றுகூட்டி, ஸீஸியை அரியாசனம் ஏற்றியவர்களும் இவர்களே. ஆனால், இராணுவம் அரசியலுக்கு வரக்கூடாது. முர்ஸியை வீழ்த்திய பின்னர், அரசியல்வாதிகளிடம் பொறுப்பைக் கையளித்து விட்டு, படை முகாம்களுக்குச் செல்ல வேண்டும் என்பது முர்ஸி எதிர்ப்பு மீட்பு முன்னணியின் முக்கியஸ்தர் அம்றூ ஹம்ஸாவி உட்பட 35 பேரின் நிலைப்பாடாகும். இவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாதவாறு விமான நிலையத்தில் தடையுத்தரவும் விடுக்கப்பட்டுள்ளது.

ஹுஸ்னி முபாரக் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஆடம்பர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை, அவரது கட்சியின் அந்தரங்கச் செயலாளரும் பெரும் தொழிலதிபருமான அஹ்மத் இஸ் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பது மக்களிடத்தில் சந்தேகத்தை ஏற்டுத்தியுள்ளது. இவர் ஹுஸ்னி முபாரக்கிற்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்களை கொலை செய்வதில் மறைமுக பங்காற்றினார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

ஸீஸியைக் கொண்டுவந்தவர்கள் மீதே பிடியாணை பிறக்கப்பட்டுள்ள நிலையில், தேசிய இணக்கப்பட்டை யாரைக்கூட்டி அத்லி மன்ஸூர் உருவாக்குவார்? ஹுஸ்னி முபாரக்கின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் அம்ரு மூஸா, புதிய அரசியல் யாப்பை இராணுவ அரசியல் யாப்பாக மீளவரையும் 50 பேர் கொண்ட குழுவுக்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அமறூ ஹம்ஸாவி போன்றோர் முபாரக்கின் பழைய முகங்கள் மீண்டும் வரக்கூடாது; பொது மக்களுக்கு அரசியல் சுதந்திரம் தரப்பட வேண்டும் எனப் பகிரங்கமாகக் கூறி வந்தனர்.

இராணுவப் புரட்சிக்கு மிகவும் பக்கபலமாக இருந்த கட்சியே ஹிஸ்புந் நூர் அஸ்ஸலபி. ஐம்பது பேர் கொண்ட அரசியல் வரைபுக் குழு, எகிப்தின் தனித்துவம் பற்றி கலந்துரையாடியபோது, இஸ்லாமியத் தனித்துவத்தை நீக்குவோம் என பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்ததையடுத்து, ஹிஸ்புந்நூர் அஸ்ஸலபியின் குழு உறுப்பினர் பஸ்ஸாம் ஸர்கா அவையிலிருந்து வெளியேறி விட்டார். இந்த ஐம்பது பேரில் பெரும்பாலானவர்கள் இஸ்லாத்திற்கு எதிரான கீழைத்தேய மற்றும் மதச்சார்பின்மை சிந்தனையைக் கொண்டவர்களாவர். "ஸீஸி வைத்த பொறியில் ஹிஸ்புந்நூர் சிக்கித் தவிக்கிறது" என முஹம்மத் அல்ஜவ்வாதி போன்ற சிந்தனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இஸ்லாத்தை தூரமாக்கி, சுதந்திரமாக சிந்திப்பவர்களை ஓரங்கட்டும் நிலையில்... ஹுஸ்னி முபாரக்கின் அடியாட்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில்... ஜனநாயக விரோத சக்திகள் ஊடகத்தை, நீதித்துறையை ஆக்கிரமித்துள்ள நிலையில் ஸீஸியின் பொம்மை அத்லி மன்ஸூர் எப்படி இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியும்.

மிகுதி அடுத்த இதழில்...

**உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்**

**ஆச்சரியமான செய்தி என்னவென்றால், வீட்டுக்குள் சுவனத்தை வைத்துக் கொண்டு பலரும் அதனை வெளியில் தேடி அலைவதுதான். இதன் அர்த்தம் சுவனத்துக்கான ஏனைய பணிகளை விட்டுவிட வேண்டும் என்பதோ அல்லது அவற்றையெல்லாம் செய்யாமல் வீட்டுக்குள் மட்டும் உட்கார்ந்திருந்தால் சுவனம் செல்லலாம் என்பதோ அல்ல. மாற்றமாக ஒருவன் என்னதான் செய்தாலும் தனது வீட்டை நரகமாக வைத்திருந்தால் அவனால் சுவனக் காற்றை சுவாசிக்க முடியாது**

**உலகத்துக்கு** மனிதன் அனுப்பப்பட்ட வரலாற்றை நாங்கள் தெரிந்து வைத்திருக்கின்றோம். உலகத்துக்கு மனிதன் அனுப்பப்பட முன்னர் அவன் சுவனத்துக்கு அனுப்பப்பட்டான். இறுதி இலக்கை முதலிலேயே காட்டிவிட்டுத்தான் அல்லாஹுத் தஆலா மனிதனை உலகத்துக்கு அனுப்புகின்றான். இதைப் பற்றியெல்லாம் நாம் விலாவாரியாகத் தெரிந்து வைத்திருக்கின்றோம். மனிதனை அல்லாஹுத் தஆலா படைத்து சுவனத்துக்கு அனுப்ப முன்னர் ஒரு வேலை செய்தான். அது தான் அவனுக்கான வாழ்க்கைத் துணையைப் படைத்ததாகும்.

சுவனம் எப்படிப்பட்டதென்று எம் அனைவருக்கும் தெரியும். நினைத்தது அனைத்தும் நிகழக் கூடிய ஓரிடம்தான் சுவனம். அங்கே மனிதனுக்கு தில்லை. ஏனென்றால், எமது வாழ்க்கையில் திருமணம் என்பது மிகப் பெரும்பாலும் இத்தகைய கண்ணோட்டத்தில் நோக்கப்படுவதில்லை. திருமணம் என்பது ஒரு சம்பிரதாயமாகவும் இன்னும் சில தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கான ஒரு வழிமுறையாகவும் மாத்திரமே இன்று சமூகத்தில் புழக்கத்தில் இருக்கின்றது.

சுவனத்துக்கும் குடும்பத்துக்குமிடையே ஒரு மிகப் பிரதானமான ஒற்றுமை இருக்கின்றது. ஒருவன் வாழ்க்கையில் எதிர்நோக்கிய பிரச்சினைகளிலிருந்தும் நாளை மறுமையின் சந்தடிகளிலிருந்தும் விடுபட்டு நிம்மதியை அனுபவிக்கக்கூடிய இடம் சுவனமாகும். அதே போன்று இந்த உலகின் சந்தடிகளிலிருந்தும் பிரச்சினைகளிலிருந்தும் மனதை சாந்தப்படுத்தும் ஓரிடம் குடும்பமாகும். "அவன் உங்களுக்கான மனைவியரை உங்களிலிருந்தே படைத்தான் நீங்கள் அவர்களிடம் மனநிம்மதியை அடைந்து கொள்வதற்காக" என்று அல்குர்ஆன் அதனைச் சொல்கின்றது.

எனவே, இந்த உலக வாழ்க்கையில் ஒருவன் சுவனத்தின் மிக முக்கியமான ஓர் இன்பத்தை அனுபவிப்பதற்காக

**அஷ்ஷெய்க் அப்துல் ஹலீம் (நளீமி)**
நிறுவனர், குடும்ப வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கான மத்திய நிலையம்
cfcglanka@gmail.com




சந்தோஷங்கள் மட்டுமே இருக்கின்றன, எவ்வளவு அனுபவித்தாலும் தெவிட்டாத இன்பங்கள் அங்கே நிறைந்திருக்கின்றன, நீடித்த நிலையான வாழ்க்கை இருக்கின்றது. ஆனால், அத்தகைய இன்பங்கள் நிறைந்த சுவனத்துக்குள் அல்லாஹுத் தஆலா ஓர் ஆணையோ அல்லது பெண்ணையோ தனியாக அனுப்பவில்லை என்பது இங்கே எமது கவனத்துக்குரிய அம்சமாகும்.

சுவன இன்பத்தை அனுபவிப்பதாக இருந்தாலும் அதற்கு இருக்க வேண்டிய ஓர் உறவு திருமண உறவாகும் என்றிருந்தால் இந்த உலக வாழ்க்கையை சுவனமாக மாற்றக்கூடிய தகுதி அந்தத் திருமணத்துக்கு இருக்கின்றதல்லவா?!

ஆனால், இந்த யதார்த்தத்தைப் பலர் புரிந்து கொள்வ ஏற்படுத்தித் தரப்பட்ட ஓர் உறவாக கணவன், மனைவி உறவை நாம் கருதலாம்.

கணவன், மனைவி என்ற அந்த ஆத்மார்த்தமான உறவுக்குள் இருந்து பிறக்கின்ற அந்த மனநிம்மதிக்கு ஒப்பான ஒன்றை வேறு எந்த மனிதருடனான உறவினூடாகவும் பெற்றுக் கொள்ள முடியாது என்பது மிக முக்கியமான ஓர் உண்மையாகும். இந்த உண்மையை மனிதர்கள் புரிந்து கொள்ளும்போது நிச்சயம் அவர்களால் குடும்ப வாழ்வை சுவனமாக மாற்றிக் கொள்ள முடியுமாக இருக்கும்.

சுவன வாழ்வு ஒரு கண்குளிர்ச்சியாகும். "எந்தவோர் ஆத்மாவும் அதற்காக நாம் மறைத்து வைத்திருக்கும் கண்குளிர்ச்சிகளில் எதனையும் அறிய மாட்டாது" என்று

அல்லாஹ்ﷻத் தஆலா அல்குர்ஆனில் அதுபற்றிப் பிரஸ்தாபிக்கின்றான். அதேநேரம், குடும்ப வாழ்விலும் கண்குளிர்ச்சி வேண்டிப் பிரார்த்திக்குமாறும் அவன் கற்றுத் தருகின்றான்.

இங்கெல்லாம் சுவனத்தின் சில பிரத்தியேகமான இன்பங்களுக்கான மாதிரிகளை அல்லாஹ்ﷻத் தஆலா குடும்பத்துக்குள் ஏற்படுத்தி வைத்திருப்பதை அவதானிக்கின்றோம். நிம்மதி, கண்குளிர்ச்சி ஆகியன அவற்றுள் மிக முக்கியமானவையாகும்.

எனவே, அந்த நிம்மதியையும் கண்குளிர்ச்சியையும் குடும்ப வாழ்வில் அனுபவிக்காத மனிதன் எப்படி அவற்றை சுவன வாழ்வில் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நியாயமான கேள்வி எழுகின்றது. நிச்சயமாக நாம் எதனை விதைக்கின்றோமோ அதனையே அறுவடை செய்ய முடியும் என்பது விதியாகும். எனவேதான் பரஸ்பரம் கணவன்-மனைவி இருவரது சுவனத்துக்கான வழியையும் அல்லாஹ்ﷻத் தஆலா அவர்களிருவரதும் கையிலேயே கொடுத்திருக்கின்றான்.

"உங்களில் சிறந்தவர் உங்களது மனைவிக்கு சிறந்தவரே" என்ற ஹதீஸும் "கணவனின் திருப்தியிலேயே இறைவனின் திருப்தி இருக்கின்றது" என்ற ஹதீஸும் அந்தக் கருத்தை உரத்துச் சொல்கின்றன. ஆனால், ஆச்சரியமான செய்தி என்னவென்றால், வீட்டுக்குள் சுவனத்தை வைத்துக் கொண்டு பலரும் அதனை வெளியில் தேடி அலைவதுதான். இதன் அர்த்தம் சுவனத்துக்கான ஏனைய பணிகளை விட்டுவிட வேண்டும் என்பதோ அல்லது அவற்றையெல்லாம் செய்யாமல் வீட்டுக்குள் மட்டும் உட்கார்ந்திருந்தால் சுவனம் செல்லலாம் என்பதோ அல்ல. மாற்றமாக ஒருவன் என்னதான் செய்தாலும் தனது வீட்டை நரகமாக வைத்திருந்தால் அவனால் சுவனக் காற்றை சுவாசிக்க முடியாது என்ற செய்தியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆதம் என்ற மனிதனுக்கான வாழ்க்கைத் துணையை அந்த ஆதமின் விலா எலும்பிலிருந்தே படைத்தது தொடக்கம் அல்லாஹ்ﷻத் தஆலா குடும்பம் என்ற அந்த விதியை இந்த உலகத்தில் ஆரம்பித்து வைக்கின்றான். அது அன்று தொட்டு இன்று வரை மனித வாழ்வின் அடிநாதமாக இருந்து வருகின்றது. ஆனால், படைத்தவனின் அந்த ஏற்பாட்டின் பின்னாலுள்ள ஞானத்தை நாம் பலபோது புரிந்து கொள்ளத் தவறி விடுகின்றோம். அதன் விளைவாக எமது குடும்பங்கள் பலபோது நரகமாக மாறி விடுவதை நாம் சமூகத்தில் அவதானிக்கின்றோம்.

பல முஸ்லிம்களுடைய வாழ்க்கையில் குடும்ப வாழ்வு என்பது ஒரு போராட்டமாக இன்று மாறியிருக்கின்றது. வரலாற்றில் எந்தக் காலகட்டத்திலும் முஸ்லிம் குடும்பங்கள் சந்திக்காத ஒரு பெரும் சீரழிவை இன்றைய குடும்பங்கள் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. கணவன்- மனைவி என்ற உறவில் இருந்த அந்த சுவனத்து வாசம் இன்று இல்லாமல் போயிருக்கின்றது. நிறையப் பேர் திருமண வாழ்க்கையை அனுபவிக்கவும் முடியாமல் அதிலிருந்து விடுபடவும் முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஏன் இத்தகைய நிலை?!

இது ஒரு தற்செயல் மாற்றமா? அல்லது குடும்ப வாழ்வின் யதார்த்தம் பற்றிய எமது அறியாமையின் விளைவாக ஏற்பட்ட மாற்றமா? நிச்சயமாக இரண்டாவதுதான் இந்தக் கேள்விக்கான பதிலாகும். ஆண்-பெண் கவர்ச்சி என்ற விடயத்துக்கு அப்பால்... உடல் தேவையை நிறைவு செய்தல் என்ற எதிர்பார்ப்புக்கு அப்பால்... சந்ததிகளைப் பெருக்கிக் கொள்ளல் என்ற வேலைக்கு அப்பால்... கணவன்-மனைவி உறவில் இருக்கின்ற மிக முக்கியமான சிலவற்றைப் பற்றிய எமது அறியாமையே இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணமாகும்.

அதில் முதலாவது, திருமணம் என்பது வெறும் சம்பிரதாயமல்ல அது ஓர் இபாதத் என்ற உண்மை தொடர்பாக எம்மிடம் உள்ள அறியாமையாகும். எனவேதான் தொழாதவன் முஸ்லிமாக இருக்க முடியாது என்று கற்றுத்தந்த இஸ்லாம், திருமணத்தை வெறுத்தொதுக்குபவன் நபியைச் சார்ந்தவனாக இருக்க முடியாது என்றும் கற்றுத் தருகின்றது.

தொழுகை ஓர் இபாதத் என்ற சிந்தனை எம்மிடம் இருக்கின்றது. எனவே, நாம் தொழுகையில் பேணுதலாக இருக்கின்றோம், அதில் இஃக்லாஸுடன் நடந்து கொள்ள முயற்சிக்கின்றோம், தொழுகையின்போது இறை நினைவுடன் நேரத்தைக் கழிக்கின்றோம். கணவன்-மனைவி உறவு ஓர் இபாதத் என்ற சிந்தனை எம்மிடம் இல்லை, எனவே நாம் அதில் பேணுதலாகவோ இஃக்லாஸுடனோ இறை சிந்தனையுடனோ நடந்து கொள்வதில்லை.

தொழும்போது இருக்கும் ஆன்மிக உணர்வு குடும்ப உறவில் வருவதில்லை. நோன்பின்போது அனுபவிக்கும் தக்வாவை குடும்ப வாழ்வில் அனுபவிப்பதில்லை. ஹஜ்ஜின்போது பிரவாகமெடுக்கும் இறை நெருக்கம் கணவன்-மனைவி உறவில் சுத்தமாக இல்லை. சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்வதாக இருந்தால், நாம் குடும்ப வாழ்வை ஓர் இபாதத்தாக நோக்குவதில்லை என்பதுதான் உண்மை.

அதன் விளைவைத்தான் நாம் இன்று சமுதாயத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் காண்கின்றோம். இப்படியாக, அடிப்படையிலேயே தவறு விட்டதுதான் இன்று குடும்பங்கள் மனநிம்மதியையும் கண்குளிர்ச்சியையும் சுவன வாசத்தையும் இழந்திருப்பதற்கான காரணமாகும்.

எமது குடும்ப வாழ்வு சுவன வாழ்வாக மாறாமல் இருப்பதற்கான இன்னும் பல காரணிகள் இருக்கின்றன. இன்ஷா அல்லாஹ், தொடர்ந்தும் அது தொடர்பாக எதிர்வரும் இதழ்களில் கலந்துரையாடுவோம்.


## விற்பனை முகவர்கள் தேவை!

நான்கு தசாப்தம் கடந்து அழைப்புப் பணிபுரியும் மாதாந்த இஸ்லாமிய இலட்சியக் குரல் அல்ஹஸனாத், சிங்கள மொழியில் ப்ரபோதய, ஆங்கில மொழியில் The Trend, சிறுவர்களுக்கான மாதாந்த சஞ்சிகை அகரம் மற்றும் மாதம் இருமுறை வெளிவரும் எங்கள் தேசம் பத்திரிகை ஆகியவற்றுக்கு நாடு முழுவதும் விற்பனை முகவர்கள் தேவை. சமூகப் பணிபுரியும் நன்மைகளுடன் விற்பனைத் தரகினையும் பெற்றுக் கொள்ளலாம்.




தொடர்புகளுக்கு:
077 2649151, 077 2614635

# பேனாமுனைச் சந்திப்பில்

ஆங்கில மூலம்: Correspondence Between Maulana Maudoodi & Mariyam Jameelah

## மர்யம் ஜமீலாவும் மௌலானா மௌதூதியும்



▲ தமிழில்: வஸீரா ஹஸன் ▲

**லாஹூர் ஏப்ரல் 01, 1961**

அன்புள்ள மிஸ் மார்க்கஸ்

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்

மார்ச் 8ஆம் திகதியிடப்பட்ட உங்கள் மடல் உரிய நேரத்தில் என்னை வந்தடைந்தும் சீர்குலைந்த என் உடலாரோக்கியம் காரணமாக உரிய காலத்தில் பதில் தர முடியாமல் போய் விட்டது. கடந்த ரமழானில் இருந்து இடது தோளில் சடுதியாகத் தோன்றி மறையும் கடுமையான ஒரு வலி என்னை மிகவும் அவதிப்பட வைத்து விட்டது. எடுத்துக் கொண்ட சிகிச்சைகள்கூட போதிய நிவாரணம் தரத் தவறிவிட்டதால், ஆழ் 'X' கதிர் சிகிச்சைக்கு உட்படுவது நல்லது என மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள்.

உங்கள் கடந்த கடிதம் வாசிக்க மிகவும் சுவாரஷ்யமாய் இருந்தது. அமெரிக்காவின் பெண் உடையை எடுத்துக்காட்டுமுகமாக உங்களால் அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிப் படங்கள், என்னைப் பொறுத்தவரை ஒரு செய்தியே அல்ல. காரணம் அமெரிக்க, ஐரோப்பியப் பெண்களை லாஹூர் வீதிகளில் இதே பாணியில்தான் வழமையாக நாம் கண்டு வருகிறோம். கெய்ரோ, பெய்ரூட், டமஸ்கஸ் ஆகிய நகரங்களில் அரபுப் பெண்களையும் இதே உடைகளில் நான் கண்டிருக்கிறேன். வீட்டுக்கு வெளியே உலாத்துவது எப்படிப் போனாலும் வீட்டுக்கு உள்ளே, தன் சொந்த உறவினர்கள் மத்தியில்கூட, மானமுள்ள ஒரு பெண்ணால் இப்படித் தோற்றமளிக்க முடியுமா என்பது பற்றி என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. இந்த ரக உடைகளை நீங்கள் கேவலமாகப் பார்ப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அரபு அல்லது உருது மொழி படிக்கும் சந்தர்ப்பம் உங்களுக்கு வாய்க்கப் பெற்று, ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களால் பெண்களுக்கென்று வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை நேரடி மூலத்தில் இருந்து படித்தறிந்து கொள்ளும் பாக்கியமும் கிடைக்குமெனின், அவ்வறிவுறுத்தல்கள் பெண்ணின் பெண்ணியல்புடன் எந்தளவு ஒத்திசைந்து அழகுறப் பொருந்திப் போகின்றன என்பதையறிந்து நீங்கள் மிகவும் வியப்படைந்து போவீர்கள். பெண்ணுக்கு மேற்கு வழங்கியிருக்கும் சமூக வகிபாகம் பிரதிபலிப்பது பெண்ணின் விடுதலையையல்ல; அடிமைத்துவத்தை, சமூகத்தின் வக்கிரத்தை.

> இஸ்லாம் ஒவ்வொரு பெண்ணையும் ஓர் ஆணிடம் மட்டுமே ஒப்படைத்திருக்கிறது. ஏனைய அந்நிய ஆண்களின் நெருக்கத்தில் இருந்து அவளை விலக்கிப் பாதுகாத்திருக்கிறது. பெண்ணுக்கு இயற்கை வழங்கிய பொறுப்புக்களைக் கௌரவித்து பெண்களை கண்ணியப்படுத்தியிருக்கிறது. மேற்கு நாகரிகமோ பெண்ணை பல ஆண்களிடம் அடிமைப்படுத்துகிறது. பெண்ணுக்குப் பொருந்தும் பொறுப்புக்களை மட்டமாகப் பார்க்கும் மனோநிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

பொய்யான, திசை திருப்புகின்ற பிரசாரங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டு பெண்கள் தம்மைத் தாமே 'பெண்மையழிப்புச்' செய்து கொள்ள முனைகின்றனர். வாழ்க்கையில் தமக்குரிய இயல்பான இடமறிந்து, பெண்ணின் இயற்கையுடன் ஒத்துச் செல்லும் மென்மையான வேலைகளைச் செய்து முடிப்பதை பெண்களே தரக்குறைவாக எடைபோடுகின்றனர். ஆண்களுக்குரிய பொறுப்புக்களை வலிந்து சுமப்பதை பெருமையாக வேறு கருதுகின்றனர்.

மேற்கு நாகரிகம் அதன் பெண்ணினத்தை கருணைக் கண்கொண்டு நோக்கவில்லை என்பதற்கு வரலாறே சான்று. பெண்ணுக்கென்றே பிரத்தியேகமான இயற்கை உபாதைகளை தனியாளாய் சுமக்கக் கோரும் சமூகத்தின் கோரிக்கை ஒரு புறம்; ஓர் ஆணுக்குரிய பன்முகப் பொறுப்புக்களில் பங்கு கொள்ள வேண்டும்

என்ற நாகரிகத்தின் அழைப்பு மறுபுறம், இருதலைக் கொள்ளி எறும்பாக பெண் இடையில் திண்டாட்டம்! மேற்கின் பிரசாரம் பெண்களை எந்தளவு மயக்கியிருக்கிறதெனின், பெண்களே தங்களை எதிர்ப்பாலினரின் போகப்பொருளாகத் தரம் குறைத்துக் கற்பனை செய்து, அரைகுறை ஆடையில் மறைக்க வேண்டியவற்றை வெளித் தெரியச் செய்து ஆணின் கண்ணியத்தை உசுப்பி விடுகின்றனர். ஆண்களின் கைகளில் பெண்கள் விளையாட்டுப் பொருட்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

இஸ்லாம் ஒன்றே பெண்ணின் உண்மையான நலன் விரும்பியாய் என்றும் இருந்திருக்கிறது. இஸ்லாம் ஒவ்வொரு பெண்ணையும் ஓர் ஆணிடம் மட்டுமே ஒப்படைத்திருக்கிறது. ஏனைய அந்நிய ஆண்களின் நெருக்கத்தில் இருந்து அவளை விலக்கிப் பாதுகாத்திருக்கிறது. பெண்ணுக்கு இயற்கை வழங்கிய பொறுப்புக்களைக் கௌரவித்து பெண்களை கண்ணியப்படுத்தியிருக்கிறது. மேற்கு நாகரிகமோ பெண்ணை பல ஆண்களிடம் அடிமைப்படுத்துகிறது. பெண்ணுக்குப் பொருந்தும் பொறுப்புக்களை மட்டமாகப் பார்க்கும் மனோநிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

நீங்கள் சுட்டிக்காட்டிய இன்னுமொரு விடயம் குறித்து சற்றுப் பேச வேண்டும். மதீனாவின் இஸ்லாமியப் பல்கலைக்கழகம் குறித்து உங்களுக்குத் தெரிய வந்த தகவல்கள் சரியானவையல்ல. என்னால் வரைந்து கையளிக்கப்பட்டு, மன்னரால் நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பாடவிதானம் குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ், இல்முல் கலாம், இஸ்லாமிய நாகரிகம் ஆகிய கற்கை நெறிகளுடன் ஐரோப்பிய தத்துவவியல், சட்டவியல், வரலாறு, பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றோடு மதங்களின் ஒப்பீட்டாய்வையும் உள்ளடக்கியுள்ளது. ஐரோப்பிய மொழிகளான பிரெஞ்சு, ஆங்கிலம் அல்லது ஜேர்மன் ஆகிய வற்றில் ஒன்று கட்டாய பாடமாக விளங்கும் இம்முறையின் கீழான கல்வியை 'மதச்சார்பற்றகல்வி' அல்லது 'சமய அடிப்படையிலான கல்வி' என்று எமக்கு அறிமுகமான குறுகிய எண்ணக்கருக்களினுள் வரையறுத்துவிட முடியாது.

நவீன கலாசாலைகள், பழைய அமைப்பிலான மதரஸாக்கள் ஆகிய இரண்டிலிருந்தும் வேறுபட்டு தனக்கென்றே தனித்துவ அம்சங்களுடன் இப்பல்கலைக்கழகம் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பு. நவீன அறிவுகளுடன் இஸ்லாமிய கற்பித்தலிலும் நிபுணத்துவம் பெற்ற கல்விமான்களை உருவாக்குவதன் மூலம் சமகாலப் பிரச்சினைகளை இஸ்லாமியக் கோட்பாடுகளினூடு கையாளும் தேர்ச்சிபெற்ற தலைவர்களை முஸ்லிம் சமூகம் அடைந்து கொள்ளும்.

ஏனைய முஸ்லிம் பிரதேசங்கள் போலவே, சஊதி அரேபியாவும் இன்று இரு வேறு முரண்பட்ட நாகரிகங்களின் சண்டைக் களமாக மாறியிருக்கிறது. எண்ணெய்க் கண்டுபிடிப்பைத் தொடர்ந்து கற்பனைக்கும் எட்டாத பொருள் வளத்தை சஊதி அடைந்து கொண்டதோடு மடைதிறந்த வெள்ளமாய்ப் பாய்ந்தோடி வரும் மேற்கு நாகரிகத்துக்கும் அதன் கதவுகளையும் அகலத் திறந்து விட்டுள்ளது.


மேற்கு நாகரிகத்தின் அசல் வடிவமொன்று அரபுப் பாலைநிலத்தில் பூத்துச் சொரிவது போல் நவீன ரியாத் ஜொலிக்கிறது. தெஹ்ரான், ஜித்தா, ஆகிய நகரங்களும் விதிவிலக்கல்ல. மக்காவும் மதீனாவும் கூட நவீனப்படுத்தலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றன. இத்தகு ஆபத்தான பின்னணியில், அரேபியா அவசரமாக வேண்டி நிற்கும் விவேகமும் செயற்திறனும் மிக்க முதற் தர ஆளுமைகளை நாம் உருவாக்கத் தவறின், ஒரு காலத்தில் துருக்கியில் அடித்து, இன்று எகிப்து, தூனீஷியா, மொரோக்கோ, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் அலைவீசி அலைக்கழித்துக் கொண்டிருக்கும் சடவாதக் கலாசாரத்தின் பிடிக்குள் அகப்பட்டு சஊதி என்னும் இஸ்லாமிய நந்தவனமும் துவம்சப்பட்டுப் போய் விடும். சூழ்ந்து வரும் இவ்ஆபத்துக்களில் இருந்து இஸ்லாத்தின் மத்திய நிலையத்தைப் பாதுகாப்பதுதான் இப்போது எமக்குரிய முதன்மையான கடமைப்பாடு என்று நான் கருதுகிறேன்.

தூனீஷியாவின் ஜனாதிபதி ஹபீப் போர்கிபா துருக்கியின் முஸ்தபா கமால் அதாதுர்க்கை கண்மூடித்தனமாகப் பின்பற்றும் அவரின் ஓர் உண்மையான அடிவருடியே ஆவார். முஸ்லிம்களின் நவீன தலைவர்களாக அடையாளம் காணப்படும் இவர்கள் எல்லோரும் தத்தமது நாடுகளில் துரோக விளையாட்டு விளையாடியிருப்பவர்கள். மேற்கின் ஏகாதிபத்தியத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெறுவதற்கான தமது போராட்டத்தை முன்னெடுக்கையில், முஸ்லிம்களிடம் இவர்கள் விண்ணப்பித்துக் கொள்வது இஸ்லாத்தின் பெயரைச் சொல்லிச் சொல்லியே. விடுதலை பெற்று அதிகாரம் கைக்கு வந்த பின் தேசத்தின் பின்னடைவுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டுவதும் இஸ்லாத்தையே. இறுதியில், இஸ்லாத்தைப் பலிக்கடாவாக்கி இஸ்லாமியச் சிந்தனையின், இஸ்லாமியக் கலாசாரத்தின் ஒவ்வொரு சின்னத்தையும் கருணையேயின்றி வேருடன் பிடுங்கி எறிவர்.

இவர்கள் எல்லோரும் ஏகாதிபத்தியத்தின் அச்செடுத்த வார்ப்புக்கள். இவர்களுக்கு இஸ்லாமிய அறிவும் கிடையாது; இஸ்லாம் குறித்த நல்ல பிப்பிராயமும் கிடையாது. இங்கிலாந்தில், பிரான்ஸில் அல்லது அதைப் போன்று ஓர் ஐரோப்பிய நாட்டில் போஷித்து வளர்க்கப்பட்டு கல்வியும் ஊட்டப்பட்டவர்கள். இவர்களுள் பலர் மணந்திருப்பதும் ஐரோப்பிய மங்கையரையே (போர்க்கிபாவின் மனைவி கூட ஒரு பிரெஞ்சுக்காரார் தான்) பழக்க வழக்கங்களிலாகட்டும் அன்றாட வாழ்விலாகட்டும் மேற்கத்தேயரின் பிரதியெடுக்கப்பட்ட நகல்கள். தமக்கான அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரே காரணத்தாலேயே இவர்களின் தலைமைத்துவத்தை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியேற்பட்டது.

ஐரோப்பியமயப்படுத்தப்பட்ட இத்தலைவர்கள் தங்கள் அரசியல் அதிகாரத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்த வேண்டி, எச்ச சொச்சமாய் மிஞ்சியிருக்கும் இஸ்லாமிய நாகரிகத்தின் கடைசிச் சின்னங்களையும் அகற்றிவிடப் பார்க்கின்றனர்.

(56ஆம் பக்கம் பார்க்க)



# வஹியின் வருஷிப்பில்
## ஹஃப்ஸா பின்த் உமர் (ரழியல்லாஹு அன்ஹா)

ஷைனப் பின்த் பவாஸ்

கை நழுவிப்போகும் திருமணப் பந்தங்களின்போதும் வேறு வாய்ப்புக்களின்போதும் அலட்டிக்கொள்ளக் கூடாது. அதில் நன்மையே இருக்கிறது என்ற பாடத்தையும் இங்கு கற்றுக் கொள்கிறோம்.

அரபு மொழியில் 'ஹஃப்ஸா' என்பது சிங்கத்தின் ஒரு பெயரைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை 'அபா ஹஃப்ஸ்' என்று அழைப்பவர்களாக இருந்தார்கள். ஹஃப்ஸா பின்த் உமர் (ரழியல்லாஹுஹா அன்ஹா) அவர்களின் கணவர் ஹுனைஸ் பின்த் ஹஸாபா (ரழியல்லாஹு அன்ஹு) இரண்டு ஹிஜ்ரத்திலும் கலந்து கொண்டவர். பத்ருப் போரில் அவர் வீர மரணம் அடைந்தபோது ஹப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) விதவையாக நேரிட்டது. தன் புதல்வியின் இந்நிலையைக் கண்டு பெரும் கவலையடைந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு), உஸ்மான் பின் அப்பான் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை சந்தித்து "ஹஃப்ஸாவை திருமணம் செய்ய விருப்பமுள்ளதா?" என வினவ அப்போதைக்கு தனக்கு அதற்கு நாட்டம் இல்லை என்று கூறிவிட்டார். பிறகு அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் சென்று உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அதே கேள்வியை முன்வைத்தபோதும் அவரும் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்தார். தனது அருமை மகளுக்கு கணவராக இவ்விரு உத்தமர்களில் ஒருவரையும் பெற்றுக் கொள்ள முடியவில்லையே என்று ஏங்கித் தவித்தவர்களாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் முறைப்பாடு செய்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு ஒரு நற்செய்தி காத்திருந்தது.

நபியவர்கள், "இன்ஷா அல்லாஹ்! ஹஃப்ஸா உஸ்மானை விட சிறந்த ஒருவரையும் உஸ்மான் ஹஃப்ஸாவைவிடச் சிறந்த ஒரு மனைவியையும் திருமணம் செய்வார்கள்'' என்று ஆறுதல் கூறினார்கள். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அமைதியாக இருந்ததற்கு காரணம், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹஃப்ஸாவை திருமணம் செய்ய இருப்பதாக அவரிடம் கூறியிருந்தமை ஆகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிஜ்ரி மூன்றாம் வருடம் ஹப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை அவரது 22ஆம் வயதில் மணமுடித்தார்கள். தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் பூரித்தவராக உமர் (ரழியல்லாஹு அன்ஹு) பின்வரும் திருவசனத்தை ஓதினார்.

"இது என் இறைவனின் அருட்கொடையாகும். நான் நன்றியுடையவனாக இருக்கிறேனா அல்லது மாறு செய்கிறேனா என்று இறைவன் என்னை சோதிக்கிறான். எவன் இறைவனுக்கு நன்றி செலுத்துகிறானோ அது அவனுக்கே நன்மையாகும். மேலும், எவன் நன்றி மறந்து மாறு செய்கிறானோ, அது அவனுக்கே இழப்பாகும்." (27: 40)

கை நழுவிப்போகும் திருமணப் பந்தங்களின்போதும் வேறு வாய்ப்புக்களின்போதும் அலட்டிக்கொள்ளக் கூடாது. அதில் நன்மையே இருக்கிறது என்ற பாடத்தையும் இங்கு கற்றுக் கொள்கிறோம்.

வரலாற்றுப் பேராசிரியரும் ஹதீஸ் துறை அறிஞருமான இமாம் அத்தஹபி (ரஹிமஹுல்லாஹ்) ஷியர் அஃலாம் அன் துபலா என்ற தனது பிரபலமான நூலில், "ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அதிகமாக நோன்பு நோற்கக் கூடியவராகவும், இரவில் நின்று வணங்குபவராகவும் இருந்துள்ளார்.

60 ஹதீஸ்களையும் மனனம் செய்திருந்தார். எழுதவும் வாசிக்கவும் கற்றுக் கொண்டவர். முழுக் குர்ஆனையும் மனனம் செய்திருந்தவர். குர்ஆனின் பாதுகாவலன் அல்லாஹ்வை அதிகமாக அஞ்சியவர்" என்று வர்ணித்து விட்டு "ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) சுவனத்துப் பெண்களுள் ஒருவர்" என்று நிறைவு செய்கிறார்.

குர்ஆன் வசனங்கள் இறங்கும் போதெல்லாம் அவ்வப் போது அவற்றை ஹப்ஸா (ரழில்லாஹு அன்ஹா) மனனம் செய்து கொள்வார். புவியில் மிக உயர்ந்த பொக்கிஷமான குர்ஆனின் ஏடுகள் அவரது வீட்டிலேயே இருந்தன. தனது உள்ளத்திலும் இல்லத்திலும் குர்ஆனை வைத்து பாதுகாத் ததனால் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) குர்ஆனை ஒரு முழுமையான நூல் வடிவில் தொகுக்க முற்பட்ட போது ஹப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் ஏடுகளிலே பெரிதும் தங்கியிருந்தார்.

ஜாபிர் பின் அப்துல்லாஹ் அன்ஸாரி (ரழியல்லாஹு அன்ஹு) அறிவிக்கிறார். ஒரு முறை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் "ஹுதைபியாவில் மரத் திற்கு கீழால் பைஅத் செய்தவர்கள் யாவரும் சுவனம் செல் வார்கள்" என்று கூறியபோது ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் "அது எவ்வாறு சாத்தியமாகும்?" என்று ஆட்சேபித்து ஸூரதுல் மர்யமின் ஒரு வசனத்தை முன்வைத்தார். "நரகத்தைக் கடக்காமல் உங்களில் யாரும் போக முடியாது. இது உம்முடைய இறைவனின் முடிவான தீர்மானமாகும்." (19: 71)

அதற்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதே ஸூராவின் அடுத்த வசனத்தின் மூலம் பதில் அளித்தார்கள்.

*"அதன் பின்னர் தக்வா உடையவர்களாக இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம். ஆனால், அநியாயம் செய்த வர்களை அந்நரகத்தில் முழந்தாளிட்டவர்களாக விட்டு விடுவோம்."* **(19: 72)**

இவ்வாறு குர்ஆனின் தெளிவான சிந்தனையைப் பெற்றுக் கொள்ள ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் முயன்றுள்ளார்கள்.

வஹியின் வருஷிப்பில் அவர் எவ்வாறு புடம்போடப் பட்டார் என்பதை இன்னொரு வரலாற்று நிகழ்வு மூலம் நாம் அறியலாம். ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் வாயிலாக இமாம் புகாரி பின்வரும் நிகழ்வைப் பதிவு செய்துள்ளார்.

"தினமும் அஸர் தொழுகையின் பின்னர் தமது மனை வியரின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் தேவைகளைக் கவனிப்பது நபியவர்களின் வழக்கமாக இருந்தது. அத்த கைய சந்திப்பின்போது ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழியல் லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டில் ஒரு தேன் பானம் அருந்துவார்கள். ஒரு நாள், வழமைக்கு மாற்றமாக ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் வீட்டில் அதிக நேரம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர் கள் தாமதித்தபோது ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) ஏனைய மனைவியரிடம் "அல்லாஹ்வுடைய தூதர் (ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எங்களில் யாருடைய வீட்டுக்கு வந்தாலும் அவரிடம் நீங்கள் மஃபீர் (ஒட்டும் தன்மையுள்ள சிறிது துர்நாற்றம் தரும் ஒரு வகை இனிப்பு மூலிகை) அருந்தியுள்ளீர்கள்" என்று கூறுவோம் என ஆலோசனை செய்து நபியவர்கள் வந்த பிறகு அவ்வாறே கூறிவிட்டனர். தாம் ஒரு தேன் பானம் தான் அருந்தியதாகக் கூறிய நபியவர்கள் இதன் பிறகு தேன் அருந்துவதில்லை என்று சத்தியம் செய்தார்கள். ஒரு சாதாரண மனிதருடைய வாழ்வின் நிகழ்வாக இருந்தால் பிரச்சினையல்ல. ஆனால், இறுதித் தூதரின் ஒவ்வொரு நடத்தையும் ஷரீஆவின் ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, அல்லாஹுத் தஆலா ஸூரதுத் தஹ்ரீமில் பின்வரும் வசனத்தை இறக்கினான்:

*"நபியே! உம் மனைவியரின் திருப்தியை நாடி அல்லாஹ் உமக்கு அனுமதித்துள்ளதை ஏன் விலக்கிக் கொண்டீர்? அல்லாஹ் மிக மன்னிப்பவன்; கிருபையுடையவன்." (66:1)*

ஸைனப் (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் உள் ளம் புண்படக்கூடும் என்று கருதிய நபியவர்கள், "தமக்கு தேனை தடுத்துக் கொண்ட இந்த இரகசியத்தை யாரிட மும் கூற வேண்டாம்" என்று ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களுக்கு அறிவுறுத்தி இருந்தார்கள். ஆனால், ஹப்ஸா (ரயழில்லாஹு அன்ஹா), ஆஇஷா (ரழியல் லாஹு அன்ஹா) அவர்களிடம் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டார். அல்லாஹ் இதனை வஹி மூலம் தன் தூதருக்கு அறிவித்தான். அல்லாஹ்வுடைய தூதரின் பண்பாடு எத்தகையது என்று பாருங்கள்!

அல்லாஹ் அறிவித்த முடிவையும் ஹஃப்ஸா (ரழியல் லாஹு அன்ஹா) அவர்களிடம் கூறி தம் மனைவியை இழிவடையச் செய்யாமல் சிலவற்றை மாத்திரம் கூறி நிறுத்திக் கொண்டார்கள். ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்தவராக ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) "உங்களுக்கு இதனை அறிவித்தது யார்?" என்று வினவினார்.


*மேலும், நபி தம் மனைவியர் ஒருவரிடம் ஒரு செய்தியை இரகசியமாக ஆக்கி வைத்தபோது அவர் மற்றொரு வருக்கு அதை அறிவித்ததும் அவ்விஷயத்தை அல்லாஹ் அவருக்கு வெளிப்படுத்தி வைத்தான். அவர் அதில் சிலதை தெரிவித்தும் சிலவற்றை தெரிவிக்காது புறக்கணித்தும் இருந்தார். இவ்வாறு அவர் அதைத் தெரிவித்தபோது "உங்களுக்கு இதைத் தெரிவித்தவர் யார்?" என்று அப்பெண் கேட்டார். அதற்கவர் "யாவற்றையும் நன்கறிந்தோனும் உணர்ந்தோனுமாகிய அல்லாஹ் தெரிவித்தான் என்று கூறினார்."* **(66: 3)**

ஆஇஷா, ஹப்ஸா (ரழியல்லாஹு அன்ஹுமா) ஆகிய இருவருக்கும் தவ்பா செய்து மீளுமாறு அல்லாஹ் அடுத்த வசனத்தில் எச்சரிக்கிறான்.

*"நீங்கள் இருவரும் இதற்காக அல்லாஹ்விடம் தவ்பாச் செய்வீர்களாயின் அது உங்களுக்கு நலமாகும். ஏனெனில், நிச்சயமாக உங்கள் இருவரின் இத யங்களும் இவ்விஷயத்தில்*

(56ஆம் பக்கம் பார்க்க)

# PRIMAVERA
## Project Management Training



**Course Modules**
- General Introduction about Primavera
- Project Planning & Management Concepts & its usage in Primavera
- Methodology
- Schedulling by Primavera


DURATION: 03 Months
FAST TRACK: 04 Weeks

**Enroll Now for 11th Batch**

**For Whom**
Architects, Project Managers, Engineers, Quantity Surveyors, Technical Officers, Technical Assistants, Engineering Draughtsmen and others...

# MEP Drafting & QS Practice

**Enroll Now for 27th Batch**



**COURSE MODULES:**
- Basic Design Concepts of Electrical, Plumbing & Drainage, Heating, Ventilating & Air-Conditioning , Fire Alarm & Fire Fighting System.
- Drafting of Fire Alarm and Fire Fighting System Drawings.
- Drafting of Plumbing and Drainage Drawings.
- Drafting of HVAC and Electrical Drawings.
- Preparing combined MEP Services Drawings/ Coordinated Services Drawings, Reflected Ceiling Plans.
- Project Documentation.

DURATION: 03 Months
FAST TRACK: 06 Weeks

# 3DS MAX



**Course Modules:**
- 3DS MAX
- Architectural Desktop Applications
- AutoCAD Applications
- Photoshop Applications
- V-RAY Rendering Applications
- Project Documentation

**Enroll Now for 12th BATCH**

DURATION: 02 Months

**TARGET GROUP**
Architects, Engineers, Technical Officers, Draftsmen and who are interested in this field

வெளியூர் மாணவர்களுக்கான விடுதி வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

**the aCADDemy**
College of Architectural Engineering Technology

No: 22, Kaburady Road, Kattankudy-01

**BRANCH**
No:34, Main Street, Sainthamaruthu-05

**HOTLINES:**
0776 32 34 34
0775 91 97 98
Email: theacaddemy@gmail.com
Website: www.acaddemy.lk

Registered under:
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION
Ministry of Youth Affairs and Skills Development-Reg. No: P20/0037

# கனலாய் எரிகிறது...

சாரணா கையூம்

சந்தி சிரிக்கும்
சங்கதி யெல்லாம்
காதிக் கோட்டில்
கனலாய் எரிகிறது!

குடுவும் குடியும்
கூத்தியு மாய்க்
காலத்தை ஒட்டும்
கயவர்கள் எல்லாம்
கண்ணிய வானாய்(க்)
காட்டிக் கொண்டு
கல்யாணப் பந்தலில்
குந்திக் கொண்டார்!

புரோக்கர் மாமாவால்
பூரித்துப் போன
ஏழைக் குமருகள்
கண்ணீர் சிந்தும்
காட்சிகள் இன்று
காதிக் கோட்டில்,
கதையாய்க் கசிகிறது!

எத்தனை வழக்குகள்
எத்தனைப் படிப்பினை
அத்தனை நடந்தும்
பகலில் பள்ளத்தில்
விழுவது போன்ற
புத்தி கெட்டப்
போக்கின்னும்
போகவில்லை!
திருந்தி தெளிவோர்
தெரியக் காணோம்!





# ஆணிவேர்

அறிவுப் புரட்சி அஃதொரு தருவெனின்
ஆணி வேரே வான்மறை அதன்
வரவின் பின்னே மானிட வாழ்வில்
மாற்றம் நிகழ்ந்தது உண்மை!

வான்மழை பொழிய வரண்ட பூமி
செழித்திடற் குதவின புனலே - அங்ஙன்
வான் மறை குர்ஆன் வழங்கிய ஞானப்
புரட்சியிற் செழித்தது புவியே

அண்ணல் நபிக்கு அல்லாஹ் அருளிய
அற்புதத் திருமறை வழியே! - இம்
மண்ணில் மாற்றம் மலர்ந்திடக் காரணி
மாமறை யன்னபே ரொளியே!

அறிவியற் கருத்துகள் அடங்கிய பெட்டகம்
அல்குர் ஆனெனுந் திருமறை! - அறிவுப்
புரட்சி வித்தினைப் போட்டு வளர்த்த
அந்நூற்க் கில்லை ஒரு குறை!

வானம் பூமி அவற்றிடை யுள்ள
அனைத்தையும் ஆறே ஆறு
நாளிற் படைத்த நாயகன் அல்லாஹ்
நல்கிய ஞானப்பேறு!

மேலைத் தேச மெங்கெனும் அறிவின்
மேன்மை பரப்பி நின்றது- புவக்
கோலம் மீது மாற்றுக் கொள்கை
கொண்டவர் நெஞ்சையும் வென்றது!

சத்திய வேதம் திருமறை ஞானச்
சதுரா டிச்சா தித்தது! - அதன்
வித்தகப் பேரொளி வயனுல கத்தின்
சந்து பொந்தெலாந் தொட்டது!

அறிவுப் புரட்சி அஃதொரு மரமெனின்
அருள்மறை தானதன் ஆணிவேர் - அத்
தருதரும் எழுச்சித் தண்ணிழல் கிடைத்திடக்
காரண(ர்)ம் யாதெனக் காணுவீர்

▸ கலாபூஷணம் ஏ.எம். எம். அலி - கிண்ணியா




உலகிலுள்ள உயிர்களெல்லாம்
நீண்ட நேரம் நிம்மதி காணும்
நிறைவான நிசப்த நேரமது....!
ஒளி அலைகள் அவசியமில்லா
மூன்றாவது விழியும் அதுவே...!

சிறப்பிற்கும் வெறுப்பிற்கும்
பெயர்போன பெரிய மனிதர்
என்று கூட இதனைக் கூறலாமே...!

இரவின் உறவில் இதுதான் முதலில்...!
இன்றியமையா அழகிய பொழுதில்...!
பாசாங்குடன் பண்பாக வீசும்
பனியில்...!
தாலாட்டும் நிலவும் தாராளமாய்...
நட்சத்திரத் திரளில்...!

மனிதனுக்கு மருந்தாகி!
மருத்துவம் செய்து மகானாகி
விழிகளுக்கும் விருந்தாகி
வாழ்வினில் இனிக்கும்...!
இயலாத இல்லாத
இயல்பற்ற இலக்குகளைக் கூட
இலகுவாக எட்டிப் பார்க்க
எளிய வழி இது எளியவருக்கும் கூட...!

கனவு எனும் விந்தை உலகம்
அதில் மனிதர்கள் நாமோ
மோகமுள்ள மந்தை கழகம்....!

தூக்கமதன் பக்கங்கள்...!
தீர்த்துவிடும் ஏக்கங்கள்...!
இன்பமாக இதயம் வருடி...!
இயற்கையாகி புத்துணர்க்கும்...!

துன்பத்திலும் ஆறுதலாகி
ஆத்மாவிலே அமைதியை
விதைக்கும்...!
கள்ளமிலா நல்ல நண்பன்...!
பேதமின்றி பாசம் கொள்ளும்
உற்ற அன்பன்...!

அளவுக்கு மீறினால் இதுவும் கூட நஞ்சு
மழலை முகத்தில் குழைந்து சிரிக்கும்
வெண் வண்ணப் பிஞ்சு...!

விடியலுக்கு அர்த்தம் புகட்டும்
விருதுகள் பெறா வேங்கை இது...!
உயிர்களின்
முடிவுரையில் முழுமை பெறும்
முற்றுப் பெறா கங்கை இது...!

*எஸ். சிபானி முஹம்மத், ஒலுவில்*



## உன்னால் முடியும்

என்னால் இதை செய்ய முடியாது, பொருளாதார நிலை.... மனிதர்களுக்கு மத்தியில் நான் எந்தப் பெறுமானமும் அற்றவன்...

இப்படிப் பல அற்பக் காரணங்கள். ஏன் தயங்குகின்றீர்கள்?

சிப்பிக்குள் மறைந்திருக்கும் பெறுமதிவாய்ந்த முத்துக்களை வெளியே எடுப்போம்...

– வரலாறு படைக்கத் துடிப்பவன் எந்நிலையிலும் தயங்க மாட்டான்

*தயக்கம் என்பது சொந்தச்சிறை; அதில்*
*தங்கிக்கிடப்பது உந்தன் குறை.*
*மனசுக்குள் விரியும் மாயத்திரை; அட*
*மனிதா எதற்கிந்த வேகத்தடை*

– நம்மால் முடியுமா என முடிவெடுக்க முடியாதது, தயக்கம், நம்மால் முடியாது என்ற முடிவுக்கு வருவது தாழ்வு மனப் பான்மை.

*தாழ்வாய் உன்னை நீ பார்ப்பதா? அதை*
*தலை விதி என்றே ஏற்பதா?*
*உன்னிடம் நீயே தோற்பதா? அதை*
*ஊழ்வினை தன்னில் சேர்ப்பதா?*

– சாதிப்பதற்கு வயதையும், நரைத்த முடியையும் காரணம் காட்டாதீர்

*துணிந்தால் தூண்கள் துரும்பாகும் – நீ*
*துவண்டால் நாணல் இரும்பாகும்*
*கவலைகள் நோய்க்கு விருந்தாகும்;*
*உன் கலங்கா மனம்தான் மருந்தாகும்*

– "தோல்வி மனப்பான்மை உடையவர்கள் வாய்ப்புக்களில் கூட கஷ்டங்களை பார்க்கிறார்கள்; வெற்றி மனப்பான்மை உடையவர்கள் கஷ்டங்களில் கூட வாய்ப்புக்களையே பார்க் கிறார்கள்" (ஆங்கில அறிஞர்–ஜெக்ஸ்)

–" இயக்கம், அசைவு, போராட்டமற்ற வாழ்வு உண்மையான வாழ்வன்று" என்ற கவிஞர் அல்லாமா இக்பாலின் கூற்றுக் கிணங்க.

அனைத்து தடைகளையும் தாண்டி, வரலாறு போற்றும் மனிதர்களாய்

*நாளை? இல்லை...இல்லை..*
*இக்கணமே*
*இளைஞனே புறப்படு!*

**▶ கல்கமுவ எம்.என். நிசாட் - பாதிஹ் கல்வி நிறுவனம்**

New Syllabus

# After A/L Join with

The Leader in Professional "Network" Trainings in Sri Lanka !

ASSOCIATE
CISCO CERTIFIED CCNA NETWORK
CISCO CERTIFIED CCNA SECURITY
CISCO CERTIFIED CCNA VOICE
Full time
01 Weekdays - 07th Oct
02 Weekdays - 21st Oct
03 Weekends - 12-13/26-27 Oct

PROFESSIONAL
CISCO CERTIFIED CCNP NETWORK
CISCO CERTIFIED CCNP SECURITY
CISCO CERTIFIED CCNP VOICE
Full time
01 Weekdays - 21st Oct
01 Weekends - 27th Oct

CISCO
12 DAYS BOOTCAMPS
By Mr. Harith Kariapper
Quadruple CCIE #8661
Master Instructor WinNET (UK & CANADA)

CISCO CERTIFIED CCIE ROUTING AND SWITCHING
CISCO CERTIFIED CCIE VOICE
Pre Boot camp
CISCO CERTIFIED CCIE ROUTING AND SWITCHING
Best Instructors @ Best Institute 100% Satisfaction Guaranteed

Best Instructors | Printed Materials | Flexible time table | All 3 Languages

Microsoft
Full time
MCSA
පුවිනයන් සමඟ එක්වන්න
MCSE

EXAM 70-410 Installing & Configuring Server 2012
EXAM 70-411 Administering Windows Server 2012
EXAM 70-412 Configuring Advanced Server 2012 Services
EXAM 70-413 Implementing & Advanced Server Infrastructure
EXAM 70-414 Designing & Implementing a Server Infrastructure

SAN STORAGE
STORAGE AREA NETWORKSING
CISCO EMC hp NetApp BROCADE

Virtualization Technology
Vmware vSphere 5.1 vmware
5 DAYS BOOTCAMP

Linux
RH033 & RH133
Security Admin Training

Diploma In Hardware Engineering With Networking.
CompTIA A+ Certified A+

Special Diploma In Network Administration.
CompTIA Network+ Certified N+

## Special One Day Work Shop on CCTV Installation and Network Cabling

# 100% Hands On Training
# Testing Equipments And Practical
# Remote Monitoring PC/MOBILE/IPAD. Configuration

LKR 2500/=
With Certification

Reffer 5 Friends For WinSYS Courses & Get your Training 100% FREE

NEW Technology Trends 200-120
CCNA (v2.0) IPV6
Cisco Certified Network Associate
தமிழில்

Special OFFER
IN KURUNEGALA
30% Discount
INFO-MESH COMPUTER SYSTEMS
Hotline :- 0777-112771/ 0777- 04 77 08

மிக குறுகிய காலத்தில் தகவல் தொழில் நுட்பத்தில் சிறந்த தேர்ச்சியினைப் பெறவும் தொழில்நுட்ப ஆற்றலை வளர்த்துக் கொள்ளவும் எம்முடன் இணையுங்கள்

WinSYS NETWORKS ®
The network security training provider of the nation
14, SchofieldPlace, Kollupitiya, Colombo-03, SriLanka.
011-2589567 / 011-2589568
www.winsys.lk

-HOTLINE-
Colombo : 0777-259927
Kandy : 0777-807630
Batticaloa : 0777-832871
Kurunegala : 0777-047708
Puttalam : 0777-112771

# E-win NETWORKS ®

**524, Peradeniya Road, Kandy**

0777-807630 | 081-2203786

## Cisco Certifications

CISCO™ CCNA — Cisco Certified Network Associate

- CCNA - 640-802 / 200-120

100% Practicals with Individual Cisco Routers

## Microsoft Certifications

MCTS — Microsoft Certified Technology Specialist

- MCTS - Active Directory
- MCTS - Network Infrastructure
- MCTS - Windows 7
- MCTS - Windows 8

MCSA — Server 2012 — Full time

EXAM 70-410 Installing & Configuring Windows Server 2012

Special 25% Discount On Full Payment

Individual Fast Track & Night Classes Can be Arranged

## Graphic Designing

- Adobe Photoshop
- Adobe Indesigning
- Adobe Illustrator
- CorelDRAW

8000/=

## Web Designing

- Adobe Photoshop
- PHP ( FormS )
- Adobe Dreamweaver
- Flash Animations

12000/=

## Office Applications

- MS Word
- MS Excel
- MS Access
- MS PowerPoing
- Internet & E-mail

6500/=

## AutoCAD Drafting

- 2D Drafting & 3D Modeling

14500/=

Medium - தமிழ் සිංහල English

100% Practical Trainings

**HARDWARE** with Networking 4000/=

**NETWORK** Administration 7000/=

# E-win Networks - Akurana Branch

SPECIALLY BY LADY INSTRUCTORS

100%

LADIES ONLY

- Web Designing
- Graphic Designing
- Office Applications
- Computer for KIDS
- Skype, Internet E-mail

**526/A, Matale Road, Akurana 7**

Behind the "Burger hut" 0777-069242

081-3816166

Full Name :- ..............................

Selected Course :- ..............................

Please Attach this form with the Application

Rs. 1000/= Discount

"கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்க மாட்டான்" என்ற பழமொழிக்கேற்பவே நமது சமூகமும் இருக்கிறது. மனித குலம் வாழ்வாங்கு வாழ்வதற்கு எத்தகைய அந்தஸ்து, உரிமைகள் பெண்ணுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது படைத்தவனுக்கு மட்டுமே தெரியும். அந்த ரஹ்மான் அவற்றையெல்லாம் மிக உயரிய நிலையில் வழங்கியிருக்கிறான். நமது சமூகத்துக்கு இவை பற்றிய அறிவும் தெளிவும் இல்லாமலிருக்கிறது. தெள்ளத் தெளிவாகத் தெரிந்தவர்களுக்கு அவற்றை வழங்கும் மனமில்லாமலிருக்கிறது. பெண்களுக்கு அந்தஸ்தை, உரிமைகளை வழங்கவே கூடாது எனக் கங்கணங் கட்டிக்கொண்டு பெரியதொரு கூட்டமே செயற்படுகிறது. அத்தகையவர்கள் தாஈகளிலும் இருப்பதுதான் மிகப் பெரிய வேதனை.




பெண்கள் சுயமாக சிந்திக்கவோ செயற்படவோ தேவையில்லை. அவர்கள் வீட்டுப்பணிகளைப் பார்த்தால் போதும்; நாங்கள் ஏனைய எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வோம் எனப் பெண்களை முற்றாகப் புறக்கணித்துவிட்டு சமூகத்தை சுவனத்துக்கு அனுப்ப

**நூல் : பெண் நீதமும் நிதர்சனமும்**
**ஆசிரியர் : உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்**
**விலை : 180.00**
**வெளியீடு: அல்ஹஸனாத் வெளியீட்டகம்**

முனைபவர்களை என்ன வென்பது! இறைவன் கொடுத்தவற்றைத் தடுப்பது எவ்வளவு பயங்கரமானது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டாமா?

இந்த நிலையைப் பார்த்துப் பார்த்து மனம் வெதும்புபவர்களுக்கு நூல் வடிவில் ஆறுதல் கிடைத்திருக்கிறது. 'பெண்: நீதமும் நிதர்சனமும்' என்ற தலைப்பைக் கேட்டதும் நூலாசிரியர் அல்ஹஸனாத் இதழில் வாசகர்களின் கேள்விகளுக்கு வழங்கி வந்த பதில்களின் தொகுப்போ என எண்ணத் தோன்றியது. நூலின் அட்டையைப் பார்த்ததும் அந்த ஊகம் பிழையானது என்பது புரிந்தது.

அட்டைப்படம் சற்று வித்தியாசமாய் எழுத்துக்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளே உள்ள சில உப தலைப்புகள் அட்டையில் இடம்பெற்றிருப்பதனால் உள்ளடக்கத்தை நூலை விரிக்காமலே தெரிந்து கொள்ள முடிகிறது.

நூலாசிரியர் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் அவர்களை வாசகர்களுக்குப் புதிதாக அறிமுகம் செய்ய வேண்டியதில்லை. அவர்களது எழுத்துக்களும் உரைகளும் பிரபலமானவை. பெண்கள் மீதான சமூகத்தின் அணுகுமுறைகள் பற்றிய உஸ்தாத் அவர்களின் ஆதங்கத்தை முன்னுரை முதல் நூல் நெடுகிலும் காணமுடிகிறது. பெண்கள் பற்றிய தனது கோணல் பார்வையை இந்தச் சமூகம் சரி செய்யாதவரை சமூகத்தின் போக்கில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை என்பது நிதர்சனம்.

உஸ்தாத் புல்தாஜி அவர்களது 'அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் பார்வையில் பெண்ணின் மகிமை' என்ற நூலின் கருத்துக்களையும் போக்கையும் தழுவியே இந்நூல் எழுதப்பட்டுள்ளதாக நூலாசிரியர் தனது முன்னுரையில் குறிப்பிடுகிறார். அந்த நூலுக்கு அப்பாலும் பல விடயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதுடன் இலங்கைச் சமூகத்துக்குப் பொருந்தும் வகையில் விடயங்களைத் தொகுப்பதிலும் முன்வைப்பதிலும் தான் கவனம் செலுத்தியுள்ளதாகவும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார். அதனை நூலில் தெளிவாகக் காண முடிகிறது.

பிரதானமான எட்டுத் தலைப்புகளில் பெண் பற்றிய பல்வேறு விடயங்களை நூல் ஆராய்கிறது. சமூகத்துக்குக் கரைத்தாவது ஊட்ட வேண்டும் என நினைத்திருந்த விடயங்களை இந்நூல் தர்க்க ரீதியாக விளக்கியிருப்பதைப் பார்க்கக் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியே. வெறுமனே மார்க்கச் சட்டங்களைப் பேசாது, பெண் பற்றிய இறைவனதும் அவனது தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களதும் வழிகாட்டல்களை, அவற்றின் பின்னணியை விளக்கியிருக்கும் பாணி நடுநிலைப் போக்குடையவர்களைப் பெரிதும் கவர்வதோடு, தீவிரப் போக்குடையவர்களைக்கூட நடுநிலையாகச் சிந்திக்கத் தூண்டலாம்.

பல பிழையான புரிதல்களே பெண்களை இஸ்லாத்தின் பெயரால் அடக்கியொடுக்குவதற்குக் காரணமாய் அமைகின்றன. அந்தப் பிழையான புரிதல்கள் இந்நூல் வாசிக்கப்படுவதன் மூலம் கொஞ்சமேனும் களையப்படலாம்.

அல்ஹஸனாத் வெளியீட்டகத்தின் மூலம் இந்நூல் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன் செயலாளர் அஷ்ஷெய்க் அப்துல்லாஹ் அஸ்ஸாம் அவர்கள் தமது பதிப்புரையில் குறிப்பிடுவது போல, இந்நூல் வாசகர் தளத்தில் வரவேற்பையும் நேர், எதிரான கருத்தாடல்களையும் நிச்சயமாகத் தோற்றுவிக்கும். சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இதுபோன்ற அருமையான நூல்களை அல்ஹஸனாத் வெளியீட்டகம் மென்மேலும் சமூகத்துக்கு வழங்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

இந்நூல் மூலம் உள்ளங்கள் மாறி சமூகம் சரியான திசையில் பணிக்க அல்லாஹ் அருள் புரியட்டும்!

- ஷாறா -

# BUSINESS MANAGEMENT



## FOUNDATION IN BUSINESS

## DIPLOMA IN BUSINESS MANAGEMENT

## ADVANCE DIPLOMA IN BUSINESS MANAGEMENT

## UNIVERSITY REPLACEMENT

**இப்பாடப் பயிற்சியின் பின்...**

- விரைவில் கூடிய சம்பளத்தில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள தகைமை உண்டு.
- சுயதொழில் வாய்ப்புக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ள முடி
- UK, USA, Canada, New Zealand, Australia மற்றும் ஏனைய நாடுகளில் பட்டப்படிப்புக்கும் தொழில் வாய்ப்புக்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**TOEIC BRIDGE & TOEIC JUNIOR**
பரீட்சைகளை இலவசமாக தோற்றுவதற்கு அற்புதமான வாய்ப்பு

- Glyndwr University, UK
- Lincoln University College, Malaysia
- Wichita State University, USA
- Marbella University, Spain
- Riccarton High School, New Zealand
- ICL Business College, New Zealand
- Royal Business College, New Zealand
- Bridgwater College, UK

**Register Before 11.10.2013**

தூரப் பிரதேசத்தினருக்கு தங்குமிட வசதியும
3 வேளை உணவும் வழங்கப்படும்.

For Application More Information
E-mail to lchecourse@gmail.com or Visit us at www.lchs.lk

LONDON COLLEGE

## LONDON COLLEGE OF HIGHER STUDIES (PVT) LTD

No. 155/1A, Galle Road, Dehiwala,
Hotline - 071 2357412 / 077 9939010

| Nugegoda | Dematagoda | Kandy | Kandy | Bambalapitiya |
|---|---|---|---|---|
| 0711 601060 | 0114 384462 | 0711 601050 | 0775 492944 | 0112 552877 |

# இறை மறையுடன்



அஷ்ஷெய்க் கியாஸ் முஹம்மத் (நளீமி) M.A விரிவுரையாளர்- ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா

**அல்குர்ஆனுடன் இணைந்து வாழ்ந்தவர்களுக்கு மறுமையில் திருமறை பரிந்துரைக்கும். நாம் அதனை அறிந்திருந்தால்... அதன் கருத்துக்களில் வாழ்ந்திருந்தால்... இராத் தொழுகையில் அதனை ஓதி இன்பம் கண்டிருந்தால்... ஷபாஅத்துக்கான அருகதையைப் பெறுவோம்.**

"இறை வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களது ஈமான் அதிகரிக்கும்" (8:2) என அல்லாஹ் தனது உண்மை விசுவாசிகள் குறித்துப் பிரஸ்தாபிக்கிறான். இது எமக்கும் இறை மறைக்கும் இடையிலான உறவின் அளவுகோலாகும்.

திருமறை வசனங்கள் ஓதப்படுகின்றபோது எமது ஈமானில் ஏற்பாடும் மாற்றம் என்ன? மாற்றம் காணப்படாவிட்டால் அதற்கான காரணிகள் என்ன?

பொதுவாக எம்மை, எமது சமூகத்தை நோக்குகின்றபோது, குர்ஆனை ஓதுவதோடு மாத்திரமுள்ள சுருங்கிய ஓர் உறவையே காண்கிறோம். அதுவும்கூட ரமழானில் அதிகரித்து ஏனைய காலங்களில் குறைந்து காணப்படுகின்றது. அதிலும் தஜ்வீத் சட்டங்களைப் பேணி ஓதும் அளவு பலவீனமான விகிதாசாரத்தையே கொண்டுள்ளது.

ஸஹாபாக்களின் சூழலில் கால தேவைக்கேற்ப சிறிது சிறிதாக இறங்கிக் கொண்டிருந்த குர்ஆன் அவர்களின் உள்ளங்களைத் தொட்டது. ஸஹாபாக்கள் ஒவ்வொரு வசனமும் தம்மீது இறங்குவதாக எண்ணினார்கள். குர்ஆனிய கருத்துக்களை உள்வாங்குவதற்கு மொழி ஒரு தடையாக இருக்கவில்லை. நாம் குர்ஆனை எதிர்கொள்ளும் மனோநிலை, எமக்கும் அரபு மொழிக்கும் இடையிலான இடைவெளி ஆகிய இவ்விரு நிலைகளும் எமக்கு முக்கிய தடைகளாய் அமைகின்றன.

இறை வழிகாட்டலின் தேவையை உணர்ந்து, அதை விட்டும் தூரமாவதன் பாரதூரத்தை உள்ளத்துக்கு எடுத்து அல்குர்ஆனுடனான நெருக்கத்தை அதிகரிக்க வேண்டும். அதன் வசனங்கள் எமது உள்ளத்தில் உரையாடுகின்றன எனும் உணர்வை நாம் ஒவ்வொருவரும் பெற்றுக்கொள்வதற்காக எம்மை வழிகாட்டுவதற்காக எம்மோடு உரையாடும் வார்த்தைகளாக இவற்றை மதிக்க வேண்டும். இத்தகைய நிலையில் வைத்து திருமறையை நோக்கியதன் காரணமாகவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் வஹி தாமதிப்பதும் தடைப்படுவதும் தாங்கொணாத் துயரமாய் மாறியது.

நபிகளாரின் வபாத்தின் பின்னர் ஒரு மூதாட்டியின் அழுகைக்கான காரணம் கேட்கப்பட்டபோது "நபிகளாரின் பிரிவு அல்ல வஹியின் பிரிவுதான் எனது அழுகைக்கான காரணம்" என அவர் பதில் கூறினார். ஸூரதுந் நூரின் வசனங்கள் ஏற்படுத்திய தாக்கத்தால் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நோயுற்றமையும் இப்பின்னணியிலாகும்.

முன்னைய காலங்களை விடவும் இன்று குர்ஆனிய கருத்துக்களை விளங்குவதற்கான சந்தர்ப்பங்கள் ஏராளமாகவே கிடைக்கின்றன. அரபு மொழியைப் படிக்கும் வாய்ப்புக்கள் மிக அதிகம். குர்ஆனிய அரபு இலகுவானது. ஒரே போக்கைக் கொண்டது. அரபு மொழி தெரியாதவர்களுக்கு தர்ஜமா, தப்ஸீர்கள் தமது தாய்மொழிகளிலேயே கிடைக்கின்றன. தப்ஸீர் வகுப்புகள் இறுவட்டுக்கள், இணையத்தள வாய்ப்புகள் என குர்ஆனை விளங்குவதற்கான ஏற்பாடுகள் ஏராளம்!

இன்று இஸ்லாத்தில் நுழைபவர்களில் அதிகமானோர் குர்ஆனியக் கருத்துக்களால் கவரப்பட்டே மார்க்கத்தை ஏற்கின்றனர். தொடர்ந்தும் திருமறையோடுள்ள உறவைப் பேணுகின்றனர். இறை தீனுக்குப் பங்காற்றுகின்றனர். அல்குர்ஆனுடன் இணைந்து வாழ்ந்தவர்களுக்கு மறுமையில் திருமறை பரிந்துரைக்கும். நாம் அதனை அறிந்திருந்தால்... அதன் கருத்துக்களில் வாழ்ந்திருந்தால்... இராத் தொழுகையில் அதனை ஓதி இன்பம் கண்டிருந்தால்... ஷபாஅத்துக்கான அருகதையைப் பெறுவோம்.

"அல்குர்ஆன் உனக்கு சார்பான அல்லது எதிரான சான்றாக அமையும்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். இதில் எந்த நிலையில் நாம் இருக்கின்றோம்?

அல்குர்ஆனுடனான உறவு பலப்பட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உருக்கமாக இறைஞ்சுவதைப் பாருங்கள்.

اللَّهُمَّ إِنِّي عَبْدُكَ، ابْنُ عَبْدِكَ، ابْنُ أَمَتِكَ، نَاصِيَتِي
بِيَدِكَ، مَاضٍ فِيَّ حُكْمُكَ، عَدْلٌ فِيَّ قَضَاؤُكَ، أَسْأَلُكَ
بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ، سَمَّيْتَ بِهِ نَفْسَكَ، أَوْ أَنْزَلْتَهُ فِي
كِتَابِكَ، أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ، أَوِ اسْتَأْثَرْتَ بِهِ
فِي عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ، أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيعَ قَلْبِي
وَنُورَ صَدْرِي، وَجَلَاءَ حُزْنِي، وَذَهَابَ هَمِّي،

*"யா அல்லாஹ்! நான் உனது அடிமை. அடிமையின் மகன். அடிமைப் பெண்ணின் மகன். எனது அனைத்து விடயங்களும் உனது கரங்களில் இருக்கின்றன. உனது தீர்ப்பு என்னில் செயல்படுகின்றது. உனது முடிவுகள் நீதமானவை. உனக்குரிய அனைத்துப் பெயர்களைக் கொண்டு உன்னிடம் கேட்கின்றேன். அது உனக்கு நீ சூட்டிக் கொண்ட பெயர் அல்லது உனது வேதத்தில் இறக்கிய அல்லது உனது மறைவான அறிவில் பிரத்தியேகமாக வைத்துள்ள பெயர். யா அல்லாஹ்! அல்குர்ஆனை எனது உள்ளத்தின் வசந்தமாகவும் நெஞ்சத்தில் ஒளியாகவும் கவலைகளைப் போக்குகின்ற ஒன்றாகவும் ஆக்கிவைப்பாயாக!"*

சகோதரர்களே! அல்குர்ஆனுக்கும் எமக்கும் இடையே உள்ள உறவை மீள்பரிசிலனை செய்வோம். பலவீனங்களைக் களைவோம். பலமான உறவுக்கு வழி காண்போம்!



- அபூ பரீரா -

# சமீபமான வெற்றி

இருண்ட இரவின் நீளத்தை கண்விழித்திருப்பவன் தான் நன்கு உணர்ந்து கொள்கிறான். உறங்கியவனால் அதன் நீளத்தை நன்கு உணர்ந்து கொள்ள முடியாது. ஆனால், உண்மை என்னவெனில், நீண்ட இரவிற்குப் பின்னர் வெளிச்சம் இருக்கிறது. பசிக்குப் பின்னால்தான் உணவு சுவையாகிறது. தாகத்திற்குப் பின்னால் தண்ணீர் இனிமையாகிறது. நீண்ட நேரம் கண்விழித்திருந்தால் தான் உறக்கம் இன்பமாகிறது. நோய்க்குப் பின்னால்தான் சுகமிருக்கிறது. பாதையை விட்டு வழிதவறியவனே நேரான பாதையைத் தேடுவான். சிரமத்தில் வாடுபவனே விடியலைத் தேடுவான். இப்படியாக இறை நியதியின் வரிசை நீண்டு கொண்டே செல்கிறது.

உண்மையில் இரவென்றால் பகலுண்டு. நோய் என்றால் சுகமுண்டு. இப்படி ஒவ்வொரு துயரத்துக்குப் பின்னும் விடியலை வைத்தே இறைவன் இந்தப் பூவுலகைப் படைத்திருக்கிறான். இன்பங்களின் பெறுமதியை விளங்குவதற்கு துன்பங்களை எதிர்கொண்டாக வேண்டும் என்பது இறை நியதி. இதனை இறைவன் இப்படிக் கூறுகிறான்:

*"அல்லாஹ் தன்னிடமிருந்து வெற்றியையோ அல்லது ஒரு நற்காரியத்தையோ அதிசீக்கிரத்தில் உங்களுக்குக் கொண்டு வந்துவிடலாம்."* (அல்மாயிதா: 52)

ஒரு மனிதன் ஒரு நிலையில் தொடர்ந்து இருப்பது என்பது உண்மையல்ல. காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருக்கிறது என்பதையும் இந்த இறைவசனம் நமக்கு உணர்த்துகிறது. ஒவ்வொரு துளிக் கண்ணீருக்குப் பின்னும் இன்பமிருக்கிறது. பயத்துடன் அபயம் இருக்கிறது. திடுக்கத்துடன் அமைதியிருக்கிறது. அந்த நெருப்பால் இறைவனின் நேசர் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை எரித்து விட முடியவில்லை. அந்தக் கடலில் இறைவனின் தூதர் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை மூழ்கடிக்க முடியவில்லை. ஏன், எமது கண்மணி நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஹிராக் குகையில் தனது தோழருடன் வீற்றிருக்கையில் அந்தக் குறைஷிக் காபிர்களால் கண்டு கொள்ள முடியவில்லை.

மக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட அந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள்தானே இன்னும் உலகம் பெருமையாகப் பேசும் அளவுக்கு பாரியதோர் அரசாட்சியை மதீனாவில் நிலைநிறுத்தினார்கள்... மனித உருவம் கொண்ட வானவர்களை இந்த பூமியிலே உருவாக்கினார்கள்... ஆடு மேய்த்த சமூகத்தை உலகாளும் மிக அரசியல்வாதிகளாக இந்தப் பூமியிலே மாற்றியமைத்தார்கள்... தன்னைப் படைத்த அந்த இறைவனை மாத்திரம் அஞ்சி செயல்படக்கூடிய ஓர் ஒப்புவமையற்ற சமூகத்தை அந்த பூமியில் வளர்த்தெடுத்தார்கள்... ஏன், ஆரம்பத்தில் அவர்கள் சுமந்து கொண்ட அந்தச் சுமையின் பின் பாரிய வெற்றியை இறைவன் கொடுத்தான்.

இதனையே இறைவன், *"நபியே! உமக்கு அல்லாஹ்வின் உதவி மற்றும் வெற்றி வந்தபோது"* (அந்நஸ்ர்: 1) என்று குறிப்பிடுகிறான்.

சோகத்துடன் சுகமிருக்கிறது, தோல்வியுடன் வெற்றியிருக்கிறது, தியாகத்தின் பின் இறைவனின் உதவியிருக்கிறது என்பதையும் இந்த இறைவசனம் சுட்டிக்காட்டுகிறது.



தொகுப்பு: ஹயா அர்வா

# நபி வழியில் தியாகப் பெருநாள்...

**ஜாமிஆ நளீமிய்யாவின் பிரதிப் பணிப்பாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் துணைத் தலைவர்களுள் ஒருவருமான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் (நளீமி) அவர்கள் ஹஜ்ஜுப் பெருநாள் நடைமுறைகள் குறித்து 2009 இல் கொள்ளுப்பிட்டி ஜுமுஆப் பள்ளிவாசலில் நிகழ்த்திய குத்பா பிரசங்கத்தின் சுருக்கத்தை அல்ஹஸனாத் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.**

பெருநாள் தினத்தை மறுமையோடு ஒப்பிட முடியும். மறுமை நாளில் மனிதர்கள் எவ்வாறு இருப்பார்கள் என்பதனை அல்குர்ஆன் நமக்குச் சொல்லித் தருகிறது.

"அந்நாளில் சில முகங்கள் மகிழ்ச்சியினால் இலங்கிக் கொண்டிருக்கும். சிரித்தவையாகவும் மகிழ்வுடையதாகவும் இருக்கும். ஆனால், அந்நாளில் வேறு சில முகங்கள் மீது புழுதி படிந்திருக்கும். அவற்றைக் கருமை இருள் மூடியிருக்கும்." (ஸூரா அபஸ: 38-41)

பெருநாள் தினங்களிலும் சில முகங்கள் இப்படித்தான் இருக்கும். துல்ஹிஜ்ஜா மாதத்தின் முதல் பத்து நாட்களிலும் நோன்பு நோற்று, நற்கருமங்கள் செய்து, இபாதத்தில் ஈடுபட்டவர்களுக்கு இந்த ஹஜ்ஜுப் பெருநாள் மகிழ்ச் சிகரமானதாக இருக்கும். நற்கருமங்கள் செய்தவர்கள் இந்நாளில் மலர்ந்த முகத்தோடு இருப்பார்கள். அவர்களின் இன்முகங்களில் புன்னகை பூத்திருக்கும்.

மறுபக்கம், இந்த வருடத்தைப் பாழ்படுத்தியவர்கள் அல்லாஹ்வை மறந்து பாவ காரியங்களில் ஈடுபட்டவர்கள்... இந்த துல்ஹிஜ்ஜா மாதத்தை வீணாகக் கழித்தவர்கள்... ஹஜ் கடமையாக இருந்தும் அதை நிறைவேற்றாதவர்கள் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் இருள் சூழ்ந்த முகத்தோடு இருப்பார்கள். அவர்களின் முகத்தில் மகிழ்ச்சியோ மலர்ச்சியோ தென்படாது.

எனவே, பெருநாள் தினம் மறுமை நாளுக்கு ஒப்பான ஒரு நாள் என்றால் அதில் மிகையில்லை.

பெருநாள் தினம் ஆடிப் பாடி, கும்மாளமிட்டு வீண் விளையாட்டுகளில் கழிப்பதற்கான ஒரு நாளல்ல. பெருநாள் தினம் தக்பீரோடு ஆரம்பிக்கிறது. தொழுகையோடு தொடர்கிறது. தக்பீரோடு நிறைவு பெறுகிறது. நல்லமல்கள் புரியக்கூடிய ஒரு நன்னாள் அது. ஈதுல் அழ்ஹா தியாகத் திருநாளை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காட்டித் தந்த முறைப் பிரகாரம் கொண்டாட வேண்டும்.

பெருநாள் தினத்தில், விசேடமாக பெருநாளுக்காக குளிப்பது ஒரு முக்கியமான ஸுன்னா. நறுமணம் பூசிக் கொள்வதும் இருக்கின்ற ஆடைகளுள் அழகான ஆடைகளை அணிந்து கொள்வதும் பெருநாள் தினத்திலே நாம் கடைபிடிக்க வேண்டிய ஸுன்னாக்கள். ஆடை, அணிகலன்கள் புத்தம் புதியதாக இருக்க வேண்டும் என்பதில்லை. சிறந்த ஆடையாக இருந்தால் போதுமானது.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பேரர் ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "பெருநாள் தினத்திலே எம்மிடம் இருக்கக்கூடிய ஆடைகளுள் மிகச் சிறந்த ஆடையை நாம் அணிய வேண்டும்; எம்மிடமிருக்கும் நறுமணங்களுள் மிக உயர்ந்த நறுமணத்தைப் பூசிக் கொள்ள வேண்டும்; எம்மிடமுள்ள கால்நடைகளுள் மிகவும் பெறுமதியான கால்நடையை உழ்ஹிய்யாவாக அறுத்துப் பலியிடவேண்டும் என்று ரஸூலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்குப் பணித்திருக்கின்றார்கள்'' எனச் சொல்கிறார்கள். (அல்ஹாகிம்)

இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சொல்கிறார்கள்.

"நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இரண்டு பெருநாட்களின்போதும் தன்னிடம் இருக்கின்ற ஆடைகளுள் மிக அழகான ஆடையைத் தெரிவு செய்து அணிந்து கொள்வார்கள். அவர்களிடம் ஒரு விஷேடமான ஆடை இருந்தது. குறிப்பாக, அந்த ஆடையை ஈதுல் பித்ர் தினத்திலும் ஈதுல் அழ்ஹா தினத்திலும் அவர்கள் அணிவார்கள்."

ஈதுல் பித்ர்- நோன்புப் பெருநாளைப் பொறுத்தவரை, பெருநாள் தொழுகைக்குச் செல்வதற்கு முன்னர் காலை உணவை உட்கொள்வது நபிவழியாகும். ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைப் பொறுத்தவரை நேரகாலத்தோடு பள்ளிவாசலுக்குச் சென்று பெருநாள் தொழுகையை

**பெருநாள் தினம் ஆடிப் பாடி, கும்மாளமிட்டு வீண் விளையாட்டுகளில் கழிப்பதற்கான ஒரு நாளல்ல. பெருநாள் தினம் தக்பீரோடு ஆரம்பிக்கிறது. தொழுகையோடு தொடர்கிறது. தக்பீரோடு நிறைவு பெறுகிறது. நல்லமல்கள் புரியக்கூடிய ஒரு நன்னாள் அது. ஈதுல் அழ்ஹா தியாகத்திருநாளை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் காட்டித் தந்த முறைப் பிரகாரம் கொண்டாட வேண்டும்.**

நிறைவேற்றி விட்டு வீடு திரும்பியதன் பின்னரே காலை உணவை உட்கொள்ள வேண்டும். அதுதான் ஸுன்னா. இப்படித்தான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்.

“நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் உண்ணாமல் நோன்புப் பெருநாள் தொழுகைக்கு புறப்பட மாட்டார்கள். ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையை தொழுவதற்கு முன் உண்ண மாட்டார்கள்” என புரைதா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (அத்திர்மதி, அஹ்மத், இப்னு மாஜா, இப்னு ஹிப்பான்)

இரு பெருநாள் தொழுகைகளை பொதுவான ஒரு மைதானத்தில் அல்லது ஒரு திறந்த வெளியில் (முஸல்லா) அமைத்துக் கொள்வது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய முக்கியமான ஒரு ஸுன்னா வாகும்.

மழை போன்ற நியாயமான ஒரு காரணத்துக்காக மாத்திரம் பெருநாள் தொழுகையை பள்ளிவாசலில் நடத்தலாம். அப்படி நியாயமான காரணங்கள் இல்லாத நிலையிலும் பள்ளிவாசல்களில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவது மார்க்கத்தில் தடை செய்யப்பட்டதல்ல என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னுடைய வாழ்நாளில் மழை காரணமாக ஒரே ஒரு பெருநாள் தொழுகையைத்தான் பள்ளிவாசலில் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஏனைய பெருநாள் தொழுகைகளையெல்லாம் அவர்கள் ஒரு பொதுவான மைதானத்தில் அல்லது திறந்த வெளியில்தான் நடத்தியிருக்கிறார்கள் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

திறந்த இடத்திலே பெருநாள் தொழுகையை அமைத்துக் கொள்வதோடு ஆண்கள் மாத்திரமன்றி, பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் அனைவரும் அந்த மைதானத்துக்கு செல்வதும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய வழிமுறையைச் சார்ந்ததாகும்.

உம்மு அதிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் சொல்கிறார்கள்.

“வீட்டில் தனித்திருக்கும் நாங்கள் மாதவிடாய் பெண்கள் உட்பட இரு பெருநாள் தொழுகைக்கு வெளியே வர ஆணையிடப்பட்டோம். தொழுகையில் கலந்து கொள்ளவும் பிரார்த்தனைகளில் பங்கேற்கவும் அனுமதிக்கப்பட்டோம். ஆனால், மாதவிடாய் பெண்கள் மாத்திரம் தொழுமிடத்திலிருந்து ஒரு பக்கமாக ஒதுங்கி இருக்க பணிக்கப்பட்டோம்...” (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

“நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தன்னுடைய மனைவிமார் உட்பட தனது பெண் பிள்ளைகள் எல்லோரையும் பெருநாள் தொழுகைக்காக மைதானத்துக்கு அழைத்துச் செல்வார்கள்” என்று இப்னு அப்பாஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸும் குறிப்பிடத்தக்கது.

பெருநாள் தினத்தில் கடைபிடிக்க வேண்டிய மற்றுமொரு முக்கியமான ஸுன்னா இருக்கிறது. அதுதான் ஒரு பாதையால் தொழுகைக்குச் சென்று மற்றொரு பதையால் வீடு திரும்புதலாகும்.

ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

“நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பெருநாள் தொழுகைக்காகச் செல்கின்றபோது ஒரு பாதையால் செல்வார்கள். திரும்புகின்றபோது மற்றொரு வழியால் திரும்புவார்கள்.” (ஸஹீஹு முஸ்லிம், அஹ்மத், அத்திர்மிதி)

தொழுகை நடைபெறும் இடத்துக்குச் செல்வதற்கு ஒரு பாதை மாத்திரமே இருக்கின்றது அல்லது வேறு பாதையினால் திரும்புவதில் ஏதும் சிரமங்கள் இருக்கின்றன என அறிந்தால் சென்ற பாதையினூடாகவே திரும்பி வருவதற்கு மார்க்கத்தில் எந்தத் தடையும் இல்லை. ஆயுளில் மிகவும் அரிதாகக் கிடைக்கக்கூடிய இத்தகைய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி இப்படியான ஸுன்னத்துக்களை முடிந்தவரை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

பெருநாள் தொழுகையுடன் தொடர்புடைய மிக முக்கியமான மற்றுமொரு ஸுன்னா பெருநாள் தொழுகையை குறித்த நேரத்தில் தொழுவது. ஆனால், இன்று பெருநாள் தொழுகை முடியுமானவரை தாமதப்படுத்தப்படுகிறது. இது நபியவர்களின் ஸுன்னாவுக்கு மாற்றமானது. குறிப்பாக, ஈதுல் அழ்ஹா ஹஜ்ஜுப் பெருநாளுக்குரிய தொழுகையை முடியுமான வரை நேரகாலத்தோடு தொழுவது மிக முக்கியமான ஒரு ஸுன்னா.

ஜுன்துப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்,

“இரண்டு ஈட்டியின் அளவு உயரத்திற்கு சூரியன் உயரும்போது ஈதுல் பித்ர் பெருநாள் தொழுகையையும் சூரியன் ஓர் ஈட்டியின் அளவுக்கு உயரும்போது ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நிறைவேற்றுவார்கள்.”

“ஈதுல் அழ்ஹா பெருநாள் தொழுகையை நேரகாலத்

தோடு நிறைவேற்றுவது ஸுன்னத்தாகும்" என இமாம் இப்னு குதாமா (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் சொல்கிறார்கள்.

பெருநாள் தொழுகை கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டிய, வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னா (ஸுன்னா முஅக்கதா). பெருநாள் தொழுகையை நிறைவேற்றும் சிலர் பெருநாள் குத்பா பிரசங்கத்தை கேட்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. பெருநாள் தொழுகை ஒரு ஸுன்னா முஅக்கதாவாக இருப்பது போலவே பெருநாள் குத்பாவைக் கேட்பதும் ஒரு ஸுன்னா முஅக்கதா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மனிதர்களின் இயல்பை, சுபாவத்தை அறிந்து வைத்துள்ள இஸ்லாம், பெருநாள் தினத்தில் மகிழ்சியை வெளிப்படுத்தும் வகையில் ஹலாலான ஆகுமான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறது.

ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் சொல்கிறார்கள்.

"பெருநாள் தினத்தில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பார்த்திருக்க அபீசீனியா அடிமைகள் ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். நான் அந்தக் காட்சியை நபியவர்களின் புஜத்துக்குப் பின்னால் இருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தேன். நான் அந்தக் காட்சியைக் கண்டு களிக்க வேண்டுமென்பதற்காக நபியவர்கள் குனிந்து தனது முதுகைப் பணித்தார்கள். நான் மிகவும் மகிழ்ச்சியாக அந்த அபீசீனியா அடிமைகளுடைய ஆடல், பாடல்களைக் கேட்டு ரசித்தேன். மனநிறைவு அடைந்ததைத் தொடர்ந்து நான் வீட்டுக்குள்ளே சென்று விட்டேன்." (ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹு முஸ்லிம்)

இந்த வகையில் எமது குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் இந்தப் பெருநாள் தினத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் வகையில் ஆகுமான, அனுமதிக்கப்பட்ட விளையாட்டுக்களை, கலை நிகழ்ச்சிகளை ஷரீஆ வரம்புகளைப் பேணி ஒழுங்கு செய்ய வேண்டிய தேவையும் அவசியமும் இருக்கின்றது. இது மனிதனின் அழகியல் தேவை. இது நிறைவேற்றப்படாதபோது அவர்கள் வீண் விளையாட்டுக்கள், கேளிக்கைகளின்பால் திசை திரும்புவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

பெருநாள் தினத்தல் அதிகமதிகம் அல்லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் சொல்ல வேண்டும். அதுவும் முக்கிய ஸுன்னாக்களில் ஒன்று. ஈதுல் அழ்ஹாவைப் பொறுத்தவரை பெருநாள் தினம் தொடக்கம் அய்யாமுத் தஷ்ரீக்குடைய நாட்கள் முடியும் வரை தக்பீர் சொல்வது ஸுன்னா. அந்த வகையில் தக்பீரை அதிகமதிகம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்துவத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்துவதற்காகவுமே அல்லாஹ் இதன் மூலம் நாடுகின்றான்" என அல்லாஹுத் தஆலா அவனைப் போற்றிப் புகழுமாறு கூறுகின்றான்.

"ஈத் பெருநாட்களை அல்லாஹ்வைப் புகழ்ந்தும் தக்பீர் கூறியும் அழகுபடுத்துங்கள்" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெருநாள் தினத்தில் நிறைவேற்ற வேண்டிய மற்றுமொரு ஸுன்னா இருக்கின்றது. அதுதான் வாழ்த்துத் தெரிவிப்பது. பெருநாள் தினத்தில் நபித் தோழர்கள் சந்தித்துக் கொண்டால் "தகப் பலல்லாஹு மின்னா வ மின்கும்" (அல்லாஹ் உங்களையும் என்னையும் பொருந்திக் கொள்வானாக) என்று வாழ்த்துக் கூறியவர்களாக முஸாபஹா, முஆனகா செய்துகொள்வார்கள். இது வெறுமனே ஒரு வாழ்த்து மட்டுமல்ல, ஓர் உயர்ந்த பிரார்த்தனையும்கூட.

ஈதுல் அழ்ஹாவைப் பொறுத்தவரை உழ்ஹிய்யா வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னா (ஸுன்னா முஅக்கதா) என்ற வகையில் இந்தக் கடமையையும் நாம் நிறைவேற்ற வேண்டும். உழ்ஹிய்யா கொடுப்பதினூடாக இரண்டு நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஒன்று, இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடைய தியாகத்தை, அர்ப்பணத்தை நினைவுகூர்தல். மற்றையது பெருநாள் தினத்தில் ஏழைகள், தேவையுடையவர்களுக்கு மாமிசத்தைக் கொடுத்து அவர்களுடைய தேவையை நிறைவேற்றுதல்.

இலங்கை பல்லின சமூகத்தவர்கள் வாழும் ஒரு நாடு. பிற சமயத்தவர்களுடைய உணர்வுகளை மதிப்பது எமது கடமை. இது இஸ்லாம் எம்மிடம் வேண்டிநிற்கும் ஓர் அடிப்படைப் பண்பு. இலங்கையில் பெரும்பான்மையினராக வாழ்கின்ற பௌத்தர்கள் பசு வதையை விரும்பாதவர்கள்; அதனை வெறுப்பவர்கள். அவர்கள் பசு மாட்டை புனிதமாக மதிக்கின்ற நம்பிக்கை கொண்டவர்கள். எனவே, நாம் மாடு அறுத்து குர்பான் கொடுக்கின்றபோது அவர்களுடைய மத உணர்வுகள் புண்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது.

பெருநாள் தினத்தில் எமது சகோதர சகோதரிகள், இனபந்துக்கள், அன்பர்களை, நண்பர்கள், உற்றார் உறவினரை அரவணைப்பது, ஆதரிப்பது, அவர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவது அவர்களுடனான உறவைப் பலப்பலப் படுத்திக் கொள்வது, பகைமை இருந்தால் அதனை அல்லாஹ்வுக்காக மன்னித்து உறவைப் புதுப்பித்துக் கொள்வது... போன்ற உன்னத கூலிகளைப் பெற்றுத் தரக்கூடிய அம்சங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, எமது பெற்றோர், சகோதர, சகோதரிகள் உட்பட இரத்த உறவினர்களுடனான உறவுகளை பலப்படுத்திக் கொள்ள ஈதுல் அழ்ஹா பெருநாள் உதவும்.

"குடும்ப உறவை முறித்துக் கொண்டவன் சுவனம் நுழையமாட்டான்" என்று ரஸுலுல்லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

மனிதர்கள் தவறிழைக்கக் கூடியவர்கள்; பலவீனமானவர்கள் என்பதனால் நாம் எமது வீட்டில், காரியாலயத்தில், ஊரில் சக மனிதர்களோடு உறவாடுகின்றபோது பகைமை ஏற்பட்டிருக்கும்; சிலரோடு அதிருப்தியடைந்திருப்போம்; மற்றும் சிலரோடு கோபித்துக் கொண்டிருப்போம்.

இவற்றையெல்லாம் போக்கிக் கொள்வதற்கான அரிய தொரு சந்தர்ப்பமாக இத்தினத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு மனிதன் உலகில் இரண்டு விடயங்களை அடிப்ப டைத் தேவையாகக் கருதுகிறான். ஒன்று, நீண்ட ஆயுள் கிடைக்கவேண்டும் என விரும்புவது. இரண்டாவது, தன்னுடைய வாழ்வாதாரத்தில் பரகத் கிடைக்க வேண்டும் என்பது. அவ்விரு தேவைகளையும் இரத்த உறவுகளைப் பேணி நடப்பதன் மூலம் அல்லாஹ் அருளுவதாக நபியவர்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

"யார் தனது வாழ்வாதாரம் விசாலமாக்கப்பட வேண்டுமெனவும் ஆயுள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகிறாரோ அவர் தனது இனபந்துக்களுடன் இணைந்து வாழட்டும்."

இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

"தனது இரட்சகனை அஞ்சி இரத்த பந்துக்களுடன் இணைந்து வாழ்பவருடைய ஆயுள் நீளமாக் கப்படும்; செல்வம் பெருகும்; அவரை அவரது குடும்பத்தினர் நேசிப்பர்." (அல்அதபுல் முப்ரத்)

இரத்த உறவைப் பேணி வாழ்ந்தால், தன் குடும்பத்தினருடன் நெருக்கமான உறவைப் பேணி வாழ்ந்தால் சுகமாக வாழலாம்; நீண்ட ஆயுளைப் பெறலாம். இனபந்துக்களுடனான உறவைத் துண்டித்து, குறைத்துக் கொண்டு அவர்களை அனுசரிக்காமல், அரவணைக்காமல் சுயநலமிகளாக வாழ்கின்ற மனிதர்கள் அவர்கள் நினைத்தது போன்று ஆரோக்கியமாக வாழ முடியாது; அவர்களது நாளாந்த செலவினம் குறைவடையாது. அதற்கு மாற்றமான விளைவையே அவர்கள் அனுபவிப்பார்கள். இதனை நாம் இன்று நடைமுறையில் காண்கின்றோம்.

மனித வாழ்வுக்குத் தேவையான அத்தனை வழிகாட்டல்களும் இஸ்லாத்தில் உண்டு. மனிதன் உலகில் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கான, ஆரோக்கியதுடன் நீண்ட ஆயுளைப் பெற்று வாழ்வதற்கான அற்புதமான வழிகாட்டல்களை இஸ்லாம் வழங்கியிருக்கின்றது.

அத்தகைய வழிகாட்டலில் ஒன்றுதான், எமது உற்றார் உறவினர்களை, இரத்த உறவினர்கள் நாம் எந்தளவு தூரம் சேர்ந்து நடக்கிறோமோ அந்தளவுக்கு அல்லாஹு தஆலா எமது வாழ்வாதாரத்திலும் ஆயுளிலும் விஸ்தீரணத்தை ஏற்படுத்துவதாகும்.

பெருநாள் தினத்தில் அண்டை அயலவர்களுக்கு நாம் அதிகம் உபகாரம் செய்ய வேண்டும். அவர்கள் முஸ்லிம்களாகவோ முஸ்லிமல்லாதவர்களாகவோ இருக்கலாம். அவர்களை அனுசரிக்கின்ற, அரவணைக்கின்ற ஒரு நாளாக பெருநாள் தினத்தை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும். அவர்களைச் சந்தித்தல், வாழ்த்துத் தெரிவித்தல், அவர்களுக்கு உணவுப் பண்டங்களைக் கொடுத்தனுப்புதல் போன்ற அவர்களை மகிழ்வூட்டுகின்ற சந்தர்ப்பமாகவும் இந்தப் பெருநாள் தினத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.


இவற்றுக்கூடாக சாந்தியும் சமாதானமும் ஐக்கியமும் நிலவக்கூடிய ஒரு கிராமத்தை, ஒரு நகரத்தை, ஒரு நாட்டை, ஓர் உலகத்தைக் கட்டியெழுப்பவே இந்த மார்க்கம் விரும்புகிறது. இந்த மார்க்கத்தின் பிரதான நோக்கமே சாந்தி, சமாதானம், அமைதியை இந்த உலகில் நிலைநிறுத்துவதுதான்.

இந்த மார்க்கம் ஒவ்வோர் அமலுக்கூடாகவும் மனிதர்களுக்கு மத்தியில் ஒற்றுமையை, ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப விரும்புகிறது. பெருநாள் தினம் இந்த ஐக்கியத்தையும் ஒற்றுமையையும் பிரகடனப்படுத்துவதற்கான நல்லதொரு சந்தர்ப்பம். குறிப்பாக, இந்தப் பெருநாள் தினத்தைத் தொடர்ந்து நாம் அந்நிய மக்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்துவதற்கூடாக இந்த மார்க்கத்தின் செய்தியை எத்திவைக்க முடியும்.

எனவே, பெருநாள் தினம் என்பது எமது குடும்பத்தினரிடையே, சகோதர சகோதரிகளுக்கு மத்தியில், அண்டை அயலவர்களுக்கு மத்தியில் ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டிய நாள். எம்மைச் சூழ வாழ்கின்ற அனைவர் மத்தியிலும் சாந்தி சமாதானத்தை உருவாக்க வேண்டிய நாள். இந்த மகத்தான தியாகத் திருநாளின் ஸுன்னத்துக்களை, இஸ்லாமிய தத்துவங்களை, தாத்பரியங்களை, அடிப்படையான போதனைகளை நாம் கடைபிடிப்பதற்கு அல்லாஹு தஆலா எம் அனைவருக்கும் அருள் புரிவானாக!







# ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்க நாஸிமின் துருக்கி விஜயம்

கடந்த 23 ஒகஸ்ட் தொடக்கம் 04 ஆம் திகதி வரை ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் தேசிய தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எம். சுபியான் (நளீமி) அவர்கள் துருக்கி நாட்டிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். இதன்போது பல நிகழ்வுகளில் கலந்து கொண்டார். ஒகஸ்ட் 24 முதல் 30ஆம் திகதி வரை இஸ்தான்பூல் நகரில் Scientific Studies Association (ILEM) அமைப்பு மற்றும் துருக்கி பிரதமர் செயலகத்தின் பொது இராஜதந்திர அலுவலகம் (KDK) -Republic of Turkey Prime ministry Office of Public Diplomacy- என்பன இணைந்து "21 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம் உலகத்தில் ஏற்படும் மாற்றங்கள்" எனும் கருப் பொருளில் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்டு "சர்வதேச இஸ்லாமிய எழுச்சியும் சிறுபான்மையினர் என்ற வகையில் இலங்கை முஸ்லிம்களும்" எனும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்.

இச்சர்வதேச மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட நாடுக ளிலிருந்து 45 ஆய்வாளர்கள் கலந்து கொண்டமை குறிப் பிடத்தக்கது.

அம்மாநாட்டைத் தொடர்ந்து ஆகஸ்ட் 30ஆம் திகதி இஸ்தான்பூல் நகரில் சகோதரத்துவ அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச சகோதரத்துவ ஒன்றுகூடலிலும் கலந்து கொண்டார். இவ்வொன்று கூடலில் 30க்கு மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதி கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 31, செப்டெம்பர் 01ஆம் திகதிகளில் சர்வதேச இளைஞர் பேரவையினால் (International Youth Forum) "இஸ்லாமிய சகோதரத்துவமும் முஸ்லிம் இளைஞர்களும்" எனும் கருப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அவ் அமைப்பின் 8ஆவது சர்வதேச மாநாட்டில் நாஸிம் அவர்கள் கலந்து கொண்டதோடு "இஸ்லாமிய சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புவதில் அரசியல் மற்றும் பொருளாதார காரணிகளின் வகிபாகம்" எனும் தலைப்பில் சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தியிருந்தார்.

தொடர்ந்து ஆகஸ்ட் 2, 3 ஆம் திகதிகளில் துருக்கியைச் சேர்ந்த முக்கிய அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களான IHH, UNIW, SADAKATASI என்பவற்றின் பிரதிநிதிகளுடன் நட்புறவு ரீதியான கலந்து ரையாடலை மேற்கொண்டு SFRD நிறுவனத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் சகோதரர் ராபிக் அவர்களுடன் இணைந்து பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையா டினர்.






# YDP - 2013 (இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சி)

ஸ்ரீலங்கா இஸ்லாமிய இயக்கம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து வருடாந்தம் நடத்துகின்ற இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சி (YDP) இம்முறையும் கடந்த ஆகஸ்ட் 01 தொடக்கம் 14ஆம் திகதி வரை மடவளை, ஹெம்மாதகம, பாணதுறை, உக்குவளை, மாவனல்லை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருந்த 5 நிலையங்களில் சுமார் 200 மாணவர்களின் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

இஸ்லாமிய அடிப்படைகள் பற்றிய தெளிவு, தலைமைத்துவப் பயிற்சி, இலக்கு நிர்ணயம், குழுச் செயற்பாடு, சுய முன்னேற்றம் போன்ற ஆளுமை விருத்தி பயிற்சிகள் மற்றும் உயர்தரப் பரீட்சையின் பின்னரான மாணவர்களின் எதிர்கால இலட்சியங்களை அடைவதற்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் அடங்கலாக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளதுடன், கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





## ஜம்இய்யா உன் பற்றிய சில சாட்சிகள் இவை!

**ஒருவன்:** கண் மூடியிருந்த போதும் ஷைத்தானோடிருந்த என்னை கண் திறந்து கொண்டே பார்வையை தாழ்த்த வைத்தது ஜம்இய்யா!

**மற்றொருவன்:** ரமழானிலும்கூட ஏமாற்றிக் கொண்டிருந்த என்னை, ஒவ்வொரு வியாழனும் நோன்பாளியாக்கியது ஜம்இய்யா!

**வேறொருவன்:** தற்பெருமை பிடித்து எங்கோ சென்று கொண்டிருந்த எனக்கு, 90 வேலை பகிரங்கமாகச்செய்தால், 300 வேலை மறைவாகச்செய்ய கற்றுத்தந்தது ஜம்இய்யா!

**நான்காமவன்:** யார் யாரினதோ முத்த மழைகளைக் கண்டு களித்த என்னை, தாயின் நெற்றியில் அழுத்தமாய் ஒரு முத்தம் தரச்செய்தது ஜம்இய்யா!

**இன்னொருவன்:** எழுந்திருக்கும் போதான அஸரையே தொழாத என்னை, தஹஜ்ஜுதுக்காய் எழுப்பி விட்டது ஜம்இய்யா!

**பிறிதொருவன்:** சிகரட் முதல் அபின் வரை தொட்ட என் உதடிரண்டை, ஸுப்ஹானல்லாஹ்வால் பல தடவை தொட வைத்தது ஜம்இய்யா!

**ஒரு பணக்காரன்:** Valentine's Dayஇல் கரைந்துபோன என் பணத்தை, பல நூலகங்களின் நூல்களாய் மாற்றி விட்டது ஜம்இய்யா!

**ஓர் ஏழை:** மூவேளை உணவுக்காக ஏங்கிய என்னை, ஐவேளை அதானுக்காக ஏங்க வைத்தது ஜம்இய்யா!

**ஒரு படித்தவன்:** சொத்து சேர்ப்பதில் மூழ்கிக் கிடந்த என்னை, சுவனம் நோக்கி கரம் பிடித்து கூட்டிச்சென்றது ஜம்இய்யா!

**கொழும்பைச் சேர்ந்தவன்:** பஸ்ஸில் ஏறினால் கண்களில் ஷைத்தானோடிருந்த எனக்கு, ஏற முன் வுழு செய்து இறங்கியதும் சுன்னத் தொழுகின்ற உணர்வை ஊட்டியது ஜம்இய்யா!

▸ *அஹ்மத் யாஸிர், கொழும்பு-*




# பொறுமை

எல்லா மனிதர்களும் உண்மை, நேர்மை, நம்பிக்கை, நாணயம், பொறுமை போன்ற நற்குணங்களை விரும்பு கின்றனர். இஸ்லாம் இந்நற்குணங்களை அனைத்திலும் பார்க்க முக்கியத்துவப்படுத்துகின்றது.

இன்று இஸ்லாம் மார்க்கம் பல கோடிக்கணக்கான மக்களால் விரும்பப்படக் காரணம், அதில் பொதிந்துள்ள உன்னத பண்புகளே. அவ்வாறானதொரு மார்க்கம் உரு வாக்க விரும்பும் மானிட சமுதாயமும் அதன் அழகிய பண்புகளை தன் கைவரப் பெற்றதாகவே இருக்கும்.

பொறுமை மாபெரும் அருள். எல்லா மனிதர்களாலும் பொறுமையைக் கைக்கொள்ள முடியாது. அதனை வசப் படுத்தியோர் தம் வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு இனிதே பயணிக்கின்றனர். அந்தப் புதையலை நழுவ விட்டோர் வாழ்வில் புரியாத புதிராய் பிரச்சினைகளுக்கு முகங்கொ டுக்க முடியாது நடுக்கடலில் துடுப்பின்றிய படகைப் போல் தத்தளிக்கின்றனர்.

இவ் அணிகலன் பலரிடம் இயல்பிலேயே காணப் பட்டாலும் சில காரணங்களால் அந்தப் பண்பு எவ்வித அடையாளமும் இன்றி காலத்தோடு கரைந்து விடுகிறது.

உதாரணமாக ஒரு தாய் பத்து மாதங்கள் பொறுமையாக, இருப்பதால்தான் குழந்தையைப் பெறுகிறாள். ஒரு விவ சாயி சில மாதங்கள் பொறுமையாக இருப்பதால்தான் சிறந்த விளைச்சலைப் பெறுகிறான்.

அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது: "அழகிய பொறுமையாக பொறுத்திருப்பீராக." (70: 5)

மனித வாழ்வானது இன்பமும் துன்பமும் கலந்த கல வையாகும். மனிதர்களாகிய நாம் இவ்விரு நிலைகளிலும் பொறுமையை பொறுக்கி எடுத்துக் கொண்டால் அதுவே எம்மை வழிநடத்திடும்.

கவலையின் உச்ச கட்டத்தை அடைந்து விட்டோம் என்பதற்காக வாழ்வையே வெறுத்து ஒதுக்கி விரக்தியின் விளிம்புவரை சென்று பின் கைசேதப்படுவதில் பயனில்லை. இன்பங்கள் மிகைத்து அதில் அளவு கடந்து சென்று பின் கண்ணீர் சிந்துவதிலும் பயனில்லை.

இன்று சமூகத்தில் சகோதர சகோதரிகளுக்கிடையில், தாய் தந்தையருக்கிடையில், உற்றார் உறவினர்களுக் கிடையில், மாமி மருமகளுக்கு இடையில் ஏற்படும் பிரச் சினைகள் போன்றவற்றை எடுத்து நோக்கினால், பிரச்சி னைகளின்போது ஒரு தரப்பு பொறுமையைக் கைக் கொண்டால் இருவர் வாழ்விலும் சந்தோஷம் கிடைக் கும் என்பது தெரியவரும்.

**உமைரா ஜெயினுலாப்தீன்**
**ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா**
**மாவனல்லை**

**நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு முன்னர் உலகில் தோன்றிய மதங்கள்:**

1. ஹனீப்களின் மதம்
2. யூத மதம்
3. கிறிஸ்தவம்
4. தாஓயிசம்
5. கன்பூசியம்
6. இந்து சமயம்
7. ஷமானிசம்
8. சொராதிசம்
9. கிரேக்க தத்துவங்கள்
10. சமணம்
11. பௌத்தம்
12. மஜூஸ் (நெருப்பு வணங்கிகள்)
13. ஷந்தூகிசம்

**எம்.வை. ஜனுல் ஜாரியா**
**ஓட்டமாவடி**

## சிறுவர் பூங்கா

முதல் பரிசுக்குரியவர்:

**எம். எச். பஸீஹா**

பாத்திமா ஸஹ்ரா ம.அ.க
ஓட்டமாவடி

ஒக்டோபர் மாத அல்ஹஸனாத் இதழைப் பரிசாகப் பெறுவோர்

1. அஹமட் ஹஸீப் - துல்ஹிரிய
2. ஜே.எஸ். ஸஜீத் - மீராவோடை
3. எம்.கே.எம். சுபைர் - களுத்துறை தெற்கு
4. ஏ.எச்.எப், ஹப்ஸா - மாத்தளை
5. அஹ்ஸன் முஹம்மத் - அகலவத்தை
6. ஏ.சீ.எப். நுஸ்ரா - அநுராதபுரம்
7. எம்.எஸ்.ஏ. ஹப்ஸா - வரகாபொல
8. ஏ.எம்.எம். ஆஷிக் - ஹறாவூர்
9. ஏ.எப். எச். பர்வின் - மாதம்பை
10. எம். இல்யாஸ் - அடுலுகம

**குறிப்பு:**

விடைகளை தபால் அட்டையில் (Post Card) மாத்திரம் எழுதி அனுப்பவும்.




## சில ஸஹாபாக்களின் சிறப்புப் பெயர்கள்

1. குரல்வளை நெரிக்கப்பட்டபோதும் ஏகத்துவ கீதம் பாடிய ஸஹாபி
   - **பிலால் பின் ரபாஹ் (ரழியல்லாஹு அன்ஹு)**
2. சுவனத்தை அடைவதற்கென்றே பிறந்த ஸஹாபி
   - **அம்மார் பின் யாஸிர் (ரழியல்லாஹு அன்ஹு)**
3. தியாகச் செம்மல்
   - **கப்பாப் பின் அறத் (ரழியல்லாஹு அன்ஹு)**
4. இறைவனுடைய சிங்கம்
   - **ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரழியல்லாஹு அன்ஹு)**
5. அண்ணல் நபியின் அன்புத் தூதர்
   - **முஸ்அப் இப்னு உமைர் (ரழியல்லாஹு அன்ஹு)**
6. நெஞ்சுரம்மிக்கவர்
   - **குபைப் பின் அதிய் (ரழியல்லாஹு அன்ஹு)**
7. உண்மையைத் தேடி உலகம் சுற்றியவர்
   - **ஸல்மானுல் பாரிஸ் (ரழியல்லாஹு அன்ஹு)**
8. சுவர்க்கத்தின் சுதந்திரப் பறவை
   - **ஜஃபர் பின் அபீதாலிப் (ரழியல்லாஹு அன்ஹு)**
9. கொள்கைக்காக சொத்துக்களை அர்ப்பணித்தவர்
   - **சுஹைப் பின் ஸினான் (ரழியல்லாஹு அன்ஹு)**
10. தீயவராக இருந்து உத்தமராக மாறியவர்
   - **உமைர் பின் வஹப் அல்ஜுமாரி (ரழியல்லாஹு அன்ஹு)**

**எம்.எஸ்.எம். ரிகாஸ்**
ஓட்டமாவடி

---

# அறிவு தரும் தெளிவு

"அல்லாஹ் யாருக்கு நலவை நாடுகிறானோ அவருக்கு மார்க்கத்தின் விளக்கத்தைக் கொடுக்கிறான்." (அல்புகாரி)

அல்லாஹுத் தஆலா மனிதனின் உள்ளத்தில் ஏற்படுத்தும் அறிவின் மூலம் சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிய வேண்டும். அது இறைவனையும் அவனது வழிகாட்டலையும் கற்றுத் தரும்.

அறிவு இறைவனின் அருள். அதன் விளக்கம் அனைவருக்கும் கிடைப்பதில்லை. அந்த அறிவின் விளக்கத்தைப் பெற்ற ஒருவர் அதனை நடைமுறைப்படுத்தாவிடின் அவரது அறிவுக்கோ விளக்கத்திற்கோ எந்தப் பெறுமதியுமில்லை.

நாம் அல்லாஹ்வின் அறிவையும் விளக்கத்தையும் சுமந்தவர்கள் என்ற வகையில் எமது எல்லா எட்டுக்களையும் செயற்பாடுகளையும் சமூகம் கண்காணிக்கின்றது என்ற உணர்வோடு முன்மாதிரியாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

இமாம் இப்னுல் கையிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "அகீதா ரீதியான வழிகேடான பல பிரிவுகள் தோன்றக் காரணம் அல்லாஹ்வையும் ரஸுலையும் பற்றிய பிழையான விளக்கமே. அவர்களிடத்தில் அறிவு இருக்கும். ஆனால், பிழையான விளக்கத்தைக் கொண்டிருப்பார்கள்."

விளக்கம் என்பது அல்லாஹ் கொடுக்கின்ற மிகப்பெரிய பரிசாகும். அறிஞர் ஒருவர் இவ்வாறு கூறுகிறார்: "நாம் அறிவின் விளக்கத்தைப் பெற வேண்டுமாயின் ஆசிரியரிடம் கற்க வேண்டும். அல்லது புத்தகங்கள் மூலம் அறிவைத் தேடிப் பெற வேண்டும்."

### கற்ற அறிவை செயற்படுத்தல்

கற்ற அறிவை நடைமுறைப்படுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஸஹாபாக்கள் சில வசனங்களை மனனமிட்டு அவ்வசனங்கள் தமது நடைமுறைக்கு வரும் வரையில் அடுத்த வசனங்களை மனனமிடுவதில்லை. அவர்கள் அறிவை இதயத்தில் சுமந்தார்கள். இன்று அதிகமானோர் அதனை ஏட்டில்தான் சுமக்கிறார்கள்.

நாம் கலைத்துறை, விஞ்ஞானத்துறை, மருத்துவத்துறை, வர்த்தகத்துறை என பல்வகையான துறைகளில் கற்றாலும் எமது இறுதி நோக்கம் இறைவனை அவனுக்கேயுரிய பண்புகளுடனும் வல்லமைகளுடனும் ஆற்றல்களுடனும் அறிவதே ஆகும்.

"ஞானவனின் நட்புக் கிட்டவில்லையானால் நான் என் முன்னோர்களிடமிருந்து பெற்று அடைந்துள்ளவற்றை எல்லாம் என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்." (மகாகவி அல்லாமா இக்பால்)

**மர்யம் ஜெஸ்லா மர்சூக்** - ஜாமிஆ ஆஇஷா ஸித்தீக்கா
மாவனல்லை

## வினா-விடைப் போட்டி-64

01. எகிப்திலுள்ள கிராமமொன்றுக்கு 'கிர்தாஸா' எனப் பெயர் வரக் காரணமான ஸஹாபி யார்?

02. அமெரிக்காவின் ஆதிக்க அரசியலை விமர்சிக்கும் பெரும் சிந்தனையாளர் யார்?

03. பெருநாள் தினத்தில் கடைப்பிடிக்க வேண்டிய இரு ஸுன்னாக்களை சுருக்கமாகக் குறிப்பிடுக.

04. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களால் 'அபா ஹஃப்ஸ்' என அழைக்கப்பட்ட நபித் தோழர் யார்?

05. மதீனா சாம்ராஜ்யத்தை உருவாக்குவதில் நபிகளாரின் ராஜதந்திரப் பணிகளில் ஒன்றைக் குறிப்பிடுக.

**உங்கள் விடைகளை ஒக்டோபர் 22ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வையுங்கள்.**



# ENGINEERING IN ELECTRONICS, NETWORKS, COMPUTERS AND TELECOMMUNICATION



**FOUNDATION IN ENGINEERING**

**DIPLOMA IN ENGINEERING**

**ADVANCE DIPLOMA IN ENGINEERING**

**UNIVERSITY REPLACEMENT**

**இப்பாடப் பயிற்சியின் பின்...**

- விரைவில் கூடிய சம்பளத்தில் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ள தகைமை உண்டு.
- சுயதொழில் வாய்ப்புக்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்ள முடியு
- UK, USA, Canada, New Zealand, Australia மற்றும் ஏனைய நாடுகளில் பட்டப்படிப்புக்கும் தொழில் வாய்ப்புக்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

**TOEIC BRIDGE & TOEIC JUNIOR**
பரீட்சைகளை இலவசமாக தோற்றுவதற்கு அற்புதமான வாய்ப்பு

- Glyndwr University, UK
- Lincoln University College, Malaysia
- Wichita State University, USA
- Marbella University, Spain
- Riccarton High School, New Zealand
- ICL Business College, New Zealand
- Royal Business College, New Zealand
- Bridgwater College, UK

**Register Before 11.10.2013**

தூரப் பிரதேசத்தினருக்கு தங்குமிட வசதியும் 3 வேளை உணவும் வழங்கப்படும்.

For Application More Information
E-mail to lchecourse@gmail.com or Visit us at **www.lchs.lk**

**LONDON COLLEGE OF HIGHER STUDIES (PVT) LTD**
No. 155/1A, Galle Road, Dehiwala,
Hotline - 071 2357412 / 077 9939010

LONDON COLLEGE

| Nugegoda | Dematagoda | Kandy | Kandy | Bambalapitiya |
|---|---|---|---|---|
| 0711 601060 | 0114 384462 | 0711 601050 | 0775 492944 | 0112 552877 |

# தொழுகையில் ஸுஜூது செய்யும் முறை
# ஸூரதுல் இஃலாஸை ஒருமுறை ஓதுதல்...
# ஆண் பிள்ளைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல்...

அஷ்ஷெய்க் முஹம்மத் முபீர் (இஸ்லாஹி), (M.A).
விரிவுரையாளர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை. mufeer96@gmail.com

**கேள்வி:** தொழுகையில் ஸுஜூதுக்குப் போகும்போது இரண்டு முழங்கால்களுக்கும் முன்னால் இரண்டு கைகளையும் வைத்துதான் செல்ல வேண்டும் என சிலர் கூறுவது போன்று இன்னும் சிலர் முதலாவதாக இரண்டு முழங்கால்களையும் வைத்தே ஸுஜூது செய்ய வேண்டும் எனக் கூறுகின்றனர். இதில் எது சரியானது?

பதில்: இவ்விரு கருத்துக்களுக்கும் ஹதீஸில் ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு கருத்தையும் முன்வைப்பவர்கள் அதற்குரிய ஆதாரத்தை மட்டுமே முன்வைக்கின்றனர். இவ்விரண்டு கருத்துக்களையும் தனித்தனியாகக் கேட்கின்றவர் இதில் எதனைப் பின்பற்றுவது என்று குழப்பமடைந்து விடுகின்றார்.

முதலாவது கருத்தைக் கூறுகின்றவர்கள் நஸாஈ எனும் கிரந்தத்தில் வருகின்ற பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் கொள்கின்றனர்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறியதாக அபூ ஹுரைரா (ழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள். "உங்களில் ஒருவர் ஸுஜூது செய்தால் அவர் தன்னுடைய முழங்கால்களுக்கு முன்பு இரண்டு கைகளையும் வைக்கட்டும். ஒட்டகம் அமர்வது போன்று அமர வேண்டாம்." மாலிக் மத்ஹபுடைய கருத்தும் இதுவாகும்.

இரண்டாவது கருத்துக்கு பின்வரும் ஸஹீஹான ஹதீஸ் ஆதாரமாகக் காணப்படுகின்றது.

வாஇல் இப்னு ஹுஜ்ர் (ழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறுகின்றார்கள். "நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஸுஜூது செய்தால் தன்னுடைய இரண்டு கைகளையும் வைப்பதற்கு முன்பு முழங்கால்களை வைப்பார்கள். ஸுஜூதிலிருந்து எழுந்தால் தன்னுடைய இரண்டு முழங்கால்கால்களுக்கு முன்பு இரு கைகளையும் தூக்குவதை நான் கண்டுள்ளேன்." (அபூ தாவூத், அத்திர்மிதி, அந்நஸாஈ)

இக்கருத்தில் பெரும்பாலான இமாம்கள் உடன்படுகின்றனர்.

இவ்விரண்டு கருத்துக்களையும் ஆய்வு செய்த இமாம் இப்னுல் கையிம் அவர்கள் முதலாவது கருத்தினை விட இரண்டாவது கருத்தே பலமானது என பல கோணங்களில் நிறுவுகின்றார். அவற்றில் முக்கியமான மூன்று விடயங்களை இங்கு குறிப்பிடலாம்.

> இதன் கருத்து ஒருவர் இந்த ஸூராவை ஒரு முறை ஓதினால் அவர் அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓதி விட்டார் மூன்று முறை ஓதினால் முழு அல்குர் ஆனையும் ஓதிவிட்டார் என்பது அல்ல. மாற்றமாக, அவருக்கு அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை அல்லது முழு அல்குர்ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும் என்பதுவே.

1. "ஸுஜூதுக்குச் செல்லும்போது ஒட்டகம் அமர்வதைப் போன்று அமரச் செல்ல வேண்டாம்" என நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடுத்துள்ளார்கள். நடைமுறையில் ஒட்டகம் அமரும்போது எப்பொழுதும் முதலாவதாக தனது முன் கால்களை மடக்கியே அமர்கின்றது. எழும்போது பின் கால்களை முதலாவதாக தூக்கி எழும்புகின்றது. அப்படியாயின் ஸுஜூதுக்குச் செல்லும்போது முழங்கால்களையே முதலாவதாக வைத்து இரண்டாவதாக கைகளை வைக்க வேண்டும். அதுவே நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய உதாரணத்துக்கு ஒப்பானதாக அமையும். அதாவது ஒட்டகம் அமரும்போது முன் கால்களை வைத்து அமர்வது போன்று நீங்கள் ஸுஜூதுக்குச் செல்லும்போது உங்களுடைய முன்கைகளை வைத்து ஸுஜூது செய்ய வேண்டாம்; கால்களை முதலாவது வைத்தே ஸுஜூது செய்யுங்கள்.

2. உமர் (ழியல்லாஹு அன்ஹு), அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ழியல்லாஹு அன்ஹு) போன்ற ஸஹாபாக்களும் இரண்டாவது ஹதீஸுக்கமைய முழங்கால்களை முதலாவதாக வைத்து ஸுஜூது செய்ததாக சில அறிவுப்

புக் களில் வந்திருக்கின்றது போன்று இக்கருத்தில் பெரும்பாலான புகஹாக்களும் உடன்படுகின்றார்கள்.

*3.* முதலாது ஹதீஸைவிட இரண்டாவது ஹதீஸ் பலமானதாக இருப்பதுடன் முதலாவது ஹதீஸ் மாற்றப்பட்டது என்று சில அறிவிப்புக்களில் வந்துள்ளது.

எனவே, தொழுகையில் ஸுஜூதுக்குப் போகும்போது முதலாவதாக இரண்டு முழங்கால்களையும் வைத்து ஸுஜூது செய்ய வேண்டும் என்பதே பலமான கருத்தாகும்.

**கேள்வி: ஆண் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்க லாமா?**

**பதில்:** ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த இமாம் நவவி (றஹ்) போன்ற ஒரு சில இமாம்கள் பருவமடையாத ஆண் குழந்தைகளுக்கு தங்கத்திலான மோதிரம் போன்றவற்றை அணிவிக்க முடியும் என்று கூறுகின்ற போதிலும் பெரும்பாலான புகஹாக்கள் அவ்வாறு அணிவிக்கக் கூடாது எனத் தடுக்கின்றனர். ஏனெனில் "தங்கமும் பட்டும் எனது சமூகத்தில் பெண்களுக்கு அனும திக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டுள்ளது" நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள் (நஸாஈ)

அந்த ஹதீஸில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஆண்கள் எனப் பொதுவாகவே கூறியுள்ளார்கள். வயது வந்த ஆண்கள் என வரையறுத்துக் கூறவில்லை. எனவே, பெற்றோர் தங்களுடைய ஆண் குழந்தைகளுக்கு தங்கத்திலான மோதிரம் போன்றவற்றை அணிவிக்கக் கூடாது.

**கேள்வி: ஸூறதுல் இக்லாஸை (குல் ஹுவல்லாஹு அஹத்) ஒரு முறை ஓதினால் அது அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓதியதற்குச் சமம் என்பது சரியானதா? அப்படியாயின் அந்த ஸூறாவை மூன்று முறை ஓதினால் அவர் முழு அல்குர்ஆனையும் ஓதியவர் போன்றவரா?**

**பதில்:** அல்குர்ஆனில் சில ஸூறாக்களுக்கும் சில வசனங் களுக்கும் தனியான சிறப்பம்சங்கள் இருப்பதாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பல ஸஹீஹான ஹதீஸ்களில் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் "குல் ஹுவல்லாஹு அஹத் எனும் ஸூறா அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்குச் சமமாகும். என்று நபியவர்கள் கூறியிருக்கின்றார்கள்" (அத்திர்மிதி)

இதன் கருத்து ஒருவர் இந்த ஸூறாவை ஒரு முறை ஓதினால் அவர் அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓதி விட்டார் மூன்று முறை ஓதினால் முழு அல்குர்ஆனையும் ஓதிவிட்டார் என்பது அல்ல. மாற்றமாக, அவருக்கு அல்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை அல்லது முழு அல்குர்ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும் என்பதுவே.

எனவே, ஒருவர் இந்த ஸூறாவை ஒரு முறை அல்லது மூன்று முறை அல்லது பல முறை ஓதிவிட்டு அல்குர்ஆனின் ஏனைய பகுதிகளை ஓதாமல் இருக்க முடியாது. அவ்வாறு செய்தால் அவர் அல்குர்ஆனை புறக்கணிக்கின்றவராக மாறிவிடுவார்.

ஒரு சிறந்த சமூகத்தின் அத்திவாரம் ஒரு சிறந்த தாயே...!

- அல்குர்ஆன் (தஜ்வீத், ஹிப்ழ், துஆக்கள், விளக்கம்)
- அல்ஹதீஸ் (விளக்கம், துஆக்கள், இஸ்லாமிய சட்டங்கள்)
- ஸஹாபிய பெண்களின் முன்மாதிரி வாழ்வு
- இலகு முறையில் அல்குர்ஆன் ஓதுவதற்கான பயிற்சி
- இலகு முறையில் அல்குர்ஆன் கற்பிப்பதற்கான பயிற்சி
- Counselling
- Pre-marriage counselling
- Career Guidance Programme
- English (Spoken & Grammar)
- Computer Training
- Safety Internet & Social Media
- Baby Dress Making
- Brazilian Embroidery
- Abaya Designing
- Screen Printing
- சர்வதேச தரத்திலான சமையற்கலை பயிற்சி
- பேக்கரி உணவு வகை தயாரித்தல்
- Dessert Preparation
- Cake Making
- Dining Table Arrangement
- House & Flower Arrangement
- Mehendi Designing
- சுயதொழில் வழிகாட்டல் பயிற்சி
- தலைமைத்துவ பயிற்சி
- Child Psychology
- Green Home
- நேர முகாமைத்துவம்
- Nursing & Patient Care
- ஆரோக்கியமான வாழ்வு வழிகாட்டல்
- முதலுதவி பயிற்சி
- மேலும் பல...

கண்டி மாவட்டத்தில்
பெண்களின் ஆளுமை மற்றும்
திறன் விருத்திக்கான
ஓர் பயிற்சிநெறி

04 மாதகால வதிவிட பயிற்சிநெறி

அழகிய பாதுகாப்பான சூழல்
சிறந்த பாடத்திட்டம்
நிபுணத்துவமிக்க ஆசிரியர் குழாம்
விளையாட்டு/பொழுதுபோக்கு வசதிகள்
விசேட ஒரு நாள் பயிற்சி பட்டறைகள்
வசதியான தங்குமிட ஏற்பாடு
கணனி அறை
8 சான்றிதழ்கள்
சாதனையாளர்களுக்கான விருதுகள்

2014 ஜனவரி ஆரம்பம்
18-25 வயதிலான பெண்களுக்கானது
40 மாணவிகளுக்கு மாத்திரமே அனுமதிகள்

சிறந்த இஸ்லாமிய குடும்பங்களை உருவாக்கக்கூடிய ஆளுமை மிக்க தாய்மார்களாக இப்பாரில் நடைபதிக்க எம்மோடு இணைந்து கொள்ளுங்கள்

மேலதிக விபரங்களுக்கு
077 0866494 | 077 3741246
skillwalk@gmail.com

skill academy




# மதீனா சாம்ராஜ்யம்- சமயமும் அரசும்

**பள்ளிவாசல்கள் வரலாற்றில் வெறும் ஆன்மிகப் பாசறைகளாக, ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றும் வணக்கஸ்தலங்களாக மாத்திரம் திகழவில்லை. இஸ்லாமிய வரலாற்றில் பள்ளிவாசல்களே பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்துள்ளன. இன்று பள்ளிவாசல்கள் இப்பணியை நிறைவேற்றுகின்றனவா?**

மதீனா சமூகம் ஒரு கலப்பு சமூகம். அதில் பல கொள்கைகளைக் கொண்ட குடிமக்கள் இருந்தனர். அவர்கள் அனைவரது திருப்தியைப் பெற்ற ஆட்சியாளராக நபியவர்கள் பரிணமிக்க வேண்டிய அவசியம் இருந்தது.

*1.* மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையே தொழில் ரீதியாக பாரிய வேறுபாடு காணப்பட்டது. மக்கா பூமி வியாபார பூமி; மதீனா பூமி விவசாய பூமி. முஹாஜிர்கள் தமது பொருளாதாரத் தேவையை நிறைவேற்ற விவசாயத்தை கற்க வேண்டியிருந்தது.

*2.* அவ்வாறே முஹாஜிர்களின் எண்ணிக்கை அவர்கள் அனைவரையும் விவசாயத்தில் ஈடுபடுத்த முடியாதளவு அதிகரித்திருந்தது. இதனால் பொருளாதார நெருக்கடி உருவாகும் நிலை காணப்பட்டது.

*3.* மதீனத்துப் பெண்களும் தமது கணவன்மாரின் விவசாயப் பணிகளில் பங்குபற்றினார்கள். ஆனால், மக்கத்துப் பெண்கள் தமது வீடுகளிலேயே தங்கியிருந்தார்கள். அவர்களது கணவன்மார் வியாபாரம் செய்தனர். ஆண்களே அனைத்து விடயங்களிலும் தீர்மானம் எடுக்கும் சக்திகளாகத் திகழ்ந்தனர். இதனால் குடும்ப வாழ்வில் பிரச்சினைகள் தலைதூக்கும் வாய்ப்பும் உருவானது.

*4.* மதீனாவின் சுகாதார நிலைமையும் மோசமான நிலையிலேயே இருந்தது. தொற்றுநோய் பரவி ஸஹாபாக்கள் சுகயீனமுற்றிருந்தார்கள். அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மரணித்து விடுவாரோ என அஞ்சுமளவுக்கு கடுமையாக சுகயீனமுற்றார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவின் ஆரோக்கிய சூழலுக்காகவும் பொருளாதார அபிவிருத்திக்காகவும் பாதுகாப்புக்காகவும் பிரார்த்தனை புரிந்தார்கள்.

இவ்வாறு மதீனாவின் பொருளாதார, சமூக சுற்றுப்புறச் சூழல் காணப்பட்ட நிலையில் மதீனாவில் முக்கிய நால்வகை மக்கள் காணப்பட்டார்கள்.

- தமது சொத்து செல்வங்களை இழந்து கொள்கைக்காய் புறப்பட்டுவந்த முஹாஜிர்கள்.
- அவ்ஸ், ஹஸ்ரஜ் எனும் பெயரில் அதிகாரப் போட்டியிட்டு தற்போது கொள்கைக்காக உதவி புரிந்த அன்ஸார்கள்.
- முஷ்ரிக்குகளுடன் கை கோர்த்த முனாபிக்குகள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவுக்கு வராவிட்டால் முனாபிக்களின் தலைவன் அப்துல்லாஹ் இப்னு உபை இப்னு ஸலூல் மதீனத்து தலைவனாக தெரிவு செய்யப்பட்டிருப்பான். இதனால் நபிகளின் வருகையை எதிர்த்தது மாத்திரமன்றி, முஸ்லிம்களுடன் கடும் குரோதத்தையும் முனாபிக்குகள் கொண்டிருந்தனர்.
- பொருளாதார ரீதியாக மதீனாவில் செல்வாக்குப் பெற்றிருந்த யூதர்கள் தாம் மாத்திரமே வானுலக வேதம் வழங்கப் பெற்றவர்கள் எனவும் தமக்கென ஓர் இறுதித் தூதர் வருவார் எனவும் மார்தட்டி வாழ்ந்தனர். எனினும், இறுதித் தூதர் அரபு சமூகத்திலிருந்து வந்ததோடு, தமக்கு முன்னர் அரபிகள் அவரை ஏற்றுக் கொண்டதையிட்டு காழ்ப்புணர்வும் கோபமும் கொண்டிருந்தனர்.

இத்தகு நெருக்கடியான சூழலில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மேற்கொண்ட முக்கிய

மூன்று இராஜதந்திரப் பணிகள், இரு வருடங்களிலேயே மதீனா சமூகத்தை ஒரு கட்டுக்கோப்பு மிக்க சமூகமாக மாற்றியமைத்தன. அப்பணிகள் வருமாறு:

01. கொள்கை உறவை பலப்படுத்தும் மஸ்ஜித் நிர்மாணம்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சமூகத்தில் நிலவும் சாதி, இன, நிற வேறுபாடுகளைக் களைந்து மக்களை ஒன்றிணைத்தார்கள். முஸ்லிம்களுக்கு மார்க்கத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். அதற்காக மக்களை ஊக்கப்படுத்தினார்கள்.

"அல்லாஹ்வின் வீட்டில் ஒரு சமூகம் ஒன்றிணைந்து அல்லாஹ்வின் வேதத்தை ஓதி, தமக்கு மத்தியில் பரஸ்பரம் கற்றுக் கொள்ளும்போது அல்லாஹ்வின் அருளும் அமைதியும் அவர்கள் மீது இறங்கும். மலக்குமார் அவர்களை சூழ்ந்து கொள்வார்கள். அல்லாஹ் மலக்குமாரிடம் அவர்களைப் பற்றி பிரஸ்தாபிப்பார்கள்." (முஸ்லிம்)

பள்ளிவாசல்கள் வரலாற்றில் வெறும் ஆன்மிகப் பாசறைகளாக, ஐவேளைத் தொழுகைகளை நிறைவேற்றும் வணக்கஸ்தலங்களாக மாத்திரம் திகழவில்லை. இஸ்லாமிய வரலாற்றில் பள்ளிவாசல்களே பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்துள்ளன. இன்று பள்ளிவாசல்கள் இப்பணியை நிறைவேற்றுகின்றனவா?

02. அன்ஸார்-முஹாஜிர்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்துதல்.

ஒரே கொள்கையை சுமந்தவர்கள் என்ற வகையில் அன்சார்-முஹாஜிர்களுக்கு மத்தியில் சகோதரத்துவ உறவைப் பலப்படுத்த வேண்டிய அவசியம் இருந்தது. அவர்களுடன் மானசீக ரீதியில் உறவைப் பலப்படுத்த வேண்டியுமிருந்தது. நபியவர்கள் கொள்கைவழி சகோதரத்துவத்தை கல்லின் மேல் எழுத்துப்போல் அவர்களிடம் செதுக்கினார்கள். அது வெறும் கொள்கையளவில் கட்டளையிடும் தோரணையில் அமையவில்லை. மக்களோடு மக்களாக நபியவர்களும் ஒன்றித்து நகைச்சுவைகளை பரிமாறுமளவுக்கு அந்த சகோதரத்துவத்தை பலப்படுத்தினார்கள்.

ஒரு முறை நபியவர்களுடன் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஈச்சம் பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தான் உண்ட ஈச்சம் பழங்களின் விதைகளை, நபியவர்கள் உண்டபின் வைத்த ஈச்சம் விதைகளிலே போட்டு வந்தார்கள். நபியவர்களும் ஏதும் பேசாமல் புன்னகைத்துவிட்டு பேசிக் கொண்டிருந்தார்கள். நபியவர்களின் முன்னால் ஈச்சம்பழ விதைகள் ஒரு தொகையாக மாறியபோது அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹாஷ்யமாக "அல்லாஹ்வின் தூதரே! நீங்களே அனைத்து ஈச்சம் பழங்களையும் உண்டுவிட்டீர்களே!" என்றார்கள். நபியவர்களும் அவர்கள் அதே பாணியில் "அலியே! நான் ஈச்சம் பழங்களைத்தான் உண்டேன். நீங்களோ ஈச்சம் பழங்களை அதன் விதைகளுடன் சேர்த்தல்லவா உண்டிருக் கின்றீர்கள்" எனக் கூறினார்கள்.

03. மதீனா சாசனம்

மனித இன வரலாற்றில் முதன் முதலில் மனிதனின் கடமை, உரிமைகளை வகுத்து வகுக்கப்பட்ட சட்டயாப்பே மதீனா சாசனமாகும். அதன் மூலம் மதீனாவின் உள்ளக, வெளியகப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் பெறப்பட்டது. ஒரே தேசத்துக்கான அடிப்படை விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றுள் சில முக்கிய விதிகள் வருமாறு:

முதலாவது: முஸ்லிமான குறைஷியர்களும் முஸ்லிமான மதீனாவாசிகளான (அவ்ஸ், ஹஸ்ரஜ் கோத்திரத்தாரும்) அவர்களைப் பின்தொடர்வோரும் ஒரே சமூகம் ஆவர். இனவாதம், பிரதேசவாதம் கிடையாது.

இரண்டாவது: பனீ அவ்ப், அவ்ஸ் கோத்திர மதீனா யூதர்களும் முஃமின்களின் ஒரு கிளை சமூகமாகும். அவர்களில் அநீதியிழைத்து தவறிழைப்போரைத் தவிர முஸ்லிமல்லாதவர்கள் இரண்டாம் தர குடிமக்களல்ல. அவர்களும் குடியுரிமை பெற்றவர்கள் என்பதை இஸ்லாம் 1400 வருடங்களுக்கு முன்பே உத்தரவாதப்படுத்தியுள்ளது.

நான்காவது: நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அனுமதியின்றி மதீனாவிலிருந்து யுத்தத்துக்காக வெளியேறவோ அல்லது மதீனாவுக்குள் ஓர் எதிரிக்கு அடைக்கலம் வழங்கவோ கூடாது.

இத்தகு நிபந்தனைகளுடன் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனாவின் உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மதீனா உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள். அத்தோடு தனது ஷாம் ராஜ்யத்தின் 'யத்ரிப்' எனும்பெயரைமாற்றினார்கள். 'ஹிஜ்ரத் பூமி'என்றோ 'முஹம்மதியசாம்ராஜ்யம்' அல்லது, 'குர்ஆனிய சாம்ராஜ்யம்' என்றோ அதற்குப் பெயர் சூட்டவில்லை. அனைத்துக் குடிமக்களும் அங்கீகரிக்கத்தக்கவகையில் 'மதீனா' எனப் பெயர் சூட்டினார்கள்.

பாடங்களும் படிப்பினைகளும்

01. பிற சமூகங்களுடன் சகவாழ்வு நடத்துதல், தேசப் பற்று கொள்ளல்

02. கொள்கை, இலட்சியத்துக்காக வாழ்தல்


03. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் கொள்கைவழி சகோதரத்துவத்தை உறுதிப் படுத்துதல்

04. பள்ளிவாசல்கள் அறிவுப் பணியை மேற்கொள்ளுதல்

05. இனவாதம் மற்றும் பிரதேசவாதங்களை தூக்கி எறிதல்

06. செயற்பாடுகள், திட்டங்களின்போது மிகச் சிறந்த பெயர்களை, தலைப்புக்களை இடல்

Visit: www.usthazhajjulakbar.org



> இமாம் அத்தஹபீ அவர்கள் தான் 1700 அறிஞர்களிடம் கல்வி கற்றதாகக் குறிப்பிடுகின்றார்கள். தனது 20ஆம் வயதில் கல்விப் பயணத்தை ஆரம்பித்த அவர் 65ஆம் வயதில் ஊருக்குத் திரும்பி வந்தார்.

# சுவனம் வரை பயனளிக்கும் கல்வி

**அஷ்ஷெய்க் ரீ.எம். நிலாம் (இஸ்லாஹி),**
P.G.D, M.A, **சிரேஷ்ட விரிவுரையாளர்,**
**இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரி, மாதம்பை**

> அக்காலத்தில் அவர் கற்ற விடயங்களை எழுத்துருப்படுத்தி 40 ஒட்டகைகளில் கொண்டுவந்தார்.

**கடந்த இதழ் தொடர்...**

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இவ்விரு அறிவுகளும் அவசியப்படுகின்றன. பிரச்சினைகளின்போது அல்குர்ஆன் அஸ்ஸுன்னாவின் பால் மீளுமாறு அல்லாஹ் குறிப்பிடுகின்றான். பிரச்சினையின் மூலகாரணங்களை அடையாளம் காணவும் பிரச்சினை நடந்த சூழலை இனங்காணவும் தீர்வுக்கான மிகப் பொருத்தமான வசனங்களைத் தெரிவு செய்யவும் பகுத்தறிவு தேவைப்படுகிறது. வரலாற்றில் நடந்த பின்வரும் சம்பவம் இதற்கு சிறந்த உதாரணமாகும்:

ஒரு முறை ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது வீட்டில் ஒரு விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்தார்கள். விருந்தாளிகளுக்கு உணவு பரிமாறப்பட்டது. உணவு பரிமாறிய வீட்டுப் பணிப்பெண் ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மீது தவறுதலாக கறியைக் கொட்டிவிட்டாள். ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கோபப்பட்டார்கள். அவரது கோபத்தைத் தணிக்க அவ்வடிமைப் பெண் பின்வரும் அல்குர்ஆன் வசனத்தை ஓதினாள்:

**“உங்களது இரட்சகனின் பாவமன்னிப்பின்பாலும் வானங்கள், பூமியளவு விசாலமான சுவனத்தின் பாலும் விரையுங்கள். அது இறையச்சம் உள்ளவர்களுக்காக தயார்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் வசதியான நேரத்திலும் கஷ்டமான நேரத்திலும் செலவு செய்வார்கள். கோபத்தை அடக்கிக் கொள்வார்கள். மனிதர்களை மன்னிப்பார்கள். அல்லாஹ் உயர் பண்புள்ளவர்களை நேசிக்கிறான்.” *(3: 134,135)***

இதனை செவிமடுத்த ஹஸன் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், தனது கோபத்தை அடக்கி அவ்வடிமைப் பெண்ணை மன்னித்து தனது உயரிய பண்பை வெளிக்காட்டி அப்பெண்ணைவிடுதலை செய்தார்கள்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு முதலாவதாக அருளப்பட்ட அல்குர்ஆன் வசனங்கள் வாசிப்பு, படைத்தல், விஞ்ஞானம், எழுதுதல், அறிவு ஆகிய விடயங்களை உள்ளடக்கியிருந்தன. அவ்வசனங்கள் பின்வருமாறு அமைந்தன:

**“அனைத்தையும் படைத்த உமது இரட்சகனின் பெயரால் வாசிப்பீராக. அவன் மனிதனை இரத்தக் கட்டியிலிருந்து படைத்தான். வாசிப்பீராக. உமது இரட்சகன் கண்ணியமிக்கவன். அவன்தான் எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதன் அறியாதவற்றையெல்லாம் அவனுக்குக் கற்பித்தான்.” *(அல்அலக் 1-5)***

இந்த வசனங்கள் சமயக் கல்வியையும் உலகக் கல்வியையும் உயிர்ப்பூட்டுவதாக அமைந்தன எனலாம்.

அல்குர்ஆன் அவதானித்தல், ஆய்வு செய்தல், சிந்தித்தல், பகுத்தறிதல், ஆதாரம் முன்வைத்தல், காரணம் கூறுதல் போன்ற அறிவுசார் விடயங்களின்பால் தூண்டுகிறது. அது இஸ்லாமிய அறிஞர்களிடம் ஒரு சீரிய நோக்கத்தையும் விஞ்ஞானபூர்வ சிந்தனைப்பாங்கையும் (Serious objective and scientific mentality) வளர்த்தது. அவர்களின் சிந்தனை, ஆய்வு என்பன விஞ்ஞான ரீதியாகவே அமைந்தன. அவர்கள் கல்வி கற்பதையும் அதைக் கற்பிப்பதையும் அதைப் பாதுகாப்பதையும் தம்மீது அல்லாஹ் சுமத்திய நம்பிக்கைப் பொறுப்பாகவே (அமானத்) கருதினர். அதனை விளை

யாட்டாகவோ பணம் உழைப்பதற்கான வழியாகவோ வெறும் உலகியல் நோக்கங்களை அடைவதற்கான குறுக்கு வழியாகவோ எடுத்துக் கொள்ளவில்லை. அல்குர்ஆன் சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்குமிடையில் நெருக்கத்தை (Bond between science and religion) ஏற்படுத்தியது எனலாம்.

ஷரீஆவில் கவனம் செலுத்திய இஸ்லாமிய அறிஞர்கள் மருத்துவம், கணிதவியல், இரசாயனம், பௌதிகவியல், வான வியல், புவியியல், தத்துவம் போன்ற துறைகளிலும் சாதனை படைத்தனர். அறிஞர்களான இப்னு ருஷ்த், ராஸீ, குவாரிஸ்மி, இப்னு நபீஸ், இப்னு ஸீனா, ஜாபிர் இப்னு ஹய்யான் என அத்தகையோரின் பெயர்ப் பட்டியல் நீண்டு செல்கிறது. முஸ்லிம் அறிஞர்கள் அழியும் நிலையிலிருந்த கிரேக்க அறிவியலையும் உயிர்ப்பித்தனர். கிரேக்க நூல்களை அரபு மொழிக்கு மொழி பெயர்த்தனர். அவற்றுடன் புதிய விட யங்களையும் சேர்த்தனர். புதிய ஆய்வுகளை மெற்கொண்டு நூல்களை வெளியிட்டனர். அவற்றை மேற்குலகம் பெற்றுக் கொண்டது. அது இதனூடாகவே நவீன அறிவியலைக் கட்டியெழுப்பியது.

அல்குர்ஆன் மனிதர்களை அறிவுள்ளவர்கள், அறிவற்ற வர்கள் என இரண்டாகப் பிரிக்கிறது. அல்லாஹ்வின் பிர பஞ்ச படைப்புகள் பற்றி அறிந்து அவனது அத்தாட்சிகள் குறித்து சிந்தித்து அவனைப் புகழ்ந்து வாழ்பவர்களை அறிவாளிகள் என அல்குர்ஆன் கருதுகிறது. ஏனையோரை அறிவற்றவர்கள் என அது அடையாளப்படுத்துகிறது. அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

*"மறுமையைப் பயந்து, தனது இரட்சகனின் அருளை எதிர்பார்த்து இரவுப் பொழுதுகளில் சிரம் தாழ்த்தியவனா கவும் நின்றவராகவும் இறைவனைப் பணிந்து தொழுபவர் இருக்கின்றாரா? நபியே கூறுங்கள்: அறிவுள்ளவர்களும் அறி வற்றவர்களும் சமனாவார்களா? நிச்சயமாக புத்தியுள்ளவர் களே சிந்திப்பார்கள்."* (அஸ்ஸுமர்: 09)

கல்விகற்றவர்கள் அல்லாஹ்வை அதிகம் அஞ்சுவார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுவதும் இந்தக் கருத்திலாகும். அல்லாஹ் கூறுகிறான்:

*"நிச்சயமாக தனது அடியார்களில் அல்லாஹ்வை அஞ்சு பவர்கள் அறிஞர்களே."* (அல்பாதிர்: 28)

இந்த வசனத்திற்கு முன்னைய வசனங்கள் உலகப் பொருட்கள் பற்றி சிந்திப்பதன் அவசியத்தை உணர்த்து கின்றன.

*"அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி வகைவகை யான கனிகளை வெளியாக்குவதையும் வெள்ளை, கறுப்பு என வகைவகையான நிறங்களில் மலைகளை உருவாக்குவ தையும் மனிதர்கள், ஊர்வனங்கள், கால்நடைகள் வித்தி யாச மான நிறங்களை வைத்திருப்பதையும் நபியே நீர் காணவில் லையா? நிச்சயமாக தனது அடியார்களில் அல்லாஹ்வை அஞ்சுபவர்கள் அறிஞர்களே. நிச்சயமாக அல்லாஹ் கண்ணி யமிக்கவனாகவும் மன்னிக்கக் கூடியவனாகவும் இருக்கின் றான்."* (அல்பாதிர்: 27,28)

அறிவியல் ஆய்வு மூலம் அல்லாஹ்வை அறிந்து அவனை அஞ்சுபவர்களே அருள்பெற்ற அறிவாளிகள் என இவ்வ சனங்கள் உணர்த்த வருகின்றன.

முஸ்லிம்கள் மிக ஆர்வத்துடன் கல்வியைத் தேடி தமது அறிவுப் பலத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. கல்வி தேட வேண்டிய முறையை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:

"அறிவு ஞானம் என்பது விசுவாசியின் காணாமற் போன சொத்தாகும். அதை அவர் எங்கு கண்டாலும் பெற்றுக் கொள்ளத் தகுதி பெறுவார்." (ஹதீஸ்)

ஒரு பெறுமதிவாய்ந்த பொருள் காணாமற் போனால் அதை எப்படி அவதானம், ஈடுபாடு, எதிர்பார்ப்பு, விருப்பம் என்பவற்றுடன் பல உத்திகளையும் கையாண்டு நாம் தேடுவோமோ அதுபோல கல்வியைத் தேட வேண்டும் என இந்த ஹதீஸ் குறிப்பிடுகின்றது.

இமாம்கள் மிகவும் சிரமங்களைத் தாங்கிய நிலையில் கல்விப் பயணம் மேற்கொண்டார்கள். இமாம் அஹ்மத் இப்னு ஹன்பலை சந்தித்து ஹதீஸ்கள் கற்பதற்காக ஸ்பெய்னைச் சேர்ந்த பாகீ இப்னு மக்லத் (மரணம்: ஹி.276) என்ற 20 வயது நிரம்பிய இளைஞன் ஈராக் நோக்கி நடந்தே சென்றார். அப்போது இமாம் அஹ்மத் வீட்டுக்காவலில் வைக்கப் பட்டிருந்தார். இதைக் கேள்விப்பட்ட பாகீ மிகவும் இரக சியமாக இமாமின் வீட்டை அடைந்து இமாமுக்கு தன்னை அறிமுகம் செய்து தனது நோக்கத்தையும் எடுத்துக் கூறினார். இருவரும் நிலைமைகளைப் பகிர்ந்து கொண்டனர். அதன் பின் பாகீ இமாம் அஹ்மதிடம், "இமாமவர்களே! நான் ஒவ்வொரு நாளும் பிச்சைக்கார வேடத்தில் உங்கள் முற்றத்திற்கு வருவேன். நீங்கள் எனக்கு ஓரிரு ஹதீஸ்களைக் கற்றுத் தாருங்கள்" என வேண்டினார். அதற்கு இமாம் சம்மதித்தார். அவ்வாறே நடந்து கொண்டனர். அவர் 300 ஹதீஸ்களைக் கற்றுக் கொண்டார். (ஸப்ஹாத் மின் ஸப்ரில் உலமா அப்துல் பத்தாஹ் அபூ குத்தா)

இமாம் அத்தஹபீ அவர்கள் தான் 1700 அறிஞர்களிடம் கல்வி கற்றதாகக் குறிப்பிடுகின்றார்கள். தனது 20ஆம் வயதில் கல்விப் பயணத்தை ஆரம்பித்த அவர் 65ஆம் வயதில் ஊருக்குத் திரும்பி வந்தார். அக்காலத்தில் அவர் கற்ற விடயங்களை எழுத்துருப்படுத்தி 40 ஒட்டகைகளில் கொண்டு வந்தார். அவர் 'கன்ஸுல் உம்மால்' என்ற பிர சித்தி பெற்ற நூலையும் எழுதினார். (ஸப்ஹாத்)


## வசிக்க இடமொன்று தேவை


735/2/1ம்1, தவடகஹவத்தை, எந்தேரமுல்ல, வத்தளை எனும் முகவரியில் தற்கா லிகமாக வசிக்கும் துவான் பஹ்மி அஹ்மத் என்பவர் இரு கண்களின் பார்வையையும் இழந்துள்ளார். இவரது மனைவியும் இரு கண்களும் பார்வையற்றவர். தற்போது சகோதரியின் வீட்டில் வசித்து வரும் இவருக்கு மூன்று குழந்தைகள் உள்ளனர்.

ஓர் அரச நிறுவனத்தில் பணியாற்றினாலும் அதன் வருமானம் நாளாந்த செல வுகளுக்கே போதுமாக உள்ளது. எனவே, அவர் தனக்கென வீடொன்றை அமைப் பதற்கான இடவசதியை ஏற்படுத்தித் தருமாறு தனவந்தர்களை வேண்டி நிற்கிறார்.

Peopls Bank, Enderamulla Branch,
Acc No. 217-2001-48568414

மேலதிக தொடர்புகளுக்கு: 077 0778370

# ஆரோக்கியமும் சூழலியலும்



டாக்டர். எம். ஜே. எம் ஸாமியா
ஹிஜாமா ஹெல்த் சென்டர்

**ஆரோக்கியத்தைப் பேண இஸ்லாம் கூறும் சூழல் பாதுகாப்பு முறை**

மனித உடலின் ஆரோக்கியத்தைப் பேணும் விடயங்களில் உடலின் அகச் சூழல் மட்டுமல்லாது, புறச் சூழலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. அகச் சூழல் எனும்போது உணவையும் போசணையையும் கருதுகிறோம். புறச் சூழல் எனும்போது சுற்றுச் சூழலையும் கருத்திற் கொள்கிறோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் சூழலுக்கும் அபிவிருத்திக்குமான ஆணைக்குழுவின் (Brundtland Commission) அறிக்கையானது, பூமியின் வளங்களைப் பாதுகாப்பதும் அதனை அழிவு மற்றும் குறைவடைவிலிருந்து தடுப்பதும் உலக மனித சமுதாயத்தின் கடமையெனவும்; இதுவே எதிர்கால சந்ததியினருக்கும் இவ்வளங்களை அனுபவிக்க வழிசெய்யும் என்றும் குறிப்பிடுகிறது. இவ்வமைப்பு 1987இல் துவங்கப்பட்டது. அன்றிலிருந்தே பல அமைப்புக்களும் சூழல் பிரச்சினைகள் பற்றி விழிப்படைந்து, சூழல் பாதுகாப்புக்கான முக்கிய நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றன.

வழி மாசடைதல், கிருமி நாசினிகள் மற்றும் உணவு தயாரிப்பில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்களால் உணவு மாசடைதல், ஓசோன் துளை, எண்ணெய்க் கசிவு, புவி வெப்பமடைதல் போன்றவற்றால் ஏற்படும் ஆரோக்கியக் கோளாறுகள் போன்றவற்றை இன்றைய முக்கிய சூழல் பாதிப்புக்களாக சர்வதேச சமூகம் உணர்ந்துள்ளது.

இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஐக்கிய நாடுகள் சபை பல்வேறு தீர்வுகளை முன்வைத்துள்ளது. சமூக ஒருமைப்பாடு, சூழல் பாதுகாப்பு, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார நிலையை முன்னேற்றுவது, காடழிப்பைத் தடைசெய்வது, சூழலியல் பல்வகைமையைப் பேணுவது, இயற்கை வளங்களைப் பேணுவது என்பனவே அவையாகும்.

உண்மையில், இது மிகவும் காலங்கடந்து வந்த விழிப்புணர்வாகும். 1400 ஆண்டுகளுக்கு முந்தைய இஸ்லாமிய சமுதாயம் அல்குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் மூலம் கற்பிக்கப்பட்ட சூழலியல் தொடர்பான விடயங்களை அறிந்தும் வாழ்வில் பின்பற்றியுமுள்ளது. சூழலைப் பாதுகாப்பது, சூழல் சமநிலையைப் பேணுவது, இயற்கை வளங்களைப் பாதுகாப்பது பற்றி அல்குர்ஆனும் ஸுன்னாவும் அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன.

“மனிதர்களின் கைகள் சம்பாதித்த தீயவற்றின் காரணமாக கரையிலும் கடலிலும் (அழிவு) குழப்பம் வெளிப்பட்டு விட்டன. அவர்கள் செய்த தீயவற்றில் சிலவற்றை அவர்களுக்கு அவன் சுவைக்கும் படிச் செய்வதற்காக (இவ்வாறு சோதிக்கிறான்; அதன் மூலம்) அவர்கள் (தவ்பாச் செய்து அவன்பால்) திரும்பி விடலாம்.” (ஸூரதுர் ரூம்)

சூழலுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பை இஸ்லாம் பின்வருமாறு நோக்குகின்றது:

01. சூழலையும் இறைவனின் அழகிய படைப்புக்களையும் அவதானிக்கவும் இறைவனின் இயற்கை படைப்புகளை அனுபவிக்கவும் தூண்டி அதன் மூலம் ஈமானை வலுவூட்டுகின்றது.

**வானம்**

“மேலும், நிச்சயமாக நாம் வானத்தில் கிரகங்களை அமைத்து பார்ப்போருக்கு அதனை அலங்கரித்துள்ளோம்.” (அல்ஹிஜ்ர்: 6)

> **“தங்களுக்கு மேல் (இருக்கும்) வானத்தின்பால் அதனை நாம் எவ்வாறு (ஒரு கட்டுக்கோப்பாக) அமைத்து அதனை (நட்சத்திரங்களால்) அலங்காரமாக்கி வைத்துள்ளோம் என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்கவில்லையா? அதில் எத்தகைய வெடிப்பும் இல்லை.” (கா:ஃப்: 06)**

"தங்களுக்கு மேல் (இருக்கும்) வானத்தின்பால் அதனை நாம் எவ்வாறு (ஒரு கட்டுக் கோப்பாக) அமைத்து அதனை (நட்சத்திரங்களால்) அலங்காரமாக்கி வைத்துள்ளோம் என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்கவில்லையா? அதில் எத்த கைய வெடிப்பும் இல்லை." (காஃப்: 06)

**பூமி**

"(நபியே) நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்கி வைக்கிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாம்தான் அதனைக் கொண்டு அவற்றின் நிறங்கள் மாறுபட்டவையான கனிகளை வெளியாக்கினோம். இன்னும் மலைகளிலிருந்து அதன் நிறங்கள் மாறுபட்டவையான வெள்ளையும் சிவப்புமான பாதைகளும் சுத்தக் கறுப்பு நிறமுடையதும் உள்ளன." (பாதிர்: 27)

**மனிதன்**

"நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம்." (அல்அலக்: 4)

**தாவரங்கள்**

"மேலும் அவன் எத்தகையவனென்றால், வானத்திலிருந்து மழையை அவன் இறக்கிவைக்கின்றான்; பின்னர் அதைக் கொண்டே ஒவ்வொரு பொருளின் புற்பூண்டுகளையும் நாம் (முளைக்க வைத்து) வெளிப்படுத்தினோம். பின்னர் அதிலிருந்து பசுமையான (பயிர்கள் உள்ள)தை நாம் வெளிப்படுத்தினோம். பின்னர் அதிலிருந்து ஒன்றன்மேல் ஒன்றாக அமைந்துள்ள (கதிர்களைப் போன்ற) வித்துக்களை வெளிப்படுத்துகிறோம்."

**மிருகங்கள்**

"ஒட்டகத்தை அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது? என்பதை அவர்கள் (கவனித்துப்) பார்க்க மாட்டார்களா?" (அல்பஜ்ர்: 17)

2. அல்லாஹ்வின் வல்லமை, அழகு, அறிவு என்பவற்றைக் கற்பித்து அவற்றை நினைவூட்டி இறை விசுவாசத்தை ஆழமாக்குகின்றது.

"நிச்சயமாக (வேதமாகிய) இது உண்மையானதுதான் என்று அவர்களுக்குத் தெளிவாகும் வரையில் (உலகின்) பல பாகங்களிலும் அவர்களிலும் நம்முடைய அத்தாட்சிகளை அவர்களுக்கு நாம் காண்பிப்போம். (நபியே) உமதிரட்சகனுக்கு நிச்சயமாக அவன் ஒவ்வொரு பொருளின் மீதும் (அது பற்றி நன்கறிந்து) சாட்சியம் இருக்கின்றான் என்பது போதுமானதாக இல்லையா?" (ஹாமீம் ஸஜ்தா: 53)

3. இறைவனின் படைப்புகளின் மூலம் பெறப்படும் பல விதமான நன்மைகள்

"இன்னும் கால்நடைகளில் சிலவற்றை சுமை சுமப்பதற்காகவும் (மற்ற சிலவற்றை) உணவுக்காகவும் (அவனே படைத்திருக்கிறான்.) ஆகவே அல்லாஹ் உங்களுக்கு அளித்தவற்றிலிருந்து நீங்கள் புசியுங்கள்; இதில் ஷைத்தானுடைய அடிச்சுவடுகளையும் பின்பற்றாதீர்கள். நிச்சயமாக அவன் உங்களுக்குப் பகிரங்கமான விரோதியாவான்." (அல்அன்ஆம்: 142)

4. இயற்கையின் அழகான, அதிசயமான படைப்பை உணரச் செய்து மனிதனுக்கும் சூழலுக்கும் இடையில் ஓர் ஆத்மிகத் தொடர்பை ஏற்படுத்துகிறது.

"ஏழு வானங்களும், பூமியும் அவற்றில் உள்ளவையும் அவனைத் துதி செய்கின்றன. (இவற்றில்) எப்பொருளும் அவனின் புகழைக் கொண்டு துதி செய்து கொண்டே தவிர இல்லை. எனினும், அவற்றின் துதியை நீங்கள் விளங்கிக் கொள்ள மாட்டீர்கள். நிச்சயமாக அவன் மிக்க சகித்துக் கொள்ளக்கூடியவனாக மிக்க மன்னிக்கக்கூடியவனாக இருக்கின்றான்." (பனீ இஸ்ராயீல்: 44)

"ஜீவராசிகளில் வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வுக்கே சிரம் பணிந்து வணங்குகின்றன. இன்னும் மலக்குகளும் அவ்வாறே சிரம் பணிகின்றனர். அவர்களோ பெருமையடிக்க மாட்டார்கள்." (அந்நஹ்ல்: 49)

"மேலும் (திராட்சை போன்ற பந்தலின் மீது) படரவிடப்பட்ட தோட்டங்களையும் இன்னும் படரவிடப்படாதவையும் இன்னும் பேரீத்த மரங்களையும் புசிக்க விதவிதமான (காய்கறி, தானியங்கள் போன்றவை உருவாகும் விவசாயத்தையும்) அதன் தோற்றத்தில் ஒன்றுபோலும் (சுவையில்) ஒன்றுபோல் இல்லாததுமான (ஒலிவ்) ஸைத்தூனையும் மாதுளையையும் அவனே படைத்திருக்கிறான். ஆகவே, அவை பருவகாலத்தில் பலன் தந்தால் அவற்றின் கனியிலிருந்து (தாராளமாகப் புசியுங்கள்; அவற்றை அறுவடை செய்யும் நாளில் (ஏழைகளுக்கு, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்காக) அதில் அதனுடைய பரகத்தையும் கொடுத்துவிடுங்கள். இன்னும் (வீண்) விரயம் செய்யாதீர்கள். வீண் விரயம் செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்க மாட்டான்." (அல்அன்ஆம்: 141)

புத்தளத்தில் 50% கழிவுடன்
O/L or A/L நிறைவு செய்தவர்களுக்கு
4 Diploma க்களைக் கொண்ட தீவிர பயிற்சி

1. Spoken English
2. Ms Office
3. Graphic Designing
4. Hardware Engineering
15 JOB களுக்கான 100% Practical உடன் பயிற்சி
4 மாதங்களுக்கான மொத்தக்கட்டணம் Rs. 8000 மட்டுமே!
0716 22 85 80
JOB
Training Program
ஆங்கில அறிவு தேவையில்லை.
வயதெல்லை கிடையாது.
Multimedia Projector கொண்ட வகுப்பறை.
A/C Class room.
மிகக்குறைந்த கட்டணம்.
11 வருடங்கள் அனுபவம் கொண்ட ஆசிரியர்.
Global
College of Computer Studies
43, Udayar Lane, Puttalam.
facebook.com/puttalamglobal
twitter.com/lankait

**அல்ஹஸனாத் வாசகர் கருத்துக் கணிப்பீட்டுப் படிவத்தை 1300க்கு மேற்பட்ட வாசகர்கள் பூரணப்படுத்தி அனுப்பியிருந்தார்கள். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். கருத்துக் கணிப்பீட்டுப் படிவத்துடன் வாசகர்கள் அனுப்பி வைத்த கடிதங்கள் சில:**

### உள்வாங்கும் வகையில் இலகுவான கருத்துக்கள்

அல்ஹஸனாத் இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் அமையப் பெற்றுள்ளதோடு சிறார்கள் முதல் முதியோர் வரை யாவருக்கும் பயனுள்ளதாக வெளிவருகிறது, அல்ஹம்துலில்லாஹ்

சமய விவகாரங்களோடு பல்வேறு அம்சங்களைச் சுமந்து வரும் இச்சஞ்சிகையில், கல்வி வழிகாட்டல் தொடர்பான பகுதிகளையும் இணைத்துக் கொண்டால் மிகவும் சிறப்பானதாக இருக்கும்.

பாத்திமா அப்தினா - வாழைச்சேனை

### தாஇகளுக்கான வழிகாட்டல் தேவை

தஃவா பணியும் அல்ஹஸனாத் ஊழியர்களின் முயற்சிகள் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன். அல்ஹஸனாத் சஞ்சிகையில் தாஇகளுக்கு தஃவா பணிக்குரிய வழிகாட்டல்கள் தொடராக வழங்கப்பட வேண்டும். நவீன பிரச்சினைகளுக்கான இஸ்லாமிய சட்டங்கள், இஸ்லாமும் விஞ்ஞானமும் என்பனவும் தொடராக எழுதப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

பாத்திமா ஸஹ்ரா - ஓட்டமாவடி

### பெண்களுக்கான தனியான சஞ்சிகை அவசியம்

அல்ஹஸனாத் பின்வரும் பகுதிகளையும் சுமந்து வரவேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

1. அரபு மொழி
2. உளவியல் ஆக்கங்கள்
3. கேள்வி - பதில்
4. கல்வி, தொழில் வழிகாட்டல்கள். அத்துடன் குறிப்பாக, பெண்களுக்கென தனியான சஞ்சிகை இணைப்பாகவோ தனியாகவோ வெளிவர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

எம்.எஸ்.எப். ஸபானா - கடுகஸ்தோட்டை

### சத்திய பாதைக்கு அழைத்துச் செல்லும் அல்ஹஸனாத்...

நான் அல்ஹஸனாத்தின் நீண்ட நாள் வாசகன் என்பதையிட்டு பெருமிதமடைகிறேன். வாசகர்களை சத்தியப் பாதைக்கு அழைத்துச் செல்வதில் அல்ஹஸனாத்திற்கு தனியிடம் உண்டு.எனது முழுக் குடும்பமும் அல்ஹஸனாத் ஊடாக ஈருலகப் பயன் பெற்று வருகின்றனர், அல்ஹம்துலில்லாஹ்.

எஸ்.எம்.ஏ. முபீன் - காத்தான்குடி

### உயர்தரப் பாடங்களும் இணைக்கப்பட வேண்டும்

நான் கடந்த இரு வருடங்களாக அல்ஹஸனாத் வாசித்து வருகிறேன். பொதுவாக அல்ஹஸனாத்திலுள்ள குறைகளைத் தேடுவதை விடதி அதன் நிறைகளினூடாக நிறைந்த பயனடைந்து வருகிறேன். இஸ்லாமிய விளக்கங்களை அறிவுபூர்வமாக முன்வைப்பதில் அல்ஹஸனாத் தன்னிகரற்று விளங்குகிறது.

ஆனாலும், உயர்தரம் கற்கின்ற எம் போன்ற அல்ஹஸனாத் வாசகர்களுக்கு க.பொ.த. சாதாரண தரம், உயர்தரப் பாடங்கள் உள்ளடக்கப்படுமானல் இன்னும் பயனுள்ளதாக அமையும்.

கே.எஸ். சுல்பிகா - புத்தளம்

### பெண்களுக்கான வழிகாட்டல் அவசியம்

அல்ஹஸனாத் வாசகியாக நான் கூற விரும்புவது, இன்று சமூகத்தில் நன்மையிலும் தீமையிலும் பெண்களின் பங்கு அதிகரித்துள்ளது. இவர்களுக்கான முழுமையான இஸ்லாமிய வழிகாட்டல்கள் குறைவாகவே உள்ளன. எனவே, அல்ஹஸனாத் இதன் தேவை உணர்ந்து பெண்களுக்கான பகுதிகளை தனியிதழாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஐ. உம்மு நிஸா - கண்டி

### அல்ஹஸனாத் என்னைக் கவர்ந்தது

நான் இதுவரை வாசித்த சஞ்சிகைகளில் அல்ஹஸனாத்தின் கருத்துக்கள் மட்டுமே என்னைக் கவர்ந்திழுத்துள்ளன. காரணம், அதன் ஆக்கங்களும் சிந்தனைகளும் கருத்துக்களும் காலத்திற்கேற்ற வகையில் பயனுள்ள வகையில் பிரசுரமாகின்றன. பெண்கள், சிறுவர்கள், இல்லத்தரசிகளுக்கான தகவல்களோடு சர்வதேச, இஸ்லாமிய விளக்கங்கள் என சகல தரப்பினரையும் அல்ஹஸனாத் உள்வாங்கியுள்ளது.

அல்ஹஸனாத் தொடர்ந்தும் பல தகவல்களோடு வெளிவர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

எம்.ஆர்.எம். ராசிக் - அக்குரணை

### பெண் எழுத்தாளர்களுக்கு இடம் வேண்டும்

அல்ஹஸனாத் இதழின் நீண்ட நாள் தோழி நான். அதன் ஆக்கங்களை விரும்பி வாசிப்பதுண்டு. எனினும், இதுவரை நான் அல்ஹஸனாத்திற்கு எழுதிய பல ஆக்கங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

தயவு செய்து பெண்கள் பகுதி' ஊடாக அல்லது பெண்கள் சஞ்சிகையின் ஊடாக எமது ஆக்கங்களையும் உள்வாங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எம். ருஸ்லா - சிலாபம்

**அமெரிக்காவின் ஆதிக்கம்...** *(17ஆம் பக்கத் தொடர்)*

இன்னும், அமெரிக்கா சிரியாவைத் துண்டாடுவதற்கே முயற்சி செய்கிறது. சிரியா மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பால் சிரியா 3 நாடுகளாக துண்டாடப்படும் அபாயம் காத்திருக்கிறது. முதலாவது உடைபடும் தேசம் குர்திஷ் தானாக இருக்கும். குர்திஷ் மக்கள் சிரியா, ஈராக் தேசங்களை இணைக்கும் வகையில் தமது புதிய நாட்டைத் திட்டமிடலாம். இரண்டாவதாக, அஸதின் தலைமையிலான அலவியத் தேசம். இதனை ஈரான் நிருவகிக்கும். மூன்றாவது தேசம் சிரிய புரட்சிப் படையினரின் கட்டுப்பாட்டின்கீழ் வரும்.

ஒருமித்த சிரிய தேசத்தை பிரிப்பதற்கு அமெரிக்கா முயற்சிப்பதன் காரணம், அதனூடாக இஸ்ரேலைப் பாதுகாக்கலாம் என்பதே. இவ்வாறு மூன்று தேசங்கள் தோன்றினால், அவர்களுக்கு மத்தியில் எல்லைப் பிரச்சினைகளும் ஷீயா-ஸுன்னிப் பிரச்சினைகளும் பல்லாண்டு காலம் தொடர வாய்ப்புள்ளது. அது இஸ்ரேலை பலப்படுத்தும்.

சுருக்கமாகச் சொல்வதானால், அமெரிக்கா கொலைவெறி பிடித்த மிருகங்கள் வாழும் காட்டில் உள்ள உல்லாசமான பிரதேசமாக (villa in the jungle) இஸ்ரேலை காண்பிக்க முற்படுகிறது. சிரிய மக்கள் மிக அவசரமாக விழித்துக் கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது என்கிறார் நோம் சொம்ஸ்கி.

**பலஸ்தீன்-இஸ்ரேலியப் பேச்சுவார்த்தை:**

மஹ்மூத் அப்பாஸுக்கும் இஸ்ரேலிய அரசுக்குமிடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளை சிந்தனையாளர் நோம் சொம்ஸ்கி அமெரிக்காவின் பகல் கொள்ளை என வர்ணிக்கிறார். இஸ்ரேலை தன் பாட்டில் பலஸ்தீன நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதற்கு நடத்தப்படும் மாநாடு என்றே அதனைத் தான் அழைப்பதாக மேலும் குறிப்பிடுகிறார். அமெரிக்கா திட்டமிட்டு பலஸ்தீனைச் சீரழிக்கிறது. யாஸிர் அரபாத்தை வசப்படுத்தி காஸா பகுதி என்றும் மேற்குக் கரையென்றும் பலஸ்தீனை இணைய முடியாத இரு துருவங்களாக அமெரிக்கா மாற்றியது. இன்னும், அவ்விரு தேசங்களையும் வளமான பொருளாதாரம் (productive economy) ஏற்படாத வண்ணம் திட்டமிட்டதும் அமெரிக்காதான்.

அமெரிக்காவின் ஆசீர்வாதத்தின்கீழ்தான் இஸ்ரேலிய அரசு மேற்குக் கரையில் குடியேற்றத் திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. ஆரம்பத்தில் இஸ்ரேலிய அரசின் குடியேற்றத் திட்டங்கள் தொடருமானால் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ள மாட்டோம் என பலஸ்தீன அரசு அறிவித்தது. ஆனால், அப்போதைய ரொனால்ட் ரீகனின் அரசு பலஸ்தீன அரசின் வேண்டுகோள் நிரந்தர சமாதானத்திற்கு தடை (an obstacle for peace) என்ற மாயையைக் கிளப்பி விட்டது. இன்று ஒபாமா அதே மாயையை சமாதானத்தை நம்பிக்கையற்றதாக்கும் நிபந்தனை (not hopeful to peace) என்கிறார். அமெரிக்காவின் இராகத்திற்கு தலையசைக்கா விட்டால் தனது ஆசனம் காலியாகிவிடும் என்பதும் ஜனாதிபதி அப்பாஸுக்கு நன்றாகத் தெரியும். மொத்தத்தில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு அரசியல் வரலாற்றில் மிக மோசமான அத்தியாயமே பலஸ்தீன் என்கிறார் நோம் சொம்ஸ்கி.

இறுதியாக, எகிப்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சி தொடர்பாக குறிப்பிடும்போது அரபு மக்கள் மீண்டும் எழுந்து வருவார்கள். அவர்கள் தைரியமனவர்கள் என்பதனை தொடரும் ஆர்ப்பாட்டங்கள் காண்பிப்பதாக சிந்தனையாளர் சோம்ஸ்கி அடையாளமிட்டுக் காட்டுகிறார்.

புத்தளத்தில் தரமான கல்வி
மிகக்குறைந்த கட்டணத்தில்

O/L or A/L
நிறைவு செய்தவர்களுக்கு
அடிப்படையிலிருந்து மிக இலகுவான முறையில்



10 Days
SPOKEN ENGLISH

1. Basic English
2. Be Verbs
3. Do Verbs
4. Modal Verbs
5. Wh Questions
6. Wh links
7. Other Links
8. Active Voice
9. Passive Voice
10. British Pronunciation

மொத்தக்கட்டணம் Rs. 4000 மட்டுமே!.

0716 22 85 80

Global
College of Computer Studies

43, Udayar Lane, Puttalam.
facebook.com/puttalamglobal
twitter.com/lankait

Free SMS

மேலதிக விபரங்கள், புதிய பாடநெறிகள், JOBs போன்றவற்றை இலவசமாக அறிந்துகொள்ள FOLLOW LANKAIT என TYPE செய்து 40404 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.

ஆதரவற்ற ஓர் இஸ்லாமிய தாய்க்கு...

இரண்டு பெண்களுடன் வேளைக்கு தங்குவதற்கு ஒரு பெண் தேவை;

- ஐந்து வேளை தொழக்கூடியவராகவும் ஓதி அமல் செய்யக்கூடிய பெண்ணாகவும் இருத்தல்.
- கணவனால் கைவிடப்பட்ட, குடும்பங்களால் ஒதுக்கப்பட்ட எந்தவிதமான ஆதரவுமில்லாமல் அல்லது கணவனை இழந்த 40-45 வயதிற்குட்பட்ட ஆரோக்கியமான பெண்ணாக இருத்தல்.
- இன்ஷா அல்லாஹ் அவரது வாழ் நாள் முழுவதும் தங்கியிருக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அவருக்கான உம்ரா செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

- கொண்டுவரப்படவேண்டிய ஆவணங்கள்:

1. தேசிய அடையாள அட்டை
2. பொலிஸ் அறிக்கை
3. அவன் தங்கியிருக்கின்ற ஊர் பள்ளி வாசல் கடிதம்

மேலதிக விபரங்களுக்கு: 0779384002

O/L - A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் மற்றும் வயது, கல்வி வித்தியாசமின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும்

# LONDON Hotel School

தொழில் வாய்ப்புக்கும் வெளிநாடு செல்லவும் சுயதொழில் வாய்ப்புக்கும்

## 04 மாதகாலத்தில் 10 பாடத்திட்டங்கள்

- Hotel Management
- International Cookery
- Front Office & Reception
- Vegetable & Fruit Carving
- House Keeping
- Food & Beverage
- Pastry & Bakery
- Tourism
- Cake Making
- English

**10** சான்றிதழ்கள் வழங்கப்படும்

11.10.2013 திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்



தமிழ் ஆசிரியர்களால் தமிழ் விளக்கத்துடன் பாடங்கள் நடைபெறும்

## இலவச மேலதிக வகுப்புகள்

- ஆங்கில அறிவுக்கான வகுப்பு
- கேக் தயாரித்தலும் வடிவமைத்தல் வகுப்பு
- **Italian & European Cookery** (Traditional & Modern Cooking Methods)

## மேலும் தகமை பெற்றுக்கொள்வதற்காக

**5** ★★★★★ நட்சத்திர ஹோட்டல்களில்

**8** மாதத்துக்கு பயிற்சி, சம்பளம், டிப்ஸ், உணவு, சீருடை, சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## பயிற்சியின் பின்

- நட்சத்திர ஹோட்டல்களில் வேலைவாய்ப்புகள்
- வங்கிக் கடன் வசதிகள்
- UAE, Dubai, Kuwit, Saudi நாட்டில் கூடிய சம்பளம் பெற்றுக்கொள்ள UK, USA, Canada, Australla மற்றும் ஏனைய நாடுகளில் பட்டப்படிப்பும் தொழில் வாய்ப்புக்கு விசாவுக்கு ஏற்பாடுகள்.
- பயிற்சிகளும் (இன்டசிப் மூலம் தொழில் வாய்ப்புகளும்)
- உயர் கல்வியும் வசிப்பிட வசதிகள்
- குடும்பத்துடன் செல்ல வாய்புகள்

## கீழ் காணும் நாடுகளில் உள்ள பல்கலைகழகங்களில் உயர் கல்வியும் பயிற்சியுடன் வேலைவாய்ப்பும் பெற்றுத்தரப்படும்

- Glyndwr University, UK
- Lincoln University College, Malaysia
- Wichita State University, USA
- Marbella University, Spain
- Riccarton High School, New Zealand
- ICL Business College, New Zealand
- Royal Business College, New Zealand
- Bridgwater College, UK

ஒரு வாரத்தில் வெளிநாட்டு அனுமதிப்பத்திரம் வெளிநாட்டுக் கல்விக்கு வங்கியில் கல்விக் கடன் நீண்டகாலத்தில் தவணைமுறை அடிப்படையில் பணம் செலத்தும் வாய்ப்பு

Missed Call செய்து விபரங்களை அறியவும் S.M.S செய்து Email மூலமாக விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும் தூர பிரதேசத்தினர் வங்கியில் ரூபா 1000/- செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும்

**0776 34 69 13**

தூர பிரதேசத்திலிருந்து வருபவர்களுக்கு இலவச தங்குமிட வசதிகள் 3 வேளை உணவு வசதிகள்

**HOTLINE - 0711 60 10 40**

| Bambalapitiya | Nugegoda | Dematagoda | Kandy | Kandy | Dehiwala |
|---|---|---|---|---|---|
| 0776 34 69 13 | 0774 32 31 31 | 0774 83 34 44 | 0779 32 31 31 | 0711 60 10 50 | 0712 35 74 12 |
| 0114 42 24 33 | 0114 38 44 64 | 0114 38 44 62 | 0775 49 29 44 | 0775 49 29 44 | 0779 93 90 10 |

LONDON COLLEGE

## LONDON College of Higher Studies (Pvt) Ltd.

No. 195, 1st Floor, Galle Road, Bambalapitiya, Colombo -04.
(Near the Visaka Road)

### வஹியின் வருஷிப்பில்... (26ஆம் பக்கத் தொடர்)

கோணிச் சாய்ந்து விட்டன. தவிர, நீங்கள் இருவரும் அவருக்கு உதவியாளர்களாக இருப்பீர் கள்." (66:4)

மிகப் பாரிய பொறுப்புக்களை சுமந்து வாழும் இஸ்லாமிய ஊழியர்களையும் அழைப்பாளர்களையும் கணவர்களாகப் பெற்றுள்ள பெண்கள் அதே கரிசனையுடன் கருமமாற்ற வேண்டும் என்று இங்கு உணர்த்தப்படுகிறது. நபியவர்களின் மனைவியர் இருவரும் தவ்பா செய்து மீண்டார்கள். அவர்களது சிறப்பியல்பு என்னவென்றால், மனிதப் பலவீனம் காரணமாக ஒரு தவறைச் செய்தால் உடனடியாக அதிலிருந்து மீண்டு விடுவார்கள். இந்த ஸூராவில் தவ்பா செய்து மீளுமாறு எமக்கும் அல்லாஹ் கட்டளை பிறப்பிக்கிறான்.

"முஃமின்களே! கலப்பற்ற மனதோடு அல்லாஹ்விடம் தவ்பா செய்து பாவமன்னிப்புப் பெறுங்கள். உங்கள் இறைவன் உங்கள் பாவங்களை விட்டுப் போக்கி சுவனச் சோலைகளில் உங்களை நுழைவிப்பான்." (66: 8)

சில அறிவிப்புக்களில் ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) அந்த இரகசியத்தை வெளிப்படுத்தியதும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவரை விவாகரத்துச் செய்ய தீர்மானித்தார்கள். ஆனால், அல்லாஹ் ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை அனுப்பி அவரது அதிக தொழுகை, நோன்பு முதலான இபாதத்கள் காரணமாக தடுத்தான் என வந்துள்ளது. (மஸ்ஹரி)

யாருடைய இல்லத்தில் இருந்து இறைத்தூது மனித குலத்தை நோக்கிச் செல்கிறதோ அந்த இல்லத்தில் இறுதித் தூதரின் மனைவியர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கும் அந்தப் பெண்கள் சாதாரண பெண்களைப் போல் அல்ல என்றும் தங்கள் மீது பாரிய பொறுப்புக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் இங்கு அல்லாஹ் உணர்த்துகிறான். இப்னு ஸஅத் (ரஹிமஹுல்லாஹ்) பின்வரும் செய்தியைப் பதிவு செய்துள்ளார்:

அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) ஹஃப்ஸாவை ஒரு முறை விவாகரத்துச் செய்து விட்டு பின்னர் மீட்டிக் கொண்டார்கள். ஏனெனில், ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வந்து "ஹஃப்ஸாவை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள். அவர் அதிகமாக நோன்பு நோற்பவராகவும் இரவில் நின்று வணங்குபவராகவும் இருக்கிறார். அவர் சுவனத்தில் உங்கள் மனைவி" என்று தெரிவித்தார். இதனைஹுமைத் பின் அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) மற்றும் உக்பா பின் ஆமிர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோரும் அறிவித்துள்ளனர்.

அல்லாஹ்வுடைய வழிகாட்டலிலும் வஹியின் வருஷிப்பிலும் தன்னை சீரமைத்துக் கொண்ட ஹஃப்ஸா (ரழியல்லாஹு அன்ஹா) ஹிஜ்ரி 41ஆம் ஆண்டு தனது 59ஆம் வயதில் நோன்பு நோற்றிருந்த நிலையிலேயே வபாத்தானார்கள்.

### பேனாமுனைச் சந்திப்பில்... (24ஆம் பக்கத் தொடர்)

கடந்த உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுக் காட்டிய நூலின் பூரணப்படுத்தப்பட்ட பிரதியை 1958 இல் என்னிடம் கையளிக்கும் வேளையில் டாக்டர் கான்ட்லெல் ஸ்மித் அவர்களும் நானும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டோம். எமக்கான புதிய இஸ்லாத்தைப் பின்ன முயன்று தோற்றுப் போனவர்கள் தான் இவரைப் போன்றவர்கள். குர்ஆன்-ஸுன்னா அடிப்படையிலான உண்மையான இஸ்லாத்தைக் கைவிட்டு இவர்கள் எமக்காகப் பின்னித் தைத்த புதிய இஸ்லாத்தை எடுத்து அணிந்து கொள்வோம் என்று வீணாகக் காத்திருப்பவர்கள்; விழலுக்கு இறைத்த நீராய் தங்கள் முயற்சிகள் வீணாவதை அறியாதவர்கள்.

ஒரு முஸ்லிம் என்பவன் 'முஸ்லிம்' என்ற வார்த்தையின் உண்மை விளக்கமாய் நிற்பவன். தூய இஸ்லாத்திலிருந்து, அசல் இஸ்லாத்தில் இருந்து சற்று விலகி இதற்கும் அதற்கும் இடையில் ஒரு மத்திய பாதையை ஒரு முஸ்லிம் வகுத்துக் கொள்வானெனில், -அல்லாஹ் காப்பாற்ற வேண்டும்.- அவனிடம் இஸ்லாமே இல்லாமல் போய் பயங்கர ஆபத்துக்கு ஆட்பட முடியும்.

இந்த மேற்குச் சக்திகளின் முட்டாள்தனம் குறித்து உண்மையில் நான் மிக ஆச்சரியப்படுகிறேன். "கடவுளே இல்லை" கோட்பாட்டைக் கடைப்பிடித்ததால் கமியூனிஸத்தை முஸ்லிம்கள் எதிர்த்துப் போராட வேண்டும் என்கிறது ஒரு பக்கம்; மறுபக்கம் உண்மை இஸ்லாத்தை ஒரு பயங்கர அச்சுறுத்தலாகக் கருதுகின்ற காரணத்தால் முஸ்லிம்கள் தமக்குள் கருத்து வேறுபட்டு அடித்துக் கொண்டு இஸ்லாமறுந்துவிடுவதை எதிர்பார்த்திருப்பது என்ன பரிதாபம்! தாம் விளைவிக்கும் குழப்பங்களின் முடிவு என்னவாக இருக்கும் என்று தாமே அறியாதவர்கள்.

இஸ்லாத்துக்கு முரணானவற்றை முஸ்லிம் நாடுகளுக்குள் திணிக்க முயலும் ஊடுருவல் சக்திகளைத் தட்டிக் கொடுத்து ஊக்குவிக்க ஒருபோதும் இவர்கள் தவறுவதில்லை. இஸ்லாத்தை உயிர்ப்பிக்க உயிர்கொடுத்துப் போராடுபவர்களை மத வெறியர்கள் எனவும் பிற்போக்குவாதிகளாகவும் தூஷித்துக் கண்டிப்பதில் இவர்கள் களைப்புறுவதுமில்லை. இக்குற்றச்சாட்டுக்களுடன் திருப்தியடைந்து நின்றுவிடாது, நவீன முஸ்லிம் தலைவர்களை தம் கைக் கருவிகளாகவும் ஆயுதங்களாகவும் உபயோகப்படுத்தி இஸ்லாமிய எழுச்சியை முன்னிறுத்திப் போராடும் முஸ்லிம்களை நசுக்கி ஒடுக்கிவிடவும் பின் நிற்பதில்லை. மேற்கின் விவேகமற்ற, வழிதவறிய இந்தப் போக்குகளின் முடிவு என்னவாகும் என்பது பற்றி இறைவன் ஒருவனே அறிய முடியும்.

டாக்டர் ஆண்ட்வெல்த் ஸ்மித் அவர்களும் அவரது சகபாடிகளும் ஒன்றை மட்டும் உறுதியாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உண்மை இஸ்லாத்தை உதறித் தள்ளிவிட்டு மேற்கு பின்னித் தயாரிப்படுத்திய இஸ்லாமியப் போர்வையை எடுத்து முஸ்லிம்கள் தம்மைப் போர்த்திக் கொள்வார்கள் என்ற அவர்களின் எதிர்பார்ப்பு கனவிலும் நடக்கப் போவதில்லை. நல்லவேளை, இஸ்லாத்தின் உண்மை மூலங்களான

குர்ஆனும் ஸுன்னாவும் சற்றும் திரிவுபடுத்தப்படாது, கைபட்டு களங்கப்படுத்தப் படாது தூய உருவில், அச்சொட்டான அதன் மூல வடிவில் என்றும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். உலகில் ஒரேயொரு முஸ்லிமாவது இந்த அசல் மூலங்களுடன் நேரடித் தொடர்பில் இருக்கும் வரை அதிகாரபூர்வமற்ற போலி இஸ்லாம் முஸ்லிம்களிடம் தலையெடுத்துவிட முடியாது.

தென்னாபிரிக்கப் பயணம் ஜுலை மாதம் அளவில் தள்ளிப்போடப்படவுள்ளது. ஆரோக்கியமற்ற என் உடல் நிலைகூட பயணத்திற்கு ஏற்றதாக இல்லை. அத்தோடு கென்யாவில் அரசியல் சூடு சற்றுத் தணிந்து அரசியல் அமைதி ஏற்பட்ட பின்னர் நான் அங்கு வருவதுதான் இலாபகரமாக இருக்கும் என்பது தென்னாபிரிக்க நண்பர்களின் முடிவு.

ஸலாமும் வாழ்த்தும் கூறி விடைபெறுகிறேன்.

அன்புடன் அபுல் அஃலா

---

## பேருளாக... (12ஆம் பக்கத் தொடர்)

தனது ஆர்வத்துக்கும் ஈடுபாட்டுக்கும் பொருத்தமான பணிகளைச் செய்து விட்டு சமூகத்தை அதன் போக்கில் விடமாட்டார். மனிதர்களை உரிய இடத்தில் வைத்து அவர்களால் நடக்க வேண்டிய பணிகளுக்கு ஊக்கமளிப்பார். ஒவ்வொரு நிபுணரும் செய்ய முடியுமான பங்களிப்பை சமூகத்துக்கு அவரவர் மூலம் பெற்றுக் கொடுப்பார். அத்தகைய பங்களிப்புகளில் தனது மூக்கை நுழைத்து நிபுணர்களுக்குத் தொல்லையாக இருக்க மாட்டார். அவர்கள் இஸ்லாமிய வரையறைகளுக்குள் இருந்து கொள்வதை மட்டும் அவர் உறுதி செய்து கொள்வார். அவர்கள் பிழை செய்தாலும் மன்னித்து உற்சாகமூட்டுவார். அவர்களால் சமூகம் பாதிப்படைந்தால் அவர்களை குறித்த பொறுப்புகளிலிருந்து நீக்குவது பற்றி கலந்தாலோசிப்பார்.

இந்த வகையில் அனைத்துத் துறைகளிலும் நிபுணர்களின் பங்களிப்பைப் பெற்ற சமூகமாக அந்தத் தலைவரின் சமூகம் காணப்படும்.

சட்டத்தையும் கூட அதற்குரிய இடத்தில் வைத்துப் பயன்படுத்துவதே நீதியான தலைவரின் பண்பாக இருக்கும். உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களது காலத்தில் நடைபெற்ற எத்தனையோ சம்பவங்கள் இதற்கு சான்றுகளாக இருக்கின்றன.

ஒரு முறை ஓர் ஒட்டகத்தைக் களவெடுத்து அறுத்து உண்டவர்களின் பிரச்சினை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வந்தது. அறுத்துண்டவர்களின் எஜமானர்களுக்கு ஒட்டகத்திற்கான நஷ்ட ஈட்ட வழங்குமாறும் மீண்டும் அவர்கள் களவெடுத்தால் எஜமானர்களின் கைகளை வெட்டுவதெனவும் எச்சரித்தார். தங்களது வேலையாட்களைப் பசியில் போட்டதால் களவெடுத்தவர்களுக்கெதிராக சட்டத்தைப் பயன்படுத்தாமல் களவெடுக்கத் தூண்டிய எஜமானர்களுக்கெதிராகவே அதனைப் பயன்படுத்தினார். அல்லாஹ் களவு எடுத்தவர்களின் கையை வெட்டச் சொன்னான். எனவே, எது நடந்தாலும் சரி களவு எடுத்தவர்களது கைகளையே வெட்டுவேன் என்று சட்டத்தை இடம்மாற்றி வைக்கவில்லை அந்த உமர்.

சட்டத்தை உரிய இடத்தில் வைத்த இவ்வாறான எண்ணற்ற சம்பவங்கள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் தீர்ப்புக்களில் காணப்படுகின்றன. அதனால் உமரின் பிக்ஹு (பிக்ஹு உமர்) என்றொரு தனிப் பாடம் இஸ்லாமிய சட்டத்துறையில் பிரகாசிக்கின்றது.

அனைத்தையும் அதற்குரிய இடத்தில் வைக்கும்போது உலகம் தாளாத மகிழ்ச்சியிலும் தன்னிகரில்லாத அமைதியிலும் மூழ்கித் திளைக்கிறது. அத்தகைய சூழ்நிலையைத் தோற்றுவித்த தலைவருக்கு மறுமையில் அளவிலா மகிழ்ச்சியை அல்லாஹ் தனது அர்ஷின் நிழலில் ஏன் வழங்க மாட்டான்!

தலைவர்கள் பாரபட்சமில்லாமல் ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் வைக்க வேண்டும். ஒவ்வொன்றையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் நீதியான தலைவரின் மகிமை என்னவென்றால்... அவரால் முழு சமூகத்தையும் ஒன்றிணைத்துப் பயன்படுத்தி வெற்றி காண முடியும். அவர் தனது திட்டங்களை செயல்படுத்துவதற்கு தன்னைச் சார்ந்தவர்களை மட்டும் நம்பியிருக்க வேண்டியதில்லை. காரணம், அவர் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவரையும் உரிய இடத்தில் வைப்பதால் எல்லோரும் தமது இடத்தை அவரிடம் பெற்றுக் கொள்வார்கள்; ஒத்துழைத்துக் கருமமாற்றுவார்கள்.

இத்தகைய தலைவர்கள் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமானவர்கள். மக்களிடமும் உன்னதமான அந்தஸ்தைப் பெறுபவர்கள். அவர்கள் மூலமாக அல்லாஹ் அதிசயங்களை நிகழ்த்திக் காட்டுவான். அவர்கள் என்றும் அல்லாஹ்வின் ஒரு பேரருளாக நினைவுகூறப்படுவார்கள்.


## சிறுநீரக சத்திர சிகிச்சைக்கு உதவி கோருகிறார்

பாடசாலை வீதி, உகுரஸ்பிடிய கடுகஸ்தோட்டையைச் சேர்ந்த அப்துல் ஹமீத் முஹம்மது இல்யாஸ் (வயது 65) A+) பாதிப்படைந்த நிலையில் உள்ளார்.

2013.02.25 ஆம் திகதியிலிருந்து 6 மாதங்களுக்குள் அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும் என டாக்டர் ஏ.டப்ளியு.எம். வஸீல் தெரிவித்துள்ளார். இதற்காக 30 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவரது குடும்பத்தினால் இத்தொகையை திரட்டிக் கொள்வதில் பெரும் சிரமங்களைக் எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, இவருக்காக உதவ முன்வருவோர் கீழ்வரும் வங்கிக் கணக்கு இலக்கத்தில் தமது உதவித் தொகைகளை வைப்பிலிடவும்.

**A.H.M. ilyas, B.O.C, Katugasthotta Branch, Ac.No :- 2610597**

தொடர்புகளுக்கு: 0722150755

# நிகாஹ் சேவை

## மணமகன் தேவை

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த, அரபுக் கல்லூரி ஒன்றில் கற்று மௌலவியாப் பட்டம் பெற்ற, அரபுக் கல்லூரி மற்றும் சர்வதேசப் பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியையாகப் பணியாற்றும் மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 26, உயரம் 5'4) பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள துணையை அவரின் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0771419004, 0779793258**

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த உயர் தரம் Diploma in English, Computer Applica tion Assistant Course ஆகியவற்றைப் பூர்த்தி செய்த மார்க்கப்பற்றுள்ள மணமகளுக்கு (வயது 24) பொருத்தமான மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். 30 வயதுக்குட்பட்ட அரசாங்க அல்லது தனியார் துறையில் பணிபுரியக் கூடிய மார்க்கப்பற்றுள்ளவர் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு: 011 4883388**

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரம் கற்ற, இரு வருடங்கள் மத்ரஸாவிலும் கற்று தற்போது குர்ஆன் மத்ரஸாவில் பொறுப்பாசிரியையாகக் கடமையாற்றும் மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள (வயது 26, 4' 11" பொது நிறம்) மணமகளுக்கு மார்க்கப்பற்றுள்ள மணமகனை குடும்பத்தினர் எதிர்பார்க்கின்றனர். (மௌலவி மணமகன் விரும்பத்தக்கது) **தொடர்புகளுக்கு: 0724697990**

**(இரவு 8.00 மணிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்)**

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த உயர் கல்வித் தகைமையுடைய, ஒரு கை உதவியுடன் சுயமாக தனது தேவைகள், சமையல் வேலைகள், கைப்பணி வேலைகள் போன்றவற்றை நன்றாகச் செய்யக் கூடிய (ஒரு கை சுகவீனமுற்றுள்ளது) மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள மணமகளுக்கு (வயது 25, உயரம் 5' 2") நற்குணமும் மார்க்கப்பற்றும் உள்ள பொருத்தமான துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0710104777**

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள மணமகளுக்கு (வயது 30) சிறந்த, நற்குணமுள்ள, தொழில் செய்யும் மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**(வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் தொடர்பு கொள்ள முடியும்)**

**தொடர்புகளுக்கு: 0771389102**

moorfather@gmail.com

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள தொழில் புரியும் மணமகளுக்கு (வயது 26, உயரம் 5' 5") பொருத்தமான மார்க்கப்பற்றுள்ள மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(மணமகன் Civil Engineer ஆக அல்லது அது தொடர்பான ஒரு துறையில் தொழில் புரிவது விரும்பத்தக்கது)

**தொடர்புகளுக்கு: 0776861994**

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள மருத்துவபீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்கும் மணமகளுக்கு (வயது 27, உயரம் 5' 4") பொருத்தமான கல்வித் தகைமையுடைய மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0342235222, 071239449**

நாவலப்பிட்டியில் வசிக்கும், தகுந்த காரணங்களுக்காக பஸ்ஹு செய்து கொண்ட மார்க்கப்பற்றும் நல்லொழுக்கமும் உள்ள மணமகளுக்கு (வயது 34) தகுந்த, மார்க்கப்பற்றுள்ள துணையை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**தொடர்புகளுக்கு: 0771707642, 0719179563**

ஓர் அரிய சந்தர்ப்பம்

கண்ணில் வெள்ளை படர்தல் நோய்க்கான சத்திர சிகிச்சை (Cataract Surgery)

கட்டணம் ரூபா 9500.00

விஷேட வில்லை தேவைப்படின்

கட்டணம் ரூபா 15000.00

குவைத் வைத்தியசாலை புத்தளம்

தொடர்புகளுக்கு:

0322266480, 0777272107, 0773171720

மாதம் இருமுறை கத்னா செய்யப்படும் 2950.00 மட்டுமே

ஒக்டோபர் மாதத்திற்கான பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

**நிகாஹ் விளம்பரங்களை தகுந்த ஆவணங்களைப் பெற்று சேவை நோக்கிலேயே பிரசுரம் செய்கின்றோம். இரு தரப்பாரும் விளம்பரங்கள் தொடர்பில் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டுகிறோம். (ஆசிரியர்)**

O/L - A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் மற்றும் வயது கல்வி வித்தியாசமின்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும்

# Airline Ticketing School

Travelport Galileo
GALILEO APPROVED TRAINING CENTER

## தொழில்வாய்ப்புக்கான பயிற்சிகள்



11.10.2013 திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்



### Diploma in Airline Ticketing

- DIPLOMA IN AIRLINE & TRAVEL AGENCY OPERATION
- International Airlines
- Galileo Airline Ticketing
- Airport Transport Essentials
- Customer Service
- Travel Formalities
- Fare Constructions

6 மாத காலங்களுக்கு பாடத்திட்டங்களுக்கு
7 சான்றிதழ்கள் வழங்கப்படும்

### Certificate in Airline Ticketing

- Basic Airline & Ticketing Operation
- Information Technology (IT)
- Galileo Airline Ticketing
- Airport Operation
- English Language

3 மாத காலங்களுக்கு பாடத்திட்டங்களுக்கு
5 சான்றிதழ்கள் வழங்கப்படும்

- தமிழ் ஆசிரியரால் தமிழ் விளக்கத்துடன் பாடம் நடைபெறும்
- முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகுப்பறையில் நவீன தொழில்நுட்பம் கொண்ட பாடப் பயிற்சிகள் நடைபெறும்.
- தூர பிரதேசத்தில் இருந்து வருபவர்களுக்கும் தங்குமிட வசதியுடன் 3 வேளை உணவும் பெண்களுக்கு விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

கூடுதலான சம்பளம் பெற்றுக் கொள்வதற்காக வாய்ப்பு. மடிக்கணினியை பயன்படுத்தி வீட்டிலிருந்தவாறே உலக நாடுகளுக்கு விமானச் சீட்டுகளை வழங்குவதற்கான தகமையை பெற்றுக் கொண்டு கூடிய இலாபம் அடைந்து கொள்ளவும் முடியும்.

தமிழ் ஆசிரியர்களால் தமிழ் விளக்கத்துடன் பாடங்கள் நடைபெறும்

**HOTLINE**
**0711 60 10 40**

ஆங்கில அறிவுக்கான வகுப்பும் கணினி வகுப்புகளும் நடைபெறும்.

Missed Call செய்து விபரங்களை அறியவும்
S.M.S செய்து Email மூலமாக விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும்
தூர பிரதேசத்தினர் வங்கியில் ரூபா 1000/- செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளவும்
**0776 34 69 13**

**Now @ Dehiwala**
**0712 357 412**
**0779 939 010**

| Bambalapitiya | Nugegoda | Dematagoda | Kandy | Kandy |
|---|---|---|---|---|
| 0776 34 69 13 | 0774 32 31 31 | 0774 83 34 44 | 0779 32 31 31 | 0711 60 10 50 |
| 0114 42 24 33 | 0114 38 44 64 | 0114 38 44 62 | 0775 49 29 44 | 0775 49 29 44 |

LONDON COLLEGE

**LONDON College of Higher Studies (Pvt) Ltd**
No. 195, 1st Floor, Galle Road, Bambalapitiya, Colombo -04.
(Near the Visaka Road)

# மத்திய கிழக்கு நாடுகளில் 100,000/- மேல் சம்பாதிக்க வழிகாட்டும்...!

ISO Certified 9001&2008

Professional Study in

# MEP Draftsman
## (MEP Engineering Services)


**3 மாத கற்கைநெறியுடன் நீங்களும் பொறியியல் துறையினுள் நுழைந்திட ...**

**தகைமை: GCE (O/L)** | Duration: **3 Month**

## இப்பொழுது கண்டி யில் புதிய BATCH க்கான பதிவுகள் ஆரம்பம்

**New Class Start in Kandy** | **19/10/2013**

**44th Batch "MEP Draftsman"** பயிற்சி நெறியைக் கற்கும் மாணவர்களில் சிலர்...



**கண்டி** | **அக்கரைப்பற்று** | **மருதமுனை** | **ஓட்டமாவடி**

**077 94 230 64 | www.oceas.lk | 075 94 230 64**

**OCEAS**
OXFORD COLLEGE OF ENGINEERING APPLIED STUDIES


பயிற்சி நெறிகள்
அனைத்தும் ஒரு நிறுவனத்தில்
இணைந்து வேலை செய்வது போன்றே
**(Project Work & Document work)**
பயிற்சிகள் வழங்கப்படுவது
எமது நிறுவனத்தில் மட்டுமே...!

edexcel : UK Assured

இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

# CAD & BS
Computer Aided Design & Building Studies

## With * MEP
Mechanical Electrical & plumbing



ரூபா 75,000.00
(குறைந்த பட்சம்)
மாத வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களை உத்தரவாதப்பத்தும் 6 மாத தீவிர பாடநெறி.

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. இந்த தொழில் வாய்ப்புகள் அதிகூடிய வருமானத்தையும் (குறைந்த பற்சம் மாதமொன்றுக்கு ரூபா 75,000.00) உறுதிப்படுத்துகின்றன.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவன-மான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட் தகைமைகளையும், 4 சான்றிதழ்களையும் பெற்றுத் தருகிறது. அத்தோடு Edexcel-UK நிறுவனம் நேரடியாக வழங்கும் மற்றுமொரு சான்றுதழும் கிடைக்கிறது.

CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் சுயமாகவே உடனடித் தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளும் அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant போன்ற தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

**Duration: 6 Month**

**பாடநெறி முடிவில் 4 சான்றிதழ்கள்**

* Professional Diploma in CAD
  (Awarded By Edexcel UK & BCAS Campus)
* Certificate in Building Studies

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

**Corporate Office :**
32, Dharmarama Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 011 2501145
Email: info@bcas.lk

| | |
|---|---|
| **Kandy Campus** | 344, Peradeniya Road, Kandy, Sri Lanka. T: 081 2224731 |
| **Batti Campus** | 294, 1/4, Trinco Road, Batticaloa, Sri Lanka. T: 065 2228451 |
| **Wayamba Campus** | 103, Dambulla Road, Kurunegala, Sri Lanka. T: 037 2233339 |
| **Jaffna Campus** | 16, Point Pedro Road, Jaffna, Sri Lanka. T: 021 2219910 |
| **Qatar Centre** | PO Box: 35406, No: 36, Al-Ain St, Hilal, Doha-Qatar. T: +974 44366572 |

Registered as a News Paper in GPO/QD/27/NEWS/2013 Printed by AJ Prints (Pvt) Ltd 44, Station Road, Dehiwala

ISO 9001 : 2008 CERTIFIED IT INSTITUTE

TURNKEY IT CAMPUS Join the No.1

இலங்கையின் மிகப்பெரிய
ஹாட்வெயார் நெட்வர்க் பயிற்சி நிலையம்

IT துறையில் அதிகூடிய ஊதியம் பெறக்கூடிய NETWORK துறையில் இன்றே இணையுங்கள்.

Great offer for CISCO & Microsoft exam takers at TURNKEY Test Center

PEARSON VUE-Authorised Test Centre

PROMETRIC TEST CENTER

Do You Want to be an Internationally Recognized Network Engineer!!

DACHNP
Diploma in Advanced Certified Hardware & Network Professional
Six Recognized Certifications

CISCO CCNA — Cisco Certified Network Associate (CCNA 640 - 802)

Microsoft Certified Technology Specialist — Microsoft Certified Technology Specialist (MCTS 70 - 680)

DLNA — Diploma in Linux Network Administration with Security

DWNA — Diploma in Windows Network Administration

DHEN — Diploma in Hardware Engineering with Networking

MCITP
Server Administrator
Enterprise Administrator

MCSA
Server 2012

MCSE
Server 2012

CCNA
Voice, Security

CCNP
IP Routing, IP Switch
IP Tshoot

CCIE
Routing & Swithing written Exam
350 - 001

CompTIA A+ N+

CEH

TURNKEY
ஏன் தெரிவு செய்ய வேண்டும்?

- இலங்கையில் Hardware & Network துறையில் அதிகமான வல்லுனர்களை உருவாக்கிய முதன்மை நிறுவனம்.
- Authorized Test Centre for CISCO & Microsoft Examinations
- வெளிநாட்டு தூதரகங்களிலும் தொழில் வாய்ப்பு வழங்குனர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
- CISCO, Microsoft & Network பாடநெறிகளுக்கு உயரதரமிக்க பரிசோதனைக் கூடம்.
- மறைமுகக் கட்டணங்கள் இல்லை.

Our Accreditations
Microsoft Partner
ISO 9001: 2008 CERTIFIED COMPANY

10% SPECIAL DISCOUNT on any Microsoft Online Exams for TURNKEY students

TURNKEY IT TRAINING
Dedicated for Professional Coaching
2 581581

COLOMBO
562/15B, Lower Bagathale Road,
(Road adjoining Premadasa Jewellers-Sea side) Colombo 03.
Tel: 2 581581, 2 595336, 077 2286988

KANDY
504/1, Peradeniya Road, Kandy. Tel: 081 2205678, 077 5077456

Email: info@turnkey.lk

HOTLINE
0772 286 988
Now register for any course online @
www.turnkey.lk